# புதிய வன்னி

PUTHIYA WANNI

மாத இதழ்

ஜீலை-2014 | இதழ்-03 | விலை-50/-



## மீளத்துடிக்கும் முல்லைக் கடற்றொழிலாளர்கள்



## திருமுறிகண்டி- எல்லாமே மாறிவிட்டது...



## மன்னார்

காலத்தின் வழியே ஒரு பயணம்



மோடி + ரமபோஷ + பாராளுமன்றத் தெரிவுக்குழு

## = இலங்கையின் எதிர்காலம்?



கிளிநொச்சி
SINGER Plus
ஒரே குடையின் கீழ்
அனைத்து பொருட்களையும்
மாதந்த தவணை
கட்டண முறையில்
பெற்றுக்கொள்ள முடியும்.
வன்னி
வாழ்வின்
தோழன்
சிங்கர் பிளஸ்
கரடிபோக்குச் சந்தி, கிளிநொச்சி.
T.P: 02156755677,0212280199




## பத்தி

சொல்லியே தீரவேணும் - 13

தமிழும் தமிழாகுதலும் நானும் - 28

## கட்டுரை

மன்னார் - காலத்தின் வழியே ஒரு பயணம் -03

தமிழ் மக்களிடம் பிரதேச வாதங்களைத் தூண்டுவது யார்? - 34

மோடி + ரமபோஷ - பாராளுமன்றத் தெரிவுக்குழு = இலங்கைத் தமிழரின் எதிர்காலம்? -22

எங்கள் மண்ணும் இனிய நாட்களும் -10

வன்னியை வாட்டும் உளவியல் -15

இன்றைய கிளிநொச்சியும், முழுமைத்தர முகாமைத்துவ சிந்தனையும் -18

வன்னிக்கான இழுவிசை இயங்கு மூலங்களை விரைவாக்க வேண்டும். -40

தெருமுறிகண்டி திருமுறிகண்டியாக மட்டும் மாறவில்லை! -30

## சிறுகதை

பொன்னகரம் - 37

## பொதுவானவை

பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம் 2 - 43

மீளத்துடிக்கும் முல்லை கடற்றொழிலாளர்கள் -16

யுத்தத்திற்குப் பின்னரான வன்னிப் படைப்புகளின் இயங்குநிலை -45

நடக்கும் ஆனால் நடக்காது - 09

நேர்முகத் தேர்வுக்கு செல்கின்றீர்களா? -47

புதூர் நாகதம்பிரான் -26

புதிய வன்னி
PUTHIYA WANNI
மாத இதழ்

இதழ் 03 ஜூன் 2014



**ஆசிரியர் குழு**

மு.தமிழ்ச்செல்வன்
சோபிதா தேவராஜா

**வடிவமைப்பு**

தீபன்
றெஜினா
சதீஸ்

**விளம்பரம்**

சிவா

**அச்சுப்பதிப்பு**

மாருதி அச்சகம்,
யாழ்ப்பாணம்



**முகவரி**

புதிய வன்னி,
இல- 24,
06 ஆம் ஒழுங்கை,
குமரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.

**இணையத்தளம் :**
www.newwanni.com
**மின்னஞ்சல் :**
puthiyawanni@gmail.com


## வன்னி வளப்படுத்தப்பட வேண்டும்

வன்னிப் பிரதேசம் தொடர்ச்சியாக இரட்டைப் பாதிப்புக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறது.

ஒன்று, போரினாலும் போருக்குப் பிந்திய நிலைமைகளினாலும் ஏற்பட்ட ஏற்படுகின்ற பாதிப்பு.

அடுத்தது, தமிழ் அரசியல் தரப்பினராலும் நிர்வாக அதிகாரிகளினாலும் யாழ் மையவாதத்தினாலும் ஏற்படுகின்ற பாதிப்பு.

இந்த இரட்டைப் பாதிப்பைச் சந்தித்தபடியே வன்னி மக்கள் வாழ வேண்டியுள்ளது.

போருக்கு முந்திய வன்னி தொடர்பாடல், கல்வி, பொருளாதாரம், தொழிற்றுறை போன்றவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது.

போர் வளர்ச்சியடைந்து வன்னிப் பிரதேசத்திலேயே மையங் கொண்டது. இதனால் இருபது ஆண்டுகளுக்கும் (1987 : 2009) மேலாக வன்னிப் பிராந்தியத்திலேயே உக்கிரமான போர் நடந்தது. 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை விட்டு விடுதலைப்புலிகள் வன்னிக்கு வந்த பின் 1990 வரையும் பிறகு, 1995 இல் யாழ்ப்பாணத்தை விட்டுப் புலிகள் வெளியேறியது தொடக்கம் 2009 வரையிலும் வன்னியில் உக்கிர யுத்தம் நடந்தது.

இதனால் வன்னி பேரழிவைச் சந்தித்தது. இந்தச் சந்திப்பினால் வன்னிப் பிரதேசத்தின் அடையாளங்களும் வன்னி மக்களின் வாழ்க்கையும் சிதைந்தது.

இந்த நிலையானது, ஏற்கனவே பின்தங்கிய நிலையில் இருந்த வன்னியையும் வன்னி மக்களையும் மேலும் பின்தள்ளியது.

இப்பொழுது இந்தப் பின்னிலையிலிருந்தும் இரட்டைப் பாதிப்பிலிருந்தும் வன்னி மீள வேண்டியுள்ளது. வன்னியை மீட்டெடுக்க வேண்டியிருக்கிறது.

வெளித்தோற்றத்தில் வன்னி வளமான : வீரம் செறிந்த பிரதேசம் என்று சொல்லப்பட்டாலும் வன்னியை நோக்கி, படித்தவர்களோ, பத்திரிகையாளர்களோ, அரசியல்வாதிகளோ, நிர்வாக அதிகாரிகளோ வருவதில்லை. நிதி ஒதுக்கீடுகளும் முறையாகக் கிடைப்பதில்லை.

இதையெல்லாம் புரிந்து கொண்டு வன்னியை மீள்நிலைப்படுத்தி, இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கு நிகராக : சரிநிகர் சமானமாக வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

இந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவும் உங்கள் கடமைக்கான சந்தர்ப்பமாகவும் கொள்க.

# மன்னார்
# காலத்தின் வழியே ஒரு பயணம்

கருணாகரன்

மன்னாரைப் பற்றி அறிந்தவர்கள் முத்துக்குளிப்பதைப் பற்றியும் அறிந்திருப்பார்கள். ஒரு காலத்தில் மன்னார்க் கடலில் முத்துக் குளிப்பது பெரிய தொழில். அரிப்புத்துறை தொடக்கம் தலைமன்னார்க் கடல் வரையில் இந்த முத்துக்குளியல் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது முத்துக்குளியல் நின்று அட்டைக்குளியல் நடக்கிறது. காலம் மாறி, கோலமும் மாறிவிட்டது. மன்னாரைப் பற்றி அறிந்த வர்களுக்கு வேறு சில விசயங்களும் தெரிந்திருக்கும். அங்கே நிற்கும் கழுதைகளைப் பற்றித் தெரிந்திரு ப்பார்கள். பெருக்க மரங்களைப் பற்றி அறிந்திருப்பார்கள். அங்கேயிருக்கும் கோட்டையைப் பற்றி அறிந்திருப் பார்கள். இப்படிப் பல விசயங்கள் மன்னாரில் உண்டு.

மன்னார்க் கோட்டை 1560 இல் போர்த்துக்கீஸரால் கட்டப்பட்டது. பிறகு இந்தக் கோட்டையை 1658 இல் ஒல்லாந்தர்கள் புனரமைத்துக் கட்டினார்கள். அதற்குப்பிறகு 1815 இல் பிரிட்டிஸார் கைப்பற்றித் தங்க ளுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். 1948 இக்குப் பிறகு இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் வந்தது. இப்படியெல்லாம் பல கைகளுக்கு மாறி, இன்னும் நகரில் காட்சியாகவும், சாட்சியாகவும் இருக்கிறது. இந்தக் கோட்டையில் இருந்தே மன்னாரின் நிர்வாக பரிபாலனம் ஒரு காலம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிறகொரு காலம் இது படைமுகாம். இடையில் சுற்றுலா விடுதி. இப்படியெல்லாம் உருமாறிய கோட்டை கடலால் சூழப்பட்ட இந்தச் சின்னஞ்சிறு தீவின் வாசலில், வரவேற்கும் மையத்தைப்போல உள்ளது.

ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து 13 ஆம் நூற்றாண்டுவரையும் மன் னார் ரஜரட்டை ராஜ்ஜியத்துடன் இணைந்திருந்ததாகச் சொல்லப்ப டுகிறது. அப்பொழுதான் இந்தியா விலிருந்து வந்த சங்கமித்தையும் மகிந்த தேரரும் மன்னாரின் வழியாக மிகிந்தலைக்குச் சென்றனர். பிறகு மன்னார் யாழ்ப்பாண ராஜ்ஜியத்தின் கீழ் வந்திருக்கிறது.

இடையில் ஒரு காலம் மன்னா ரும் தனி ராஜ்ஜியப் பிரிவாக இருந் திருக்கிறது. அப்பொழுது மன்னாரின் தொல்நகர் மாந்தை. மாந்தை யில்தான் ஒரு காலம் புகழுடைய துறைமுகம் இருந்தது. இதே மாந்தையிலேயே திருக்கேதீஸ்வரம் சிவன் கோவிலும் உண்டு. கி.பி ஆறாம் நூற்றாண்டிலேயே தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம். அப்பரும் சம்மந்தரும் திருக்கேதீஸ் வரம் சிவனைப் போற்றித் தேவாரம் பாடியுள்ளார்கள். அந்த அளவுக்கு அந்த நாட்களிலேயே புகழ்பெற்றுத் திருக்கேதீஸ்வரம் சிவன்கோயில் இருந்திருக்கிறது. அன்று மாந் தைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடை யில் வணிகத் தொடர்புகள் அதிகம் நிலவியிருக்கின்றன. இதனால் மாந்தையைப் பற்றிய அறிமுகம் தமிழ்நாட்டில் இருந்தது. தமிழ் நாட்டிலிருந்து மாந்தைக்கு வந்து சென்றவர்கள் மூலமாகவே இங்கே இந்தக் கோயிலும் உருவாகியிருக்கிறது என்று சொல் கின்றன வரலாற்று ஆய்வுகள். அப்படி





<u>கி.பி</u> ஆறாம் நூற்றாண்டிலேயே தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம். அப்பரும் சம்மந்தரும் திருக்கேதீஸ் வரம் சிவனைப் போற்றித் தேவாரம் பாடியுள்ளார்கள். அந்த அளவுக்கு அந்த நாட்களிலேயே புகழ்பெற்று திருக்கேதீஸ்வரம் சிவன்கோயில் இருந்திருக்கிறது. அன்று மாந்தைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் வணிகத் தொடர்புகள் அதிகம் நிலவியிருக்கின்றன. இதனால் மாந்தையைப்பற்றிய அறிமுகம் தமிழ்நாட்டில் இருந்தது. தமிழ் நாட்டிலிருந்து மாந்தைக்கு வந்து சென்றவர்கள் மூலமாகவே இங்கே இந்தக் கோயிலும் உருவாகியிருக்கிறது என்று சொல்கின்றன வரலாற்று ஆய்வுகள்.

வந்தவர்கள் வழியாகவே திருக்கேதீஸ்வரத்தின் மகிமை அங்கே (தமிழ்நாட்டில்) பரவியிருக்கிறது. இதை வைத்தே அப்பரும் சம்மந்தரும் பதிகம் பாடியிருக்கிறார்கள். தாமிரபரணிக்கரை என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு மன்னாரும் மாந்தையும் சிறப்பாக இருந்திருக்கிறது.

அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்ற மாதிரி, இந்த மாந்தை, திருக்கேதீஸ்வரம் போன்ற புகழுடைய பகுதிகளில் - பாடல் பெற்ற தலத்தில் ஒரு காலம் படை முகாம் இருந்தது. சோதனைக் குட்பட்டே சிவனிடம் போகவேண்டி யிருந்தது. இப்போது கூட மன்னா ரில் மிகப்பெரிய படைமுகாமாக தள்ளாடி இராணுவ முகாம் இருக் கிறது. இது மன்னார்த்தீவுக்குப் போகும் கடல் வழிப்பாதையின் தொடக்கத்தில் பிரமாண்டமாக விரிந்து கொழுத்த முகாம்.

ஒரு காலம் மன்னாரில் கிறிஸ் தவ சமயத்துக்கு மாறியிருந்த 800 பொதுமக்களை யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன் வெட்டிக் கொன்றதாகச் சொல்லப்படுகிறது. அது வழிபாட்டுக்காலமொன்றில் நடந்த படுகொலை என்கிறார்கள். கிறிஸ் தவ சமயத்துக்கு மதம் மாறியவர்கள் போர்த்துக்கீஸருக்கு ஆதரவாக யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை வீழ்த்துவதற்கு ஒத்துழைத்தார்கள் என்ற கோபத்தில்தான் சங்கிலியன் இந்தப் படுகொலையைச் செய்தான்.

இந்தப் படுகொலையில் தப்பிப் பிழைத்தவர்கள் மன்னாரிலிருந்து தப்பியோடி காட்டில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அப்படித் தஞ்சமடைந்தவர்கள், தங்களுடன் கூடவே தாங்கள் வழிபட்ட மாதா வையும் தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். அப்படிக் கொண்டு போன மாதாவை அவர்கள் தாங்கள் இருந்த காட்டில் ஒரு மரத்தின் கீழே மறைத்து வைத்து வழிபட்டார்கள். போர்த்துக்கீஸரிடமிருந்து மன்னாரைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் கத்தோலிக்கர்களை வேட்டையாடிய நாளில் மாதா மாந்தையிலிருந்து மடுக்காட்டுக்கு தலை மறைவானாள்




என்று இன்னொரு தகவலும் சொல்லப்படுகிறது. அவர்களைப் பொறுத்தவரையில் தங்களைக் காத்தவர் அந்த மாதாவே என்று நம்பினார்கள். கருணையின் வடிவமாக, அன்பின் ஊற்றாக, நம்பிக்கையின் சின்னமாக, ஆதரவளித்த தாயாக, வழி காட்டியாக எல்லா நிலையிலும் மாதாவை உணர்ந்தனர். சங்கிலி மன்னனுக்கு அஞ்சித் தப்பியோடிய அகதிகளின் நாயகியாக, அகதிகளை அரவணைத்த தாயாக மாதா விளங்கினாள். அதுவே பின்னாளில் மடுமாதா என்றானது. பிறகு எல்லாக் காலங்களிலும் ஆதரவற்றுத் தவித்தோரின் தாயாக, அகதியாகச் செல்வோரின் அடைக்கலமாதாவாக மடுமாதா இருந்திருக்கிறாள் இருந்து வருகிறாள்.

மடு மாதா பெரும் புகழ்மிக்க வள். எப்போதும் பாவப்பட்ட மக்களுக்கும் பரிதவிக்கும் மக்களுக்கும் ஆறுதலாகவும் நிழலாகவும் அவளி ருக்கிறாள். அவளிடம் சரணடை வோரின் ஆறுதலுக்காக அவள் தன்னை வருத்துகிறாள். மக்க ளுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக அவளுடைய சந்நிதானத்தில் குண்டுகள் வீழ்ந்திருக்கின்றன. அவளுடைய மடியிலேயே மனி தர்கள், அவளுடைய புதல்வர்கள் குருதிதெறிக்க மாண்டு போனார்கள். அவள் குருதி சிந்தினாள். இரத்தக்கண்ணீர் வடிந்தது.

இன்னல் எல்லாம்பட்ட மடுமாதா இலங்கையின் புகழுடைய மகிமை பெற்றவள். திருக்கேதீஸ்வரத்தைப் போல மாதாவும் பலராலும் அறி யப்பட்ட - இனமத பேதங்களில்லாத ஒரு தெய்வம். யாத்தீரிகர்களை அதிகமாகக் கொண்ட தேவாலயம்.

போர்த்துக்கீஸர் மன்னாரைக் கைப்பற்றிய பிறகு யாழ்ப்பாணத் துக்கான யுத்தத்தை மன்னாரிலி ருந்தே நடத்த முனைந்திருக் கிறார்கள். அந்தப் போர் பல நூற் றுக்கணக்கான சனங்களைப் பலிகொண்டதாக வரலாற்றுக் குறிப்பு கள் சொல்கின்றன. அப்படியே யாழ்ப்பாண ராஜ்ஜியமும் வீழ்ச்சிய டைந்தது. அதைப்போலவே, வன்னியில் 2007 - 2009 விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையில் நடந்த போரும் மன்னாரிலிருந்தே வடக்கு நோக்கி நகர்ந்தது. இறுதியில் வன்னியை அது தோற்கடித்தது.வரலாற்றிலிருந்து எதுவும் தப்புவதில்லை என்பார்கள். வரலாறும் எதையும் விட்டு வைப்ப தும் இல்லை.

மன்னாரில்தான் பறங்கியாறும் அருவி ஆறும் கடலில் சேருகின்றன.

> **ஒரு காலம் மன்னாரில் கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியிருந்த 800 பொதுமக்களை யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன் வெட்டிக் கொன்றதாகச் சொல்லப்படுகிறது. அது வழிபாட்டுக்காலமொன்றில் நடந்த படுகொலை என்கிறார்கள். இந்தப் படுகொலையில் தப்பிப் பிழைத்தவர்கள் மன்னாரிலிருந்து தப்பியோடி காட்டில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அப்படித் தஞ்சமடைந்தவர்கள், தங்களுடன் கூடவே தாங்கள் வழிபட்ட மாதாவையும் தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். அப்படிக் கொண்டு போன மாதாவை அவர்கள் தாங்கள் இருந்த காட்டில் ஒரு மரத்தின் கீழே மறைத்து வைத்து வழிபட்டார்கள்.**



**மன்னாரின் விசேட அம்சம் மன்னாரில் இருக்கின்ற பெருக்கமரங்கள். ஏறக்குறைய ஆயிரத்துக்கும் கூடுதலான ஆண்டுகள் வயதுடைய அடி பெருத்த மரங்களே இந்தப் பெருக்க மரங்கள். குதிரைகளுக்கான உணவுக்காக அப்பொழுது இந்த மரங்களை அரேபியர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அரேபியர்கள் குதிரைகளுக்காகப் பெருக்க மரங்களை நட்டிருந்தாலும் மன்னாரில் அதிகமாக நிற்பது கழுதைகளே. கழுதைகளைக் கண்டால் மன்னாரின் நினைப்பே வரும் என்ற அளவுக்கு ஆயிரமாயிரம் கழுதைகள் வெளியெங்கும் நிறைந்திருக்கின்றன.**

இந்த ஆறுகளின் கழிமுகத்தில்தான் மாந்தை ராஜ்ஜியம் இருந்தது. பிறகு பறங்கியாற்றை வழிமறித்தே கட்டுக்கரைக் குளம் கட்டப்பட்டது. கட்டுக்கரைக்குளமே இப்பொழுது மன்னாரின் பெரிய நீர்ச் சுனையாக உள்ளது. இந்தக்குளத்திலிருந்தே முருங்கன், சேந்தாங்குளம், வட்டக்கண்டல், அடம்பன் என சுற்றயல் முழுதும் வயல்கள் விளைகின்றன. ஆனாலும் இந்த ஆறுகள் பாய்ந்தாலென்ன கடலில் சேர்ந்தாலென்ன, கட்டுக்கரைக் குளத்தில் நிரம்பினாலென்ன, மன்னாரின் பெரும்பகுதியும் வரண்ட பெரும் வெளியே.

கோடையில் வரட்சியில் தவிக்கும் மன்னார். அனல் பறக்கும் பெரு வெளிகளில் எப்போதும் எதுவும் தீப்பிடித்து விடுமோ என்று அஞ்சும் படியாக அத்தனை வெக்கை வீசும். குடிப்பதற்கே நீர்ப்பஞ்சம். சிறு பற்றைகள் தீ மூளக்காத்திருக்கும். காய்ந்த புற்கள் எரியத்துடிக்கும். மன்னார்த்தீவோ கடலாலும் சதுப்பு நிலங்களாலும் சூழப்பட்ட சிறுமனை.

பல பகுதிகளில் மாரியில் தண்ணீர் நிற்கும், பரவை நிலம். கோடையில் அனல் பறக்கும் வெளி. அதிலும் மன்னார்த்தீவுக்கு வெளியே மாந்தைக்கு வடக்கே நீளும் பிரதேசம் வரண்ட பகுதியே. இலுப்பைக்கடவை, ஆட்காட்டி வெளி, பாப்பாமோட்டை போன்ற இடங்கள் பெரிய தரவைவெளிகள். இந்த வெளியான வரண்ட பகுதிக ளில் சனங்கள் எப்படியோ உயி ரைப்பிடித்துக்கொண்டு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். எப்படி இங்கே தலைமுறை தலைமுறையாக வாழ்கின்றார்கள் என்பது புரியாத ஆச்சரியம். இன்னும் அவர்கள் அப்படித்தான் வாழ்கிறார்கள். இந்தப் புதிர் முடிச்சை அவிழ்க்காமலே.

இலங்கைத்தீவில் மழை வீழ்ச்சி குறைந்த இரண்டு மாவட்டங்களில் ஒன்று மன்னார். ஆனாலும் அங்கே ஒரு தீராத அதிசயமாய்த்தான் இந் தக் கட்டுக்கரைக் குளம் இருக்கிறது. இதிலும் ஆச்சரியமான சங்கதி என்னவென்றால், வடபகுதியி லேயே அதிக வீதமான விளைச்சல் உடைய பிரதேசம் மன்னாரிலுள்ள முருங்கன், உயிலங்குளம் பகுதிகள்தான். அங்கே ஏக்கருக்கு நாற்பது மூடைக்கு மேலாக நெல் அடிக்குமாம். வரட்சிப் பிரதேசம் என்றாலும் விளைச்சலுக்கு உச்சமான மண்.

முருங்கன் மண்ணில் இருந்துதான் மண்ணாலான பானை, சட்டிகளைச் செய்வார்கள். இதற்காக அங்கேயிருந்து மண்ணை எடுத்துச் செல்வார்கள். காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை இயங்கிய போது முருங்கனில் இருந்தே சீமெந்துக்கான மண் எடுக்கப்பட்டது. இதற்காகத் தனியான ஒரு புகையிரதப் பாதையையே மண் எடுக்கும் பகுதிக்கு அமைத்திருந்தனர்.

அந்த நாட்களில் யாராவது உழவு மெஸின் எடுப்பதன்றால் முருங்கனுக்கோ உயிலங்குளத்துக்கோதான் போவார்கள். அங்கே அப்படி அதிகமாக ட்ரக்ரர்கள் நின்றன. ஒரு போகம் உழவும் சூட டிப்பும் முடிந்த கையோடு ட்ரக்ரரை விற்று விடுவார்கள். அதனால் கொஞ்சம் மலிவாக அதை வாங்கலாம். எங்கள் ஊரில் யாராவது ட்ரக்ரர் எடுக்க வேண்டுமென்றால், அவர்களை அழைத்துக்கொண்டு ட்றைவர் கணேசண்ணையோ, விண்ணன் மகேந்திரமோ உயிலங்குளத்துக்கு அல்லது முருங்கனுக்குப் போவார்கள். இதனால் ஊரில் உயிலங்குளம் சேத்தடி முடிந்த பிறகு வாங்கி வந்த பல ட்ரக்ரர்கள் நின்றன.



அந்த உயிலங்குளத்தில்தான் பிறகொருபோது படையினரின் முன்னணிக் காவல் அரண்களிருந் தன. நெல் விளைந்த வயல்களில் தாராளமாகக் கண்ணி வெடியும் மிதிவெடியும் விளைந்து போயிருந்தன.

இந்தப் பகுதியில்தான் இராணுவப் பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மிடையிலான பொதுமக்களுக்கான போக்குவரத்துப் பாதையும் இருந்தது. ஆனால் இந்தப் பாதையையும் பிறகு மூடினார்கள். பிறகு கொஞ்சக்காலம் உயிலங்குளத்தின் வழியாக ஒரு பாதையைத் திறந்தார்கள். அதுவும் பிறகு மூடப்பட்டது. அங்கே கண்காணிப்புக் கடமையிலிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஒரு நாள் சொல்லாமற் கொள்ளாமல் விலக்கப்பட்டது. பிறகு பாதை நிரந்தரமாகவே மூடப்பட்டது.

இதற்கு முதல் ஜெயசிக்குறு' என்ற படை நட வடிக்கைக் காலத்தில் பள்ளமடு ஊடாக போக்கு வரத்து நடந்தது. ஆனால் அது குடிதண்ணீருக்கே வழியில்லாத பிரதேசம். ஆனாலும் அதனூடாகவே போக்குவரத்துக்கான பாதையை திறக்க முடியும் என்று படைத்தரப்பு சொன்னதால் அந்தப் பாதையினாலேயே சனங்கள் போய் வந்தார்கள். பள்ளமடுப் பாதையில் ஒரு நாளைக்கு இவ்வளவு பேர்தான் போய்வரலாம் என்ற வரையறை வேறு. இதெல்லாவற்றையும் கடந்துதான் சனங்களின் பயணம் நடந்தது.

இதைவிட மன்னாருக்கு அப்போதும் இப்போதும் சில வரலாற்று ரீதியான முக்கியத்துவமும் சிறப்பும் தொடரிருப்பும் உண்டு. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பிரிப்பில் மன்னார்க்குடாவே முக்கியமானது. இதனால், மன்னார்க்கடல் எப்போதும் இந்தியத் தொடர்புகளோடு சம்மந்தப்பட்டது. இதிகாச காலந்தொட்டு இன்றுவரையில் பலவிதமாகப் பேசப்பட்டும் புழுங்கப்பட்டும் வருகிறது. மன்னாரின் ஊடாகவே ராமசேனை இலங்கைக்குள் புகுந்ததாகச் சொல்கிறது ராமாயணம்.

இப்பொழுது இந்தியாவில் சூடாக இருக்கிற ராமர் பாலப்பிரச்சினை இதற்கொரு உதாரணம். மன்னார் வளைகுடாவில் எண்ணெய்வளம் இருப்பதாக வேறு சொல்கிறார்கள். அப்படி எண்ணெய்வளம் இருந்தால் மன்னாரின் பெறுமதியும் அதனுடைய கேந்திர முக்கியத்துவமும் இன்னும் கூடிவிடும். இதை மையமாக வைத்தோ என்னவோ, மன்னார் வளைகுடாவினூடா கவே கப்பற் போக்குவரத்துக்கான பாதையை நிர்மாணிக்க இந்தியா முயல்கிறது. எதற்கும் இந்தப் பாலத்தை நிர்மாணிக்க வேண்டுமாயின் கடலை அகழ வேண்டும்.

அதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருந்தன. ஆனால் ராமர் பாலத்தை இப்பொழுது அரசியல் தேவைகளுக்காக யாரும் சிதைக்கக்கூடாது என்று நீதிமன்றம் வரை போய்விட்டார்கள் ராமாபிமானிகள். கருணாநிதிக்கெதிரான அரசியற் போட்டியில் ஜெயலலிதா வும் இந்த சேது கால்வாய்த்திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டிவருகிறார். எல்லாமே அரசியல் மயப்பட்டு விட்டது.

இதைவிடவும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பயணிகள் கப்பற் போக்குவரத்து ஒரு காலம் நன்றாக நடந்தது. இந்தக் கப்பலின் வழியாக ஐந்து மணி நேரத்தில் தமிழ்நாட்டில் இறங்கலாம். இதனால் மன்னார் ஒரு காலம் பெரும் சனப்புழக்கத் தைக் கொண்டிருந்தது. தலை மன்னார் - ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து நடந்தபோது தலை மன்னார் வரையில் ரெயினும் ஓடியது. யுத்தம் தலையெடுத்து வளர்ந்த பிறகு இந்தப் பயணம் தடைப்பட்டு கப்பலோட்டமும் நின்றுபோயிற்று.

இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்று சொல்லி மலையகத் தமிழரை சிறிமா -சாஸ்திரி உடன்பாட்டின் மூலமாக தலை மன்னாரின் ஊடாகவே இலங்கை யிலிருந்து நாடு கடத்தினார்கள். அப்படிப் பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட தமிழர்கள் அழுத கண்ணீர் இன்னும் மன்னார்க் கடலில் காயாமலே உள்ளது. அந்த விசும்பல் ஒலியைச் செவியுள்ளவர்கள் என்றும் கேட்கமுடியும்.

இவை தவிர, மன்னார் அரிப்பில் அல்லி ராணிக்கோட்டை என்ற ஒரு சிதைந்த பழைய கட்டிடம் இருக்கிறது. இந்தக் கோட்டையில் இருந்து கொண்டே அல்லி என்ற பெண்ணொருத்தி அரசாட்சியை நடத்தியதாக ஒரு கதையுண்டு. ஆனால், இந்தக் கதையைப் பலவிதமாகச் சொல்வர். அல்லி தமிழ்நாட்டிலிருந்து வந்த பெண் என்பர் சிலர். அருச்சுனனின் மனைவியான அல்லி, அருச்சுனனுடன் கோவித்துக் கொண்டு வந்து இங்கே இருந்ததாக இன்னொருசாரார் சொல்வர். அந்தப் பெண்ணே இங்கே இருந்தார் என்றும் அவர்கள் நம்புகின்றனர். எப்படியோ, இந்த அல்லிராணிக் கோட்டை இப்பொழுது பெருமளவுக்கும் சிதைந்து விட்டது. இதைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் குறிப்பிட்ட அளவில் நடக்கவில்லை. கடலோரத்தில் இருப்பதால் அலைகள் வந்து இந்தக் கோட்டையை அடித்தும் இடித்தும் செல்கின்றன.

அதைவிட இன்னொரு விசேச அம்சம் மன்னாரில் இருக்கின்ற பெருக்கமரங்கள்.ஏறக்குறைய ஆயிரத்துக்கும் கூடுதலான ஆண்டுகள் வயதுடைய அடி பெருத்த மரங்களே இந்தப் பெருக்க மரங்கள். குதிரைகளுக்கான உணவுக்காக அப்பொழுது இந்த மரங்களை அரேபியர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அரேபியர்கள் குதிரைகளுக்காகப் பெருக்கமரங்களை நட்டிருந்தாலும் மன்னாரில் அதிகமாக நிற்பது கழுதைகளே. கழுதைகளைக் கண்டால் மன்னாரின் நினைப்பே வரும் என்ற அளவுக்கு ஆயிரமாயிரம் கழுதைகள் வெளியெங்கும் நிறைந்திருக்கின்றன.

இப்பொழுது மன்னாரின் ஊடாக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு மிடையிலான தரைவழிப்பாதையை அமைத்து வருகிறார்கள். இந்தப் பாதை சிலாவத்துறை ஊடாகப் புத்தளத்துக்குச்சென்று சேர்கிறது. இந்தப் பாதை இயங்கத் தொடங்கினால், மன்னார் சனங்களாலும் தொடர்புகளாலும் வர்த்தகத்தினாலும் செழிக்கும். யாழ்ப்பாணம் - கொழும்புப் பயணத்தில் இரண்டு மணி நேரமாவது மிச்சப்படும்.

மன்னார் வளைகுடாவினூடாகவே கப்பற் போக்குவரத்துக்கான பாதையை நிர்மாணிக்க இந்தியா முயல்கிறது.எதற்கும் இந்தப் பாலத்தை நிர்மாணிக்க வேண்டுமாயின் கடலை அகழ வேண்டும். அதற்கான பணிகளும் ஆரம்பிக் கப்பட்டு நடந்து கொண்டிருந்தன. ஆனால் ராமர் பாலத்தை இப்பொழுது அரசியல் தேவைகளுக்காக யாரும் சிதைக்கக்கூடாது என்று நீதிமன்றம் வரை போய்விட்டார்கள் ராமாபிமானிகள். கருணாநிதிக் கெதிரான அரசியற் போட்டியில் ஜெயலலிதாவும் இந்த சேது கால்வாய்த்திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டிவருகிறார். எல்லாமே அரசியல் மயப்பட்டு விட்டது.





# நடக்கும் ஆனால் நடக்காது

பெருமாள் விநாயகம்

வன்னிக்கு விவசாய அமைச்சு வருவது நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு நிரந்தர ஏற்பாடு நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

வடக்கு மாகாண சபையில் மக்களுக்கான சேவைகள் நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

தமிழ் பகுதிகளில் இருந்து படை விலகல் நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

மீனவர் பிரச்சினைக்கு நிரந்த தீர்வுக்கான ஏற்பாடுகள் நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

அடுத்த தேர்தலில் ஆட்சி மாற்றம் நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

இலங்கையில் அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் நடக்குமா?
**நடக்கும் ஆனால் நடக்காது**

கொக்குத்தொடுவாயில்
சாமித்தம்பியண்ணையிட்டை நிண்டன
வெள்ளை நீளக்கொம்பன் மாடுகள் ஆயிரத்தைநூறு.

பின்னேரம் காத்தான்வெளிக்குள்ளால
அத்தனை மாடுகளும் அணிவகுத்து வரும்
பள்ளிப் பிள்ளைகளின் ஊர்வலத்தைப்போல.

அத்தனை மாடுகளுக்குப் பின்னாலும்
சாமித்தம்பியண்ணையும் கோவிந்தசாமியும் வருவினம்
அவர்களுக்கு வழிகாட்டும் அந்த மாடுகள்.

❖❖❖

# எங்கள் மண்ணும் இனிய நாட்களும்



துணுக்காய் செல்லமுத்து அக்கா வீட்டில்
மான்குட்டிகள் இரண்டு நின்றன
வெடிகாரச் செல்லத்தம்பி கொண்டுவந்து கொடுத்த
குட்டிகள் சுடுதண்ணீர் பருக்கி வளர்த்தா
செல்லமுத்து அக்கா.

சுடுதண்ணி குடிச்சுப் பழகின மான் கன்றுகள்
காடுதிரும்பாது எண்டது நம்பிக்கை.

வேட்டை நாய்களும் காட்டு மான்களும் கூடி வாழ்ந்தன
செல்லமுத்து அக்காவின் வீட்டிலும் தோட்டத்திலும்.



வெளிவாசல் பாலன்

❖❖❖

பூ நகரி, கௌதாரிமுனையில்
அருளம்பலத்திடம் நிண்டன
எழுபது வெள்ளாடுகள்.

இத்தனை ஆடுகளும் கினியாப் பத்தைகளில்
எதைத் தின்னுகின்றன என்று தெரியாது.

ஆனால், எதையோ கடித்து,
எப்படியோ வயிற்றை நிரப்பி விடும்.

அருளம்பலம் மட்டும்
எதையெதையெல்லாமோ செய்தும்
தன்னை நிரப்ப முடியாமல்
தவித்துக்கொண்டிருக்கிறார்.


வெள்ளாடு மேஞ்சதைப்போல ஒண்டிலயும் நிலையா
நிக்காதையுங்கோ.. என்று சினக்கிறாள் சிவகாமி
அக்கா
(அருளம்பலத்தின் மனைவி).

❖❖❖



மயில் முட்டைகளைத் தேடி எடுப்பான் சிவலை ராசன்.
மைனாக் குஞ்சுகளைத் தேடிப் பிடிப்பான் ஆசையற்றை குஞ்சன்
தென்னம் பொந்துகளில் கிளிபிடித்து வளர்ந்தான் துரையரின் தேவன்
உடும்பு வேட்டையும் நாங்களும் காடுமாகத்திரிந்தான் அப்பன்
விராலடிக்கப்போய் பாம்படிச்சான் பத்தன்.
எல்லாரும் இயக்கத்துக்குப்போய் எப்பிடியோ ஆனார்கள்...


❖❖❖



உடுப்புக்குளத்தில் ஆறுமுகராசாவுக்கு
அறுபத்தியேழு எருமைகள் நிண்டன.
வெள்ளாப்போடு எழும்பி பாலெடுத்துப்
பானையில் நிரப்புவார் ஆறுமுகராசா....

அவ்வளவு பாலையும் தயிராக்கும் கலையரசி
சிவக்கொழுந்து மாமிதான்
எருமைப்பாலையும் குடிக்கலாமா? எண்டு கேட்டாள்
யாழ்ப்பாணத்தில இருந்து வற்றாப்பளைப் பொங்கலுக்கு
வந்திருந்த இராசகுலம் மாமாவின்ரை மகள் நிர்மலா.
பொங்கல் முடிந்து ஊருக்குத் திரும்பும்போது
எருமைத்தயிரை எடுத்துப்போனார்கள்.

❖❖❖




தேவிபுரத்தில் ஆச்சி தோட்டத்தில்
இருநூற்றைம்பது செம்மறி மந்தைக்கு
மேலிருந்தது.

அத்தனை மந்தையையும் பிள்ளையாகப்
பார்த்தார் சின்னத்துரை.
சின்னத்துரையைச் செம்மறித்துரை என்று
யாரும் சொன்னாலும்
வம்புக்குப்போனதில்லை அவர்
மெல்லச் சிரிப்பார் அதைக்கேட்டு.


அத்தனை பாசம் அவருக்கு
அந்த மந்தைகளில்.
அத்தனை செம்மறியும் போரிலதான் அழிஞ்சது.
அதைத் தாங்கேலாமல் தானும் போய்ச்சேர்ந்தார்
சின்னத்துரை.

❖❖❖



தமிழ்க்கவி

# சொல்லியே தீரணும்...



எடியேய் மாலா ! இஞ்ச வாடி. ஏன்ரி உந்த வெயில்வழிய திரியிறாய். கொம்மா எங்கடி போட்டா? பிஞ்சே தலையில ஒரு சொட்டு எண்ணயில்ல. அந்தப் பெட்டை கெந்தின காலைக்கீழ விட்டுட்டு என்ன ஒரு மாதிரிப் பாக்குது.


ஆர் அம்மா வோ ?...நாங்களும் அவவத்தான் கோயிலுக்குப் போகவெண்டு பாத்துக்கொண்டு நிக்கிறம். அவாவுக்கு எந்த நாளும் லோன் லோன் லோன்தான்.

லோனாமோ எங்கயடி

எங்கயோ புதுசா வந்த வங்கியிலயாம். பாவம் தேப்பன்காறன் ஊரெல்லாங் கடன் பட்டிட்டு கட்ட மாட்டாம ஆருக்கும் தெரியாம வெளி நாட்டுக்குப் போட்டான். உழைக்க பெண்சாதி பிள்ளையள் இஞ்ச இப்ப அவன் அனுப்பிறகாசில அரைவாசியக் கடன் காறருக்குப் பிரிச்சுப்போட்டு மீதத்திலதான் தாங்கள் திண்டு குடிச்சு குடும்பத்தை கொண்டு நடத்திறாள்.ம். சொன்னா நம்ப மாட்டியள் பெரிய மளிகைக் கடை. வேற சில்லறைக்கடையளுக்கும் சாமான் போடுறவன். வீட்டிலயும் ரீவீ,பிறிச்சு, வாசிங்மெசின்அது இதெண்டு இல்லாத சாமான் இல்ல .இவன்பாவி வேற கடையளுக்கும் சாமான் கொண்டே பறிக்கிறவன். என்ன வாடகை வாகனந்தான். காசு பணம் பிழங்கறவனக்கண்டா இஞ்சூரங் காறன், லீசிங்காறன் வங்கிக்காறனெண்டு மணந்து பிடிச்சிருவாங்களே. இவன லீசிங்காறன், அருட்டியிருக்கிறான். வாடகை வாகனத்துக்கு குடுக்கிற காசுகாணும் லீசிங்கட்ட சொந்த வாக னமெண்டா அலைச்சலில்லத்தானே. பெடியனும் பாத்தான் ஒரு லைசெஞ்சும் இருக்கு தனி வாகனத்தில போறதிலயும் ஒரு இது இருக்குத்தானே பின்ன வங்கிக்க கிடந்த சேமிப்புகள எடுத்து லீசிங்கில ஒரு வாகனம் வாங்கிப்போட்டான்..

பின்ன மற்றமற்ற கடைகாறரும் லீசிங்கில வாகனம் வாங்கிப்போட்டாங்கள். இப்ப தொழில் போட்டியில வாகனத்துக்கு உழைப்பு படுத்திட்டுது. காசு கட்டவெண்டு வீட்டில கிடந்த நகை நட்டுகள் வங்கிப் பெட்டகத்துக்குப் போட்டுது. காணாததுக்கு நண்பர், உறவினரெண்டு எம்பிட்ட எம்பிட்டபடி ஒரு லச்சமோ அரை லச்சமோ வாங்கியும் கட்டி முடியேல்ல. கடையில கடன்காறர் சாமானள்ளத் துவங்கிச்சினம். கடையும் படுத்துது. இப்ப லீசிங்காறனும் வாகனத்தை தூக்கிப் போடுவான் எண்ட நிலமை வாகனத்தை ஒழிச்சுப்போட்டு வெளியால பாஞ்சிட்டான்.

நீங்கள் உதைச் சொல்லுறியள் கணேசனக் காணேல்லயாம். பெண்டில்காறி பிள்ளையளோட தேடித்திரியிறாள். கடன்காறர் பொலிசுக்குப் போட்டாங்கள். அவள் என்ன செய்யிறது பிள்ளையளையுங் கொண்டு போய் புரியனத் தேடித்தாங்கோ எண்டு. கண்ணீர் விட்டிருக்கிறாள். அவங்கள் என்ன செய்யிறது. ம் கிடந்த ரிவீயள் பிறிச்சுகள் கடைச்சாமானுகளெண்டு கடன்காறர் கொண்டு போட்டாங்கள். இப்ப கொஞ்ச நாளா அவளையுங் காணன் .



ஊரூராச் சுத்தி லீசிங்கில சாமான் விக்கிறவன்பாடு குருச்சந்திர யோகந்தான். என்ன எத்தின சனம் வாகனங்கள வாங்கி லச்சக்கணக்கில காசைக்கட்டி கடைசியில கொஞ்சம் இழுபட்டிச்சோ வாகனமும் புடுங்கிக் கொண்டு போயிருவான். காசும் திருப்பித்தரமாட்டான்.

மீள்குடியேற்றம் நடந்த கையோட வன்னிக்க றைவர் வேலை தெரிஞ்சவனெல்லாம் வாகனங் கொண்டோடித்திரிஞ்சான். ரைக்ரருகள், ஆட்டோக்கள், வசுவுகள் என்னென்ன வாகனமில்ல வேலையும் அப்பிடித்தான் வீட்டுத்திட்டங்களோட...மணலேத்த கல்லேத்த சீமெந்தேத்த. மரந்தடியேத்த வெண்டு சும்மா சணல் பறந்த வேலை. றீங்க் றீங்கெண்டு சந்திவழிய சுழட்டித்தான் திரிஞ்சாங்கள். பாத்தா இந்த வாகனங்கள் பெண்டு பிள்ளையளின்ர நகை நட்டுகளையும் சில காணித்துண்டுகளையும் திண்டிட்டு கை கழுவிப்போட்டு போயிற்றுதுகள். இப்ப பலரை ஒட்டாண்டி ஆக்கி ஊரைவிட்டே கலைச்சும் போட்டுது.

கடனை வாங்கி கோழி வளத்தவள் விக்கமாட்டாம அலையிறாள் கொழும்புப் பக்கத்துக் கோழி எங்கட ஊர் கொட்டலுகளுக்கு லொறியில வருது.

கடனை வாங்கி தளபாடக்கடைவச்சவன் காக்கா கலைக்கிறான். பலாங்கொடையால வாற தளபாடங்கள் கடைவைக்க வந்து கட்டுக் காசுக்கு விலைப்படுது. சந்தியில வாகனத்த நிப்பாட்டிப்போட்டு காவுதடியில



கட்டிலயும் மேசையையும் போட்டு கடவைக்க கொண்டாறான் கட்டுக்காசுக்கும் தாறான் கட்டத்தவறினா திருப்பி எடுத்துப் போடுவான் எண்டது வேற விசயம் .

உங்க சந்தியில கராச்சு வைச்சிருக்கிற சக்தியின்ர கதையக் கேளுங்கோவன். வங்கியில கடனும் வாங்கி மனிசியின்ர சீதனக்காசிலயுமா உந்தக் கராச்சக் கட்டினன் எங்க வேலையில்லயே. முந்தநாள் ஒரு வாகனம் கொழும்புப் பக்கமிருந்து வந்து. உதில ஏதோ பழுது போல நிண்டிட்டுது. சரி பத்துநூறு ரூவா வேலை கிடைக்குமெண்டு நான் பாத்துக்கொண்டு நிக்கிறன். அவன் போனெடுத்துக் கதைச்சுப்போட்டு வாகனத்துக்க படுத்திட்டான். அட சொல்லுறியள் மதவாச்சியால மெக்கானிக் வந்து விடியமுதல் திருத்திக் குடுத்திட்டுப் போட்டானே பிறகு ங அவங்கள் நாலாபக்கத்தாலும் எங்கள குத்திறாங்கள் .பிறகெங்க நாங்க சீவிக்கிறது. ச்சைக்.

இப்ப பெண்டுகளோ ஆம்பிளையளோ செய்யிற தொழிலப்பற்றி எந்தக்கவலையுமில்லாம லோ(ன்) லோ(ன்)லோ(ன்) ண்டுதான் அலையினம். இதையெடுத்து அதைக்கட்டுறது அதை எடுத்து இதைக்கட்டுறது.

சமுத்தியில லோன் வாங்கி பிரசாவும், ரேகாவும் ஸ்கூட்டி வாங்கியிருக்கினமாம். இப்ப மகளிர் சங்கமெண்டு ஒரு அமைப்பு பெண்டுகளுக்கு ரெண்டு லச்சம் கடன் குடுக்கப்போகினமாம். இந்த வங்கி கடன்குடுக்கிது அந்த வங்கி குடுக்கிது எண்டு எல்லாத்தையும் எடுக்கிறவைக்கு கடன் கட்டாதவைக்கு வழக்கு சிறை எல்லாம் இருக்கெண்டு தெரியுமோ? ஊரை விட்டோட வேண்டி வருமெண்டு தெரியுமோ?

இப்ப வன்னிச்சனம் குரல்வளை பொறுக்கக் கடனிலதான் இருக்குதுகள். உழைக்க உழைக்க வட்டிகட்ட சரியாயிருக்கும்.

வசந்தகாலம் வந்திட்டுது ஊரெல்லாம் மரங்கள் பூவும் காயுமா பழவாசமுமாக் கிடக்குது. எங்களுக்கு வசந்த காலம் வாற தெப்ப? வட்டிக்கடன் முடியிறதெப்ப?



**சென்ற தொடரில் குடும்ப கட்ட மைப்பும் உறவுமுறை விரிசல்கள் பற்றியும் ஆராய்ந்திருந்தோம். இத்தொடரில் வன்னிப் பகுதியில் காணப்படுகின்ற உளசமூகப் பிரச்சினைகளில் மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்றான வறுமை நிலை (Poperty) பற்றி ஆராய்ந்துள்ளோம்.**

# வன்னியை வாட்டி வதைக்கும் உள சமூகப் பிரச்சினைகள்

## வறுமை Poperty

மா.ஜெயராசா
(உளநல மருத்துவர், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.)



குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் மிகச்சிறிய தொழிற்பாட்டு அலகாக கருதப்படுகின்றது. அக்குடும்பத்தை நிர்வகிப்பதற்கு போதுமான அளவு பணத்தினை குடும்பத் தலைவன் அல்லது குடும்ப அங்கத்தவர்களால் ஈட்டிக் கொள்ள முடியாமையும் சில வேளைகளில் போதுமான வருமானத்தை ஈட்டிக் கொண்ட போதிலும் அதனை சரியான முறையில் முகாமைத்துவம் செய்ய முடியாமையாலும் வறுமை நிலை தோன்றுகின்றது.

இக்குடும்பங்களிடையே நிலவுகின்ற வறுமை நிலையானது குடும்ப அங்கத்தவாகளிறகு இடையே உள்ள உறவு முறைகளில் விரிசல்களை ஏற்படுத்துவதோடு குடும்ப நிலையில் தொழிற்பாட்டையும் பாதிக்கின்றது. இதன் காரணமாக பிள்ளைகளிடையே மற்றும் தங்கி வாழ்வோருடைய அடிப்படை வசதிகள், உடல் உள ஆரோக்கியம் போன்றவற்றை பாதிப்படைய செய்கின்றது. இதன் காரணமாக குடும்பங்கள் சிதைவடைய கூடிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. இருந்த போதிலும் இக்குடும்ப சிதைவுகளின் வெளிப்பாடுகள் பல்வேறுபட்ட சமூக பிரச்சினைகளாக உருவெடுக்கின்றது. இவ்வெளிப்பாடுகள் காலம் கடந்து பிரதிபலிக்கப்படுவதால் இவற்றை கையாள்பவர்கள் தங்களுடைய தலையீட்டை தொடங்குவதற்கு ஏதுவான காரணிகள் குறைந்து காணப்படுகின்றது. இதனால் இவற்றை நிவர்த்தி செய்ய காணப்படுகின்ற வலையமைப்புக்கள் (SocialNetwork) வினைத்திறனாக தொழிற்பட முடியாத நிலை சமூகத்தில் காணப்படுகின்றது. எனவே, பிரச்சினைகளை ஆரம்பநிலையில் இனம் கண்டு கொள்ளுதலும் அதற்கு அந்த செயற்பாடுகளை ஆரம்பத்திலேயே முடக்கி விடுதலும் அல்லது தொடங்கி விடுதலும் இன்றியமையாதது. உதாரணமாக ஒரு குடும்ப பெண் கணவனால் தாக்கப்பட்டு சிறு காயங்களோடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற போது அதனுடைய மருத்துவ சிகிச்சைக்கு வழங்கப்படுகின்ற முக்கியத்துவத்திலும் பார்க்க அவர் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. பிரச்சினைகளை முளையிலே கிள்ளி எறிகின்ற செயற்பாடுகளை சமூக மட்ட வலையமைப்புகள் ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் குறித்த பெண் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் படிப்படியாக அதிகரித்து முன்னரிலும் பார்க்க பாரிய ஒரு பிரச்சினைகளோடு மேற்பரப்பை வந்தடைவார். இது சில வேளைகளில் குறித்த பெண்ணின் உயிரை மாய்க்கின்ற காரணிகளாக அமையலாம். (தற்கொலை,கொலை) எனவே, இப்பிரச்சினைகளுக்கு, ஆரம்ப நிலை தலையீடு அத்தியவசியமாகின்றது. ஆனால் இந்நிலையானது துரதிஸ்ட வசமாக அனைத்து தரப்பினராலும் புறக்கணிக்கப்படுகின்றது.

### வறுமை நிலைக்கு ஏதுவான காரணிகள்

போருக்கு பின்னரான சூழ்நிலையில் வறுமைக்கு ஏதுவான காரணிகள் அமைந்துள்ள போதிலும் சில முக்கியமான காரணிகளை நாம் இங்கு குறிப்பிடலாம்.

01.போதிய வேலை வாய்ப்பின்மை

02.தொழில் அனுபவம் சிறப்புத் தேர்ச்சி இன்மையால் வாய்ப்பை இழத்தல்

03.தங்கி வாழும் மனநிலை அதிகரித்தமையால் தொழில் வாய்ப்பை இழத்தல்

04.அதீத களைப்பு சோர்வு காரணமாக போட்டி போட்டு வேலைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையும் அவற்றை தொடர்ந்து செய்ய முடியாமை.

# மீளத்துடிக்கும் முல்லை கடற்றொழிலாளர்கள்

குமுதன்

**நீண்டகால யுத்தத்தின் பாதிப்புக்களை வடக்கில் எதிர் கொண்ட முதன்மைப் பிரதேசம் முல்லைத்தீவு. 2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சுனாமிப் பேரலைத் தாக் கத்தால் முற்றாக அழிந்துபோன நகரம். இந்த அனர்த்தங்களின் போதெல்லாம் பாதிப்புக்களை அதிகமாக சந்தித்தவர்கள் கடற்றொழிலாளர்களே. மேற்கே சுண்டிக்குளம் - நல்லதண்ணி தொடுவாய் தொடக்கம் கிழக்கே கொக்கிளாய் வரையான பகுதி முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழிலாளர்களின் தொழில் பிரதேசம். இந்த கடல் பகுதிக் குள்தான் சுமார் 5,500 வரையான குடும்பங்களின் வாழ்க்கை அடங்கிக்கிடக்கிறது. இந்தக் கடலில் ஏற்படுகின்ற இயற்கை மாற்றங்கள், மாறுபட்ட கடற் றொழில் செயற்பாடுகள், வெளி யிடத்து மீனவர்களின் வருகை என்பன இந்த மக்களின் வாழ்வைக் கேள்விக் குறியாக்கி விடுகிறது. இதனால், இவர்கள் எப்போதும் விழிப்பாகவே இருக்க வேண்டி யுள்ளது. இதை இந்தமக்கள் உணராமலும் இல்லை. ஆனாலும், அவ்வப்போது இவர்கள் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுவதாக சில ஆதாரங்களைப் பதிவு செய்துள்ளனர்.**

**முற்றாகச் சிதைந்துபோன இவர் களின் வாழ்வும், பொருளாதாரமும் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பது இவர்களுடைய பெரு முயற்சி. எனினும், மீள்குடி யேற்றத்திற்கு பின் இவர்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கப் பெறவில்லை என ஏங்குகிறார்கள் இந்த மக்கள். இதேவேளை, தொழில்சார் செயற்பாடுகளில் பெரும் சவால்களையும் எதிர் கொள்கின்றனர் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் குறிப்பிடுகின்றது.**


**இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கள்ளப்பாடு கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்க செயலாளர் இளயதம்பி தனிகாசலம் இவ்வாறு கூறுகின்றார்.**

## மே மாத இதழின் தொடர்ச்சி...

**வேறு எவ்வகையில் முல்லைத் தீவுப் பகுதி கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.**

2004 ஆம் ஆண்டு வந்த சுனாமித் தாக்கத்துக்குப் பிறகு முல்லைத்தீவில காலநிலை மாறிப்போச்சுது. தைமாதம் பிடிக்கிறதுக்கு ஏற்றமாதிரி வளந்திருக்கும் இறால் இப்பங்குனி சித்திரையிலயும் வளர்ச்சியடையிரதில்ல. அதேபோல, பங்குனி, சித்திரையில வீசவேண்டிய சோலக காத்து மே மாசத்திலதான் வீசத் தொடங்கியிருக்குது.அதுவும் எத்தனை நாளுக்கு வீசும் எண்டு தெரியாது.

கடந்த முப்பது வருட காலத்தில நாங்கள் ஆழிக்கு (ஆழ்கடலுக்கு) போய் தொழில் செய்தது கிடையாது. ஆனா, இப்ப அதற்கான வாய்ப்பு கிடைச்சிருக்கு ஆனாலும், ஆழ்கடலுக்கு போய் தொழில் செய்யக்கூடிய வசதிகள் எங்களிட்ட இல்ல. கரைமறையும் வரையான தூரத்துக்கு போய் தொழில் செய்தா கரைக்கு திரும்பிறதுக்கு வழிகாட்டக் கூடிய கொம்பாசோ ஜி பி எஸ் சோ எங்களிட்ட இல்ல. ஆனால், ஏனைய மாவட்ட தொழிலாளர்கள் அதைப் பாவிக்கினம். இப்படி குறைந்தளவு தொழில் உபகரணங்களை மட்டும் கொண்டு நாங்கள் தொழில் செய்து வாறம்.



இந்த நிலையில் தென்பகுதி மீனவர் கள் எங்கட பகுதியில தொழில் செய்ய வராதாலையும் எங்கட தொழில் பாதிக்கப் படுது. கடந்த பல வருசங்களுக்கு முதல் நாயாத்துப் பகுதியில நாட்டின் தென்பகுதி ஆக்களும் தொழில் செய்திருக்கினம். அவையின்ர உறவுகள இப்ப நாங்கள் இனம் கண்டு ஐம்பது பேருக்கு அனு மதி குடுத்தம். பிறகு அது 75 ஆக மாற்றப் பட்டது. ஆனால், அதை நாங்கள் பெரிதாக எடுக்கயில்ல. இப்ப 200 வரையான படகுகள் வந்து அங்க தொழில் செய்யுது.

தொடர்ந்து தொழில் இல்லாம காத்துக் கிடந்த எங்கட தொழிலாளர்களுக்கு இப்ப காத்து மாறியதால் தொழில் செய்ய சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதிலயும் பாதிப்பு ஏற்படுத்தத்தான் அவையல் இஞ்ச வரியினம். ஆனா எங்கட பக்கம் தொழில் இல்லாத காலத்தில நாங்கள் எப்பவும் தென்பகுதிக்கு போறதில்ல.

இப்பிடியான செயல்பாடுகளுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேணும். நாங்கள் தொடர்ந்தும் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்கு அறிவிச்சுக் கொண்டிருக்கிறம். ஆனா, அவையலும் நடவடிக்கை எடுக்கினம் இல்ல. நீண்ட கால யுத்தத்தால பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்களுக்கு ஆறுதலா இருக்க வேண்டிய தென்பகுதி மக்கள் எங்கட வாழ் வாதாரத்தை பறிக்க முயற்சிப்பது வேதனையா இருக்குது.



கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமித் தாக்கத்திலயும் எங்கட தொழிலாளர்கள் பாரிய அழிவை சந்திச்சு தொழில் உபகரணங்கள் கூட இல்லாமல் நிர்க்கதியா நிண்டுச்சினம். அந்தக் காலத்தில சமாசம்தான் மிகக் கடுமையா முயற்சி செய்து அழிவடைந்த அத்தனை பேருக்கும் தொழில் உபகரணங்களை பெற்றுக்கொடுத்தது. அதுபோல, இப்பயும் முயற்சி செய்திருக்க வேணும். ஆனா, மீள்குடியேறி 4 வருசத்துக்குப் பிறகும் மீள்குடியேறிய மக்கள் எண்டு யாரிட்டையும் உதவி கேக்க முடியாது. உதவிகள் வழங்கின காலம் கடந்திட்டுது. இருந்தாலும், மீள்குடியேறி இண்டைக்கு வரைக்கும் வாழ்வாதாரத்த கட்டியெழுப்பேலாமல் இருக்கிற எங்கட தொழிலாளருக்கு உதவ யாரெண்டாலும் முன்வர வேணும் எண்டுதான் நாங்கள் கேக்கிறம் என முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்தார்.

**முல்லை கடற்றொழிலாளர்களின் இன்றைய நிலை பற்றி கள்ளப்பாடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க செயலாளர் இளயதம்பி தணிகாசலம் இவ்வாறு தெரிவித்தார்.**

வெளிமாவட்ட மீனவர்கள் எங்கட பகுதிக்குள்ள வந்து வெளிச்சம் போட்டு மீன்பிடிக்கினம். அதோட தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளையும் பாவிக்கினம். இதைக் கட்டுப்படுத்தாமல் போனால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் வேற தொழிலைத்தான் தேட வேணும். இல்லை என்டா எங்கட குடும்பங்கள் பட்டினிச் சாவைத்தான் சந்திக்க வேண்டிவரும். ஆனால் இதயாருமே உணராததுதான் எங்களுக்கு மிகப் பெரிய கவலை. அதோடு தொழிலுக்காக பட்ட கடனும் வட்டியும் கூட இப்ப எங்கள துரத்த தொடங்கிட்டுது. இதுக்கெல்லாம் எப்பதான் தீர்வு கிடைக்குமோ தெரியாது! இது எங்கட விதியா? சதியா எண்டு தெரியேல.

**மீள்குடியேற்றத்திற்கு பிறகு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லையா?**

கடந்தகால யுத்தத்திற்கு பிறகு நாங்கள் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய போது எங்கட தொழில் ஒண்டுமே இருக்கயில்ல. (தொழில் உபகரணங்கள்) கடலுக்குள்ள இறங்கிறதுக்குகூட ஒரு வசதியும் இல்ல. மக்களுக்கு வாழ்வாதார உதவிகள செய்யிறதுக்கெண்டு பல நிறுவனங்களும், அரசாங்கமும் தயாரா இருந்தாலும் கடல் தொழிலுக்காக உதவி செய்யிறதுக்கு அவயல் முன்வரேல. ஏனெண்டா எங்களுக்கு ஒரு தொழில வாங்கிறதுக்கு அஞ்சு லச்சத்துக்கு மேல செலவாகும். எனவே எங்களுக்கான உதவிகள் கிடைப்பதும் மிக மிகக் குறைவு.

**தொழில் சுமூகமாக நடக்கிறதா? எதிர்பார்த்த வருமானம் கிடைக்கின்றதா?**

ஆரம்பத்தில ஓரளவு வருமானம் கிடைச்சிது. அதோட கடனைத் திருப்பிக் கட்டலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனால் 2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளிமாவட்ட கடற்றொழிலாளர்கள் எங்கட கடல் பகுதிக்குள்ள வந்து தொழில் செய்ய ஆரம்பிச்சவ அதுவும் சும்மா இல்ல. எங்கட பகுதியில தடை செய்யப்பட்ட வலைகளையும் தடை செய்யப்பட்டிருக்கிற தொழில் முறைகளையும் அவையல் பயன்படுத்துகினம். எங்கட கரையில இருந்து சுமார் 10 கடல் மைல்களுக்கு அவையல் வெளிச்சத்தை (லைட்) வைக்கினம். மீன்கள் வெளிச்சத்தை நோக்கித்தான் போகும் கரையை நோக்கி எந்த மீனும் வரவாய்ப்பிருக்காது. அப்பிடிபோற மீன்கள அவயல் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பாவிச்சு பிடிக்கினம். சுருக்கு வலையில் சின்ன மீன், பெரிய மீன் எண்டில்லாம எல்லா வகை மீன்களும் வலித்து அள்ளப்படும். அப்படி அள்ளப்படுற மீனில பெரிய மீனுகள மட்டும் எடுத்துக்கொண்டு சின்ன மீன்கள கடலிலேயே போட்டுட்டு போகினம் அதால சின்ன மீன்கள் கடல்ல செத்து மிதக்குது.

அதுமட்டுமில்ல இரவு பகலாக தொடர்ந்து வெளிமாவட்ட மீனவர்கள் வந்து தொழில் செய்யினம். ஆனால் எங்கட தொழிலாளர்கள் கடலுக்குள்ள இறங்கிறதுக்கு கூட ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஒவ்வொரு பகுதி எண்டு பிரித்து வைச்சிருக்கிறம். ஒரு சங்கத்தின்ர பகுதிக்குள்ள மற்ற சங்கத்திற்குரிய தொழிலாளர்கள் போகமாட்டினம்.

**இந்தப் பகுதியில் எவ்வாறான கடல் தொழில் முறைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது?**

இந்தப் பகுதியில வெளிச்சம் போட்டு மீன் பிடித்தல், சுருக்கு வலைகளை பாவித்தல், அட்டை பிடித்தல் போன்ற இந்த மூன்று தொழிலையும் செய்யிறதுக்கும் முற்றாக தடை விதிக்கப்பட்டிருக்குது. இந்தப் பகுதிகளில் தூண்டில் வலை, சூடை வலை, அறக்கொட்டியான் வலை, வலிச்சல் தொழில் அதோட கரை வலையும் செய்யத்தான் அனுமதியிருக்குது. நாளாந்தம் ஏழாயிரத்தி ஐநூறு ரூபாவுக்கும் மேல் எரிபொருளுக்காக செலவு செய்யிறம். ஆனால் வருமானம் மூவாயிரம் வரைதான் கிடைக்கும். சில நாட்களில அதுவும் கிடைக்காது.

அதால வெளிமாவட்ட தொழிலாளர்களின்ர செயற்பாட்டைத் தடை செய்ய வேணும் எண்டு சமாசத்துக்கூடாக அரசாங்க அதிபருக்கு தெரிவித்திருக்கிறம். அதுமட்டுமில்ல கடல்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறம். ஆனால் இண்டைக்கு வரைக்கும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட இல்ல.

இது மட்டுமில்ல இந்தப் பகுதியில இப்ப கடல் அட்டையும் பிடிக்கினம். அதுவும் தடை செய்யப்பட்ட தொழில் தான். நாங்கள் எவ்வளவு வருமானம் குறைவாக கிடைச்சாலும் இப்படியான தடை செய்யப்பட்ட தொழில்களையோ கடல் வளத்தை அழிக்கிற நடவடிக்கைகளிலையோ ஈடுபடுறதில்லை. ஆனா வெளியாள இருந்து வாறவதான் அத செய்யினம். இப்படி பாதிக்கப்பட்ட எல்லாத் தொழிலாளருக்கும் மீன் கிடைக்க வேணும் என்ற நோக்கத்தில நாங்கள் கட்டுப்பாட்டோட தொழில் செய்து கொண்டுவாறம். ஆனால், வெளியாள இருந்து வாறவ எங்கள் வளத்தை சூறையாடிக் கொண்டு போயினம் எண்டுதான் சொல்ல வேணும் என அவர் மன வேதனையுடன் குறிப்பிட்டார். அழிவின் பின் [illegible] கடற்றொழிலாளர்களை மீள [illegible] அவர்களை வாழ [illegible] மன்றாடுகின்றனர் முல்லைக் [illegible]றொழிலாளர்கள்.






# இன்றைய கிளிநொச்சியும்

## முழுமைத்தர முகாமைத்துவ சிந்தனையும்

:சடாயு:

கிளிநொச்சியில் பல நல்லவை நிறைவேறியவண்ணமும் சில மக்களுக்கு ஒவ்வாதனவும் அடிப்படை பொருளாதாரம் தகர்க்கப்பட்ட மக்கள் அனாதரவான நிலையும் இந்த மண்ணில் வாழமுடியாம எனத் தின்மும் ஏங்கும் ஒரு சாராரும் கலை, கலாசாரம் சிதைகிறதே என பரிதவிக்கும் சிலருமாக இந்த மண்ணின் இலக்கியம் வாழ்விக்கப்படவில்லையே என ஏங்குபவர்களும் இளைஞர், யுவதிகள் தறிகெட்டுப் போகிறார்களே, விதவைகள் வாழ வழியற்றுத் தவிக்கிறார்களே கல்வி வளமுள்ள மாணவர்கள் பொருளாதார நெருக்கடியால் கல்வியை கைவிட்டுத் தவிக்கிறார்களே, தன்னிடம் வல்லமை இருந்தும் தண்ணீர் இல்லாததால் விவசாயம் செய்ய முடியாது சி எஸ் டி க்கு வேலைக்குப் போகவேண்டியுள்ளதே உற்பத்தி, செய்தும் சந்தை வாய்ப்பு இல்லையே

கடையில் நிறைய சாமான் போட்டும் வியாபாரம் நடக்கவில்லையோ, சனங்களிடம் திரவப்பணமில்லையே, லீசிங்குக்கு பிணைவைக்கப்போய் நான் வங்கியல் கடன் பெறமுடியாதாக்கிவிடப்பட்டிருக்கிறேனே, வீட்டில் இருந்ததையும் கொள்ளையர் கொள்ளையடித்து விட்டார்களே, கொள்ளையர் பிடிபட்டும் பொலிஸ் அக்கறையாக பொருட்களை மீட்டுத்தரவில்லையே, பிரச்சினை சொல்லப்போய் தொலைபேசியில் தொடர்பெடுத்து பொலிஸ் வீட்டுக்கு பெண்களிடம் அடிக்கடிவரத் தொடங்கு கிறார்களே, யுத்தகாலத்தில் தன் பிள்ளைகளை சாதுரியமாகக் காப்பாறி வெளியேறியவர் இன்று வந்து தேசப்பற்றுக்கதைத்து நான் இந்த யுத்தத்தில்சண்டையிட்டு மரனித்த என் ரெண்டு பிள்ளைகளுக்காக வேனும் எனக்கு இந்த அயலவன் கருணைகாட்டாது நானும் மனை வியும் பட்டினிகிடக்கிறோமே

என்னுடைய காணியை இன்னொருத்தர் ஆக்கிரமிக்கிறாரே, அதற்கு நிர்வாகப் பிரிவுகளில் உள்ளவர்கள் அனுசரணை செய்கிறார்களே. 30 வருடங்கள் இந்தப் பகுதிக்கே வராதவர் இப்ப வந்து எனது உழைப்பால் காய்க்கும் தென்னங் காணியை தன்னுடையது என்கிறாரே, வெளிநாட்டுக்குப்போக வசதியில்லாதபோது எங்கட அப்பா




**இசுருபாயவுக்குச் சென்றுதான் கல்வி அமைச்சை அடையலாம். மருதனார் மடத்துக்குச் சென்றுதான் மாகாணக் கல்வித் திணைக்களத்தை அடையலாம். 45 நிமிடங்கள் பிறிதொரு பஸ்ஸில் பயணித்துத்தான் கல்வி அமைச்சை அடையலாம். மாகாணக் கல்வித் திணைக்களத்தை அடையலாம். எ 9 வீதியிலிருந்து 800 மீற்றர் தொலைவிலுள்ள பிரஸ்தாப வளாகம் சில அதிகாரிகளால் தூரம். போக்குவரவுக்குகஸ்டம் என விமர்சிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. நகராக்கச்சிந்தனையில்லாமையே இதற்குக்காரணம் கொழும்பிலுள்ள நிறுவனங்களை அடைய நீண்டு பயணிக்கவே வேண்டும் என்பது இங்கு பதிவு செய்யப்படவேண்டும்.**

உதவி செய்து வெளி நாட்டுக்குப் போய் பணத்தை திருப்பித்தாறம் என்ற சித்தப்பாவின் பையன் நன்றி மறந்து எங்களை நட்டாற்றில்விட்டு நிம்மதியாய் இருக்கிறானே.

பிள்ளை யூனிவாசிற்றியால வந்திட்டாள் ஒரு கலியாணம் செய்ய எம்மிடம் சொத்தோ பணமோ இல்லையே வசதியில்லை என்பதுக்காக கெட்டிக்காறியான அக்காவின் மகளுக்காக பேஸ்புக்கில் போட்டு மாதாமாதம் பிள்ளையைப் படிப்பிக்க உதவிபெற்றுக் கொடுக்கப்போய் ப்ளசர் மோட்டார் சைக்கிள் வேண்டி ஓடுறாளே சித்திக்காறி.

என இன்னும் பல சொல்லமுடியாத சோகங்களுக்குள் இந்தப் பிரதேச மக்கள் வாழ்கிறார்கள். பீனிக்ஸ் பறவையாக முளைகொள்ளும் நெருக்கடியை முகங் கொடுக்கிறார்கள். இவர்கள் மனங்கள் குழம்பிய கிளிநொச்சியாகவே காணப்படுகின்றது.

2009 களில் மீள்குடியேறியபோதிருந்த வீடுகள் இராணுவத்தால் வேணுமென்றே அழிக்கப்பட்டவையும் கண்கூடு. எனினும் இன்று மக்களுக்கான வீடு கணிசமாக கட்டப்பட்டுள்ளது. ஆனால் மனைகள் அழிந்தேவருகின்றன.

வீடு வேறு மனை வேறு. வீடு என்பது கட்டடம். மனை என்பது அந்த வீட்டில் வாழும் குடும்பத்தையும் சேர்த்தே. அங்கு நிம்மதி உழைப்பு குதூகலம் புதிய முயற்சிகள் ஒற்றுமை நிலவ வேண்டும்.

குடும்பங்களில் குதூகலம் கெட்டுவிட்டது. பொருளாதாரம் சிதைந்து விரிசலும் வெப்பியாரமும் அதிகரித்துள்ளது.

வீட்டில் குறிப்பாக டியூசன் கட்டணம் அதிகரித்ததால் பிள்ளைகளைக் கல்வி கற்பிக்க முடியாத நெருக்கடியும், அயலவர்கள் அதிகம் பணம்கொடுத்து தனி வகுப்புக்களை ஏற்பாடுசெய்ய வெளிநாட்டிலுள்ள மாமா இல்லாத கிளிநொச்சியார்கள் வேதனைமிகு நெருக்கீடுகளை அனுபவிக்கிறார்கள். போராட்டத்தால கணவனை இழந்த குடும்பங்கள் யாரின் உதவியுமின்றித் தவிக்கின்றன. பிள்ளைகளுக்கான கல்வி மற்றும் இதர செலவுகள் தாங்கொணாத் தொல்லையாகி விரட்டுகிறது.

நீண்ட பெருங்காணி அவர்களுக்கு இயற்கை தந்தது. அதுவும் மனிதர்களால்தான் என்றால் கிடைத்திருக்காது.

பிராந்திய அடிப்படை வாதங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து மறைமுகமாக மனித உறவுகளைப்

பிரித்துக்கொண்டே இருக்கிறது. யாருமறியாத ஒரு பொழுதில் அது வெளிப்பட்டு எஞ்சியுள்ள தமிழ் சமூகமும் எல்லா அடையாளங்களையும் இழக்கும் ஆபத்து உருவாகியுள்ளது.

இதனைப் பூடகமாகவே பறையமுடியும். ஒற்றுமையாய் எங்களோடு இந்த மண்ணில் வழ்பவனை அந்த ஊரான் இந்த ஊரானென்று புறம்புகாட்டி நிர்வாகம் செய்யப்படுவதும் பொதுவாக இங்கு நிறுவனங்களுக்குப் பொறுப்பாயுள்ள அதிகாரிகளிடம் நீறுபூத்த நெருப்பாக பிராந்தியவாதம் கனன்று கொண்டிருக்கிறதும் வேதனையானதே. அவனவன் பிறப்பினால் வந்த அடையாளங்களுக்காக புறக்கணிக்கப்படுவதும், அவனது பங்கை மறுதலிக்குமளவுக்கு மறுதலித்தலும் நடந்தேறுகிறது.

நல்ல கிளிநொச்சி சமூகத்தை கட்டியெழுப்ப இன்று தேவையெழுந்துள்ளது. ஒவ்வொருவரிடமும் தன் சொந்தப் பிரதேசத்தை கௌரவிப்பது எவ்வளவு பெரிதாகவுள்ளதோ அதேயளவு பிறரின் பிரதேசமும் அவரவருக்குப் பெரிது என ஒருகணம் எண்ண வேண்டும். பிரதேசத்தில் பற்றோடு செயற்படுவது பிழையில்லை. ஆனால், இன்னொருவரின் பிரதேசத்தை அவமதிப்பதே பிழை.

கிளிநொச்சி ஒரு கலப்புப்பண்பாட்டையுடைய நிலம். கனடாவில் தமிழர் வாழ்வதால் அங்கும் கலப்புப்பண்பாடு உருவாகியதெனில் கிளிநொச்சியிலும்தான் என்பதை மனங்கொள்வதே சரியானது. யுத்தத்தால் சிதைந்த குடும்பங்களை நேசக்கரம் நீட்டி யாரும் தூக்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்தாத நிலை. ஒரு சமூகத்தின் சிதைவின் நீட்சியின் துயரத்தை எமக்களிக்கிறது.

பொதுப்பணிகளை யார் செய்ய முன்வருவார்கள். வளங்கள் கிடைக்கும் போது பெரியமனதோட அதனைப் பெற்றுக்கொள்ள முன்வராமை, இலவசமாக கிடைக்கும்போது அதனை மதிப்பார்ந்ததாக எண்ணாமை. பின் அதற்காக போராடுவதும் உயிர்களைப் பலிகொடுப்பதும் தோற்றுப்போவதும் என்பதே எமது வரலாறாகிவிட்டால் அதுவும் தொடர்ச்சியாகியும் விட்டால் தமிழ் இனம் நின்று நிலைக்கப்போவதே இல்லை.

இப்போதெல்லாம் சிலநிறுவனங்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டும் அந்நிறுவனங்கள் அவற்றை சொந்தமாக்கிக்கொள்ள முன்வராமல் அந்த நிலத்தை வேண்டா வெறுப்பாக புறக்கணித்துள்ளமையும் அது இன்றுள்ள அதிகாரிகளின் தூரநோக்கற்றமையும். மக்களின் நலன்பற்றிய கரிசனையற்ற மனோபாவத்தால் எதிர்கால இந்த மாவட்டத்தில் வளங்கள் அற்ற நிலைமை ஏற்பட்டு பெறுமதியற்ற வசதியற்ற வாழ்வொன்றை வழங்கப்போகிறார்கள் என்பதே கவலை.

நிலம் வேண்டாம். ஏற்பாடுகள் வேண்டாம். நிறுவனங்கள் வேண்டாம். அமைப்புகள் வேண்டாம். செயற்பாடுகள் வேண்டாம் என நிலைமைகள் உருவாகி வருகின்றன. இது மிகமோசமான நிலைமை.

உதாரணமாக வலயக்கல்வி அலுவலகத்துக்கென 5 ஏக்கரளவில் நிலம் ஒதுக்கப்பட்டும் அதிகாரிகள் அதில் கால்பதிக்க மனமின்றி விட்டுள்ளார்கள். ஏன் எத்தனையோ அலகுகள் உள்ள வலயக்கல்வி அலுவலகம் ஒரு அலகை அந்த வளாகத்துக்குள் தொடங்கி படிப்படியாக நிறுவனத்தை வளமாக்கலாமே குறுகிய அடிப்படைவாதச் சிந்தனைகளால் அந்தக்காணி கைவிடப்பட்ட நிலையிலுள்ளது.

அந்தக் கிராமத்தவர்களின் கருத்துப்படி மலையக வழித்தோன்றல்கள் வாழும் இக்கிராமத்தில் நல்ல நிறுவனத்தை அமைத்து அந்த கிராமத்தின் மாட்சிமையை அதிகரிக்கக்கூடாதென வலயக்கல்விப் பணிமனை கருதுகிறது. இதனால் இதனைக்கட்டியெழுப்ப விரும்பவில்லை என்பதாகும். அந்த பாமரச் சிந்தனையிலும் நியாயம் இருப்பதாகவே தோன்றுகிறது.

இசுருபாயவுக்குச் சென்றுதான் கல்வி அமைச்சை அடையலாம். மருதனாமடத்துக்குச் சென்றுதான் மாகாணக் கல்வித் திணைக்களத்தை அடையலாம் 45 நிமிடங்கள் பிறிதொரு பஸ்ஸில் பயணித்துத்தான் கல்வி அமைச்சை அடையலாம். மாகாணக் கல்வித் திணைக்களத்தை அடையலாம். ஏ 9 வீதியிலிருந்து 800 மீற்றர் தொலைவிலுள்ள பிரஸ்தாப வளாகம் சில அதிகாரிகளால் தூரம். போக்குவரவுக்கு கஸ்டம் என விமர்சிக்கப் பட்டதாக அறியமுடிகிறது. நகராக்கச் சிந்தனையில்லாமையே இதற்குக் காரணம்

கொழும்பிலுள்ள நிறுவனங்களை அடைய நீண்ட தூரம் பயணிக்கவே வேண்டும் என்பது இங்கு பதிவு செய்யப்பட வேண்டும். இந்தப் பத்தியன் நோக்கமும் இன்னும் பல தசாப்தங்களுக்குப் பிறகு மக்கள் இன்றுள்ள அதிகாரிகள் பற்றி அறிவர். இது ஒரு வரலாற்றுத்துரோகம் என

இவை சிறுபிள்ளைத் தனமானவை. இங்குள்ள கிராம மக்கள் மனங்களில் வேதனையை விதைத்து பிரிவினை எண்ணங்களை சிறிது சிறிதாக வளரவிட இவை காரணமாகும் என்பது உண்மை. பின்வரும் அலகுகளை

**கிளிநொச்சி ஒரு கலப்புப்பண்பாட்டையுடைய நிலம். கனடாவில் தமிழர் வாழ்வதால் அங்கும் கலப்புபண்பாடு உருவாகியதெனில் கிளிநொச்சியிலும்தான் என்பதை மனங்கொள்வதே சரியானது. யுத்தத்தால் சிதைந்த குடும்பங்களை நேசக்கரம் நீட்டியாரும்தூக்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்தாத நிலை. ஒருசமூகத்தின் சிதைவின் நீட்சியின் துயரத்தை எமக்களிக்கிறது.**

கிளிநொச்சியிலுள்ளது மனிதவளமல்ல. நிலவளம். அது ஒரு அடிப்படை வளம். அது இருந்தால் மற்றவை அதனை நோக்கி வரும்.

அங்கு உருவாக்க அந்த நிலம் அவசியம். இன்று யாழ்ப்பாணத்தில் மாகாணக் கல்வித் திணைக்களத்தை ஒரு வலய அலுவலகத்தோடு சேர்த்து வைத்து நடத்தும் துர்அதிஷ்டமே காணப்படுகிறது. நீண்டகாலத்துக்காக திட்டமிடும் பெரிய மனம் எம்மிடம் காணப்பட்டாலே எம் சந்ததி துன்பப்படாமல் வாழும். இது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.இந்த வளாகம் வலயக்கல்வி அலுவலகத்திற்கு சொத்தாக வரின் இங்கு சிறந்த வலயக்கல்வி அலுவலகத் தொகுதியை ஏற்படுத்தலாம். Zonal Education office complex of Kilinochchi

வெளிவாரிப் பயிற்சிக் கூடங்களை அமைக்கலாம். counciling preschool teacher training விரைவாக மாற்றங்களுக்குள்ளாவது கல்வியே. புதிய தேவைகள் அதிகரிக்கும் என்பதே உண்மை யதார்த்தம். இங்க கற்கை நெறி மையங்களை ஏற்படுத்தலாம். விளையாட்டுப் பிரிவு, விசேடதேவை அலகு, சமூக கற்கை அலகு, முகாமைத்துவ அலகு, நிதிப்பிரிவு Scouting, அழகியல் பிரிவு, கேட்போர்கூடம், விஞ்ஞான ஆய்வுகூடம், கணித வளநிலையம், ஆங்கில மொழிப்பிரிவு, உத்தியோகத்தர் விடுதி, கல்விசார் நூலகம், வாகன தரிப்பிடங்கள் என

இந்த அதிஸ்டமான வளம் கல்விக்குக் கிடைத்தால் அது சரியாகப் பயன்படுத்தப்பட்டால் இந்த மாவட்டம் கல்வியால் மிகுந்த முன்னேற்றங்களை அடையும். விவசாய பீடமும் பொறியியல் பீடமும் போல. கிளிநொச்சி நகராக்கச் சிந்தனைகளில் அடங்கும் கிராமத்து வளங்கள் மேம்படுத்தப்படுவதே முதன்மையானது. தவிர்க்கமுடியாததுமாகும்.இதைவிடவும் கல்வியில் பண்புத்தரத்தை உயர்த்தும் செயற்பாடுகள் நாளாந்தம் நடைபெறுகின்றன. அவை மாறும் உலகில் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்கமைய புதிய அலகுகள் எழுகின்றன. அவற்றை ஈடு செய்ய எமக்கு பரந்த நிலத்தோடான வசதியுடைய வலயக்கல்வி அலுவலகம் அமையப்பெறின் நாம் கொடுத்துவைத்தவர்கள்.

கிளிநொச்சியிலுள்ளது மனித வளமல்ல. நிலவளம். அது ஒரு அடிப்படை வளம். அது இருந்தால் மற்றவை அதனை நோக்கி வரும். ஏன் எல்லா மாவட்டங்களிலுமுள்ளது போலவே எமது வலய அலுவலகமும் இருந்தால் போதும் அதிகம் வளம் ஏன்தேவை என ஏன் எண்ண வேண்டும். எமது மாவட்டம் சகலவற்றுக்குமான வளத்தை ஏன் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடாது?

யுத்தம் தந்த பேரழிவிலிருந்து இந்த மாவட்ட மக்கள் முன்னேற வேண்டுமெனில் கிரோசிமா நாகசாகி யின் அழிவிற்குப்பிறகு ஜப்பான் தனது பொருளாதாரக் கோட்பாடாகிய முழுத்தர முகாமைத்துவத்தை எவ்வாறு கைக்கொண்டதோ அதனையும் கிளிநொச்சியின் மக்கள் கொள்ள கற்றோர் அவர்களை வழி நடத்த வேண்டும்.

அவ்வாறெனில் மிக விரைவாக இங்குள்ள உற்பத்திகளுக்கு அதிக கேள்வி எழும், கல்வி நடவடிக்கைகள், தொழிலாளர்கள் செயற்றிறன், நிறுவன உற்பத்திகள், சேவைகள், கட்டட அமைப்புகள், பௌதீக வள முகாமைத்துவம் மனிதவள முகாமைத்துவம் என்பன முழுத்தர முகாமைத்துவத்தினடிப்ப டையில் கையாளப்பட வேண்டும்.

இலங்கையிலேயே அதிக நில வளமுடைய பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மாறியுள்ளது. கிளிநொச்சி வளாகமே அதற்குக் காரணம். 558 ஏக்கர் நிலத்தோடு ஆசியாவிலேயே ஒரு பல்கலைக்கழகம் இருப்பதாகத் தெரிய வில்லை.

1979ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வளாக அந்தஸ்த்தையே முதன்முதல் வழங்கினர். எமக்கு முழுமையான பல்கலைக்கழகம் தந்தாலேயொழிய அதனை வேண்டாம் என இங்கு வாழும் பிள்ளைகள் பற்றி எண்ணமில்லாமல் தமிழ் அரசியல் தலைவர்கள் நடந்து கொண்டமை வரலாற்றுத்தவறு என கூறப்படுகிறது. அதேபோல வலயக் கல்வி அலுவலகமாகவோ வேறு நிறுவனத்துக்கான இடமோ கிடைக் கும் போது பெற்றுக்கொள்ள வேண் டும். முதலாம்படியில் ஏறாமல் பத்தாம் படியில் ஏறேலாது என்பதே உண்மை.

கிளிநொச்சிக்கு கிடைக்கும் வளங் களைச் சிறிது சிறிதாக சேர்த்துக்கொள்வது இன்றைய மக்களதும் அதிகாரிகளதும் பொறுப்பேயொழிய நிராகரிப்பதோ செயற்பாடுகளைத் தாமதிப்பதோ அல்ல. வளங்களை சேகரிப்பதால் கிளிநொச்சி மண்ணின் மக்கள் பல சௌஜன்னியங்களைப் பெறுவார்கள் என்பதே உண்மை. எனவே வரும் வளங்களை உதறித் தள்ளிவிட்டு பேராசைப்பட்டு உள்ளதையும் இழந்துவந்த மரபை உடைக்க இப்பகுதி மக்களும் அதிகாரி களும் கைகோர்த்துச் செயற்பட வேண்டும்.

# மோடி + ரமபோஷ + பாராளுமன்றத் தெரிவுக்குழு



> இலங்கையின் இனப்பிரச்சினை அரசியலில் பழைய கள்ளுக்குப் புதிய போத்தலாகவே வந்திருக்கிறார் ரமபோஷ. ஏற்கனவே இந்தியத் தூதுவர்களும் வெளியுறவுச் செயலர்களும் இந்த வேலையைப் பார்த்து அலுத்துப்போனவர்கள். ஆகவே, ஜி.பார்த்தசாரதி. வெங்கடேஸ்வரன். கே.என்.டிக்ஸிற். வாழப்பாடி ராமமூர்த்தி என்று தொடங்கி நோர்வேயின் சிறப்புத்தூதர் எரிக் சொல்கெய்ம் வரை பல போத்தல்களில் இந்தப் புளித்த கள்ளு மாற்றி மாற்றி ஊற்றப்பட்டது.

# = இலங்கையின் எதிர்காலம்?


கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

இலங்கை அரசியல் மிகச் சிக்கலானது. அதையும் விடச் சிக்கலானது இலங்கை இனப்பிரச்சினை. அதையும் விடச்சிக்கலானது இனவாதம். அதையும் விடச்சிக்கலானது அரசியல்தீர்வு. அதையும் விடச் சிக்கலானது தமிழ், சிங்கள, முஸ்லிம்களின் உளவியல். அதையும் விடச் சிக்கலானது இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு. அதையும் விடச் சிக்கலானது இலங்கை யில் செல்வாக்குச் செலுத்த முனையும் சீன, அமெரிக்க நடவடிக்கைகள். இப்படியே

இடியப்பச்சிக்கலையும் விட மோசமாகிச் செல்லும் இந்தப்பிரச்சினைகள் இலங் கைத் தமிழரின் எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்கப்போகின்றன? இலங்கை யிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது?

இந்தக் கேள்விகளுக்கு எவரிடமும் எந்தப் பதிலும் கிடையாது. ஆனால், ஆண்டுக்கணக்காக நீளுகின்ற இந்தப் பிரச்சினைகளுக்கு ஆளாளுக்கு ஏராள மான அபிப்பிராயங்களைச் சொல்லி வருகிறார்கள். இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக என்று பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முயற்சிக ளில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். பல தரப்புகள் சம்மந்தப்பட்டுள்ளன. பல நாடுகள் இந்தப் பிரச்சினையுடன் தொடர்புபட்டுப் பல முயற்சிகளைச் செய்து பார்த்தன. இதற்காகப் பெருமளவு நிதியும் பெருமளவு காலமும் செலவழிக்கப்பட்டது. என்றபோதும் இதுவரையில் எந்தச் சிறு முன்னேற்றமும் ஏற்படவில்லை. பதிலாக மேலும் மேலும் நெருக்கடிகளே பெருகிக்கொண்டிருக்கின்றன.

**அப்படியென்றால், இதற்கு என்னதான் தீர்வு? இந்தப் பிரச்சினை எரியும் பிரச்சினையாகவே இருக்கப்போகிறதா? மக்களும் நாடும் பாதிக்கப்படத்தான் போகிறதா?**



**இதுதான் விடைதெரியாத கேள்வி. விடைகாணப்பட வேண்டிய கேள்வியும் இதுதான்.**

இப்பொழுது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தென்னாபிரிக்காவின் பங்களிப்பைப் பற்றியும் மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபடுவதற்காக அந்த நாட்டின் துணைப்பிரதமர் ரமபோஷ பற்றியும் பேசப்படுகிறது. இந்தப் பெயர்களை அநேகமாகத் தமிழ்ப் பத்திரிகைகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இனிச் சில நாட்களுக்கு உச்சரிக்கத்தொடங்கு வார்கள். இப்படியான ஒரு சடங்குத்தனமான மரபு கடந்த 30 வருட இலங்கைத் தமிழ் அரசியலில் உள்ளது. இது புளித்துப்போன ஒரு சங்கதி. ஆனாலும் இதைத்தான் ஊடகங்கள் உற்சாகமாகச் செய்யப்போகின்றன. அரசியல்வாதிகளும் இதையே செய்யப்போகிறார்கள். மக்களும் இதை ஒரு நம்பிக்கையோடு பார்க்கத்தான் போகிறார்கள். தென்னாபிரிக்கர்களுக்கு ரமபோஷவைத் தெரியாமல் போனாலும் தமிழர்களுக்கு அவர் வீட்டு மாப்பிள்ளை என்ற அளவில் நெருக்கமாகப் போகிறார்.

ஆனால், இலங்கையின் இனப்பிரச்சினை அரசிய லில் பழைய கள்ளுக்குப் புதிய போத்தலாகவே வந்திருக்கிறார் ரமபோஷ. ஏற்கனவே இந்தியத் தூதுவர்களும் வெளியுறவுச் செயலர்களும் இந்த வேலையைப் பார்த்து அலுத்துப்போனவர்கள். ஆகவே, ஜி.பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன், கே.என்.டிக்ஸிற், வாழப்பாடி ராமமூர்த்தி என்று தொடங்கி நோர்வேயின் சிறப்புத்தூதர் எரிக் சொல்கெய்ம் வரை பல போத்தல்களில் இந்தப் புளித்த கள்ளு மாற்றி மாற்றி ஊற்றப்பட்டது.

**இலங்கை அரசியல் மிகச் சிக்கலானது. அதையும் விடச் சிக்கலானது இலங்கை இனப்பிரச்சினை. அதையும் விடச் சிக்கலானது இனவாதம். அதையும் விடச் சிக்கலானது அரசியல்தீர்வு. அதையும் விடச் சிக்கலானது தமிழ், சிங்கள, முஸ்லிம்களின் உளவியல். அதையும் விடச் சிக்கலானது இலங்கை தொடர் பான இந்தியாவின் நிலைப்பாடு. அதையும் விடச் சிக்கலானது இலங்கையில் செல்வாக்குச் செலுத்த முனையும் சீன, அமெரிக்க நடவடிக்கைகள். இப்படியே இடியப்பச்சிக்கலையும் விட மோசமாகிச் செல்லும் இந்தப்பிரச்சினைகள் இலங் கைத் தமிழரின் எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்கப்போகின்றன? இலங்கையிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது?**

இப்படிப் போத்தல்களை மாற்று வதால் கள்ளுப் புதிதாகி விடுவதில்லை. இப்பொழுது உச்சரிக்கப்படுகின்ற தென்னாபிரிக்காவும் ரமபோஷவும் இறுதியில் என்ன முடிவுகளைத் தரப்போகிறார்கள் என்பதை இப்பொழுதே தெளிவாகச் சொல்லி விட முடியும். இதற்கொன்றும் பெரிய படிப்புகளோ பட்டங்களோ ஆய்வுகளோ தேவையில்லை. ஏனென்றால், பிரச்சினையைக் கையாளும் தரப்புகளிடையே நேர்மை, உண்மை, விசுவாசம், நம்பிக்கை, செயலூக்கம், திட்டமிடல், சனங்களின் மீதான கரிசனை, அமைதியை உருவாக்குவதில் உள்ள ஈடுபாடு, ஜனநாயகப் பண்பு போன்ற அத்தியாவசியக் குணங்கள் இருந்தாலே பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும். ஆனால், இதில் ஒன்று கூட சம்மந்தப்பட்ட தரப்புகளிடம் கிடையாது. இந்த அத்தியாவசியக் குணங்களைப் பற்றி யாரும் சிந்திப்பதுமில்லை.

அவற்றுக்கு எப்பொழுதும் எரியும் பிரச்சினைகள் தேவை. தீரும் பிரச்சினைகள் தேவையில்லை. ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது முக்கியமல்ல. ஒரு வீடு எரிவதே தேவை. எரிவதையும் விட எரிக்கப்படுவதே தேவை. எரியும் பிரச்சினைகளுக்கு எப்பொழுதும் நாயகப் பிம்பங்கள் அவசியம். அரசியலுக்கும் இதுதான் அடிப்படை. ஆகவே பழைய சரக்கை புதிய போத்தல்களில் அடைத்து விற்பனைக்கு விடுகிறார்கள். எனவே ரமபோஷவும் ஒரு பழைய கள்ளைக் காவிக் கொண்டு திரியும் புதிய போத்தலாகவே இருக்கப்போகிறார். அவர் பிரச்சினையைத் தீர்த்து விடாமல் எப்படியோ இழுத்தடித்து, ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி, ரமபோஷவை அலுப்படித்து, களைப்படைய வைத்துக் கலைத்து விடுவார்கள்.

ஆகவே, உண்மையான சமாதான முயற்சிகளில் ரமபோஷ ஈடுபடுவதாக இருந்தால், இதை மாற்றி அவர் ஒரு புதிய உள்ளடக்கமாக - இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான ஒரு தீர்வைத்தரத்தான் போகிறார் என்றால் அதற்கான வழிமுறைகளைப்பற்றி அவர் சிந்திக்க வேண்டும். இதற்கு இந்தப் பிரச்சினையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட முயற்சிகள் எப்படித் தோற்கடிக்கப்பட்டன என்று தெரிந்த கொள்வது அவசியம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கையில் எந்தெந்தச் சக்திகள் எல்லாம் தடையாக இருக்கின்றன? உண்மையில் சமாதான நாட்டத்தை அரசியற்கட்சிகள் கொண்டுள்ளனவா? சமாதானத்துக்காகவும் தீர்வுக்காகவும் தம்மை அர்ப்பணிக்கத் தலைவர்கள் தயாரா? அரசியல் நலன்களுக்கு அப்பால் சென்று சிந்திப்பதற்கு இலங்கையின் அரசியற்தளம் விட்டுக்கொடுக்குமா? எத்தகைய வழிமுறை பொருத்தமானது? என்றெல்லாம் ரமபோஷ அறிந்து கொள்ள வேண்டும்.



சனங்களுக்கும் இவற்றில் அக்கறையில்லை. தலைவர்களுக்கும் ஊடகங்களுக்கும் படித்தவர்களுக்கும் இதில் எல்லாம் ஈடுபாடில்லை. இவர்கள் அவர்களைக் குற்றம் சாட்டுவார்கள். அவர்கள் இவர்களைக் குறை சொல்லுவார்கள். ஆக மொத்தத்தில் 'அரசாங்கம் சரியில்லை. எதற்கும் இணங்கு தில்லை' என்று தமிழர்களும் தமிழர்கள் ஒன்றுக்கும் ஒத்துவருகிறார்களில்லை என்று அரசினரும் சொல்வார்கள். இப்போதே இந்தப் பதில்களும் ரெடி. இந்தப் பதில்களைக் கூட யாரும் புதிதாகச் சொல்வதில்லை. இதுகூடப் பழைய சரக்குத்தான்.

அப்படி அறிந்து கொண்டால்தான் அதற்கான ஒரு பொறிமுறையை அவரால் உருவாக்க முடியும். இந்தப் பொறிமுறையை இங்கே - இலங்கையில் நடைமுறைப் படுத்துவதில் உள்ள நெருக்கடிகளைப் பற்றியும் அவர் தெளிவாக உணர்வது அவசியம். ஏனென்றால், இது ஒன்றும் சாதாரண கரடிக்கூட்டம் அல்ல. சொந்த மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தண்ணிகாட்டிக்கொண்டே இருக்கின்ற கரடிகள். ஆகவே இந்தக் கடுமையான கரடிகளைச் சமாளிக்கும் வகையில் பொறிமுறைகளை உருவாக்கிக் கொண்டே இதில் களமிறங்க வேண்டும். இப்படியெல்லாம் செயற்படுவதற்கு ரமபோஷ தயாரா?

இன்னொரு விசயம், ஏற்கனவே 2002 இல் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின்போது நோர்வேயின் மத்தியஸ்த்துவத்துக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் இந்தியாவும் அனுசரணையாக இருந்தன. அப்படி இவையெல்லாம் பின்னணிப் பலத்தை வழங்கியும் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமையவில்லை. சமாதானம் கனியவில்லை. பதிலாக யுத்தமொன்று பெரிதாக ஆரம்பித்து அழிவில் முடிந்தது.

மக்களுடைய விழிப்பைப்பற்றி நாம் இங்கே பேசவேண்டியிருக்கிறது. தங்களுடைய அரசியல் நலன்களுக்காகவும் பதவிகளுக்காகவும் இனமுரண்களை உச்சமாக வளர்க்கிறார்கள் அரசியல்வாதிகள். இப்படித் தங்களுடைய நலன்களுக்காகவே இனவாதத்தைப் பேசி, ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி அரசியல் நடத்துகின்ற அரசியல்வாதிகளை ஓரங்கட்ட வேண்டியவர்களாக மக்களே இருக்கின்றனர். மக்களை உரிய வழிகளில் சிந்திக்கச் செய்ய வைக்கும் பொறுப்பு புத்திஜீவிகளுக்கும் ஊடகங்களுக்கும் உரியது. ஆனால், துரதிருஸ்ரவசமாக இந்த இரண்டு தரப்புகளும் அதைச் செய்வதில்லை என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ரமபோஷவின் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு எவ்வாறான ஆதரவும் ஒத்துழைப்பும் எந்தெந்தத் தரப்புகளால் கிடைக்கும் என்பதற்கான எந்தத் தகவல்களும் இதுவரை தெரியவில்லை. ஏனென்றால், இலங்கையின் இனப்பிரச்சினையிலும் அதற்கான தீர்விலும் தனியே உள்நாட்டுச் சக்திகளும் மக்களும் மட்டும் சம்மந்தப்பட்டிருக்கவில்லை. பிராந்திய, சர்வதேச சக்திகளும் சம்மந்தப்பட்டுள்ளன. ஆகவே பிராந்திய, சர்வதேச சக்திகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாமல் எதுவும் சாத்தியமில்லை.'அவர்களின்றி அணுவும் அசையாது' என்பதே இன்றைய உலக உண்மை. எனவே, இதைக்குறித்தும் நாமும் ரமபோஷவும் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒரு முன்னோட்டப் பயணமாக ரமபோஷ இலங்கைக்கு வந்தபோதே ஏகப்பட்டவிதமான அபிப்பிராயங்களும் எதிர்ப்பு ஆதரவு என்ற வகையிலான நடவடிக்கைகளும் தொடங்கிவிட்டன. இது எதிர்காலத்தில் இன்னும் தீவிரமடையும். ஒரு முயற்சியை முன்னெடுக்க முன்னரே எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் சக்திகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்திற்கு உண்டு. அதை அரசாங்கம் செய்ய வேண்டும். ஆனால், அது நடக்குமா?

தவிர, இனப்பிரச்சினைக்கு இப்படி வெளியில் இருந்து எடுக்கப்படுகின்ற காவடிகள் ஒருபோதுமே தீர்வைத்தர முடியாது என்று நம்புவோரும் உள்ளனர். அவர்களுடைய கருத்தை மறுக்கவும் முடியாது. கடந்த 30 ஆண்டுகளில் வெளித்தரப்புகள் பல சம்மந்தப்பட்டிருக்கிறபோதும் அதனால் எத்தகைய முன்னேற்றங்கள் எட்டப்பட்டன? என்ற கேள்வி விடையில்லாமல் உள்ளது. இது நடைமுறை உண்மை. கடந்த கால அனுபவம். இந்த அனுபவங்கள் நிகழ்கால நிலைமைகளில் மாற்றத்தையோ முன்னேற்றத்தையோ ஏற்படுத்தவில்லை.


சுதந்திர இலங்கையில் இனவாத அரசியலே உச்சமடைந்து வந்துள்ளது. சுதந்திரத்துக்கு முந்திய ஐரோப்பியர்களின் வருகைக்கு முந்திய கால இனமுரண்கள் புத்துருவாக்கம் ஊட்டப்பட்டு அதையே அரசியலாக முன்னெடுக்கப்படும் யதார்த்த நிலையே இப்பொழுதுள்ளது. வரலாற்று ரீதியாக இனவேறுபாடுகளும் பகைமைகளும் தீர்க்கமுடியாமலே உள்ளன என்று இதற்குத் தனியான விளக்கம் வேறு செய்யப்படுகிறது. இனவாத அரசியலை வளர்க்கும் வகையிலேயே புதிய புதிய கட்சிகளும் தலைவர்களும் உருவாகுவதை அவதானிக்கிறோம். இத்தனை பெரிய போரும் அவலமும் நடந்து முடிந்த பிறகும் இப்படியான இனவாத அரசியலையே மக்களும் விரும்புகிறார்கள். இதற்கு எண்ணெய் ஊற்றுகின்றன ஊடகங்கள். ஊதி நெருப்பை மூட்டிக்கொண்டேயிருக்கிறார்கள் புத்திஜீவிகள். பலருக்கும் இந்த நெருப்பும் சூடும் அவசியமாக இருக்கிறது. நாடு அழிவதைப்பற்றியோ, மக்கள் பாதிக்கப்படுவதைப்பற்றியோ இவர்கள் சிந்திக்கவில்லை.

இனமுரண்கள் இப்படி ஒரு அவசியமான பொருளாக உளவியல் ரீதியாகவும் நலன்களின் அடிப்படையிலும் இருக்கும் வரையில் அதற்குத் தீர்வு காண யார்தான் விசுவாசமாக விரும்புவார்கள்? இனமுரண்களால், இனவாதத்தினால் பாதிக்கப்படுகின்ற மக்கள் மட்டும்தான் இதைப்பற்றி விசுவாசமாகச் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் எப்பொழுதும் இனவாதத்தினால் இவர்களே முழுதாகப் பாதிக்கப்படுகிறார்கள். முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களும் மக்களே. அளுத்கம, பேருவளையில் இறந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் மக்களே. இதற்கு முன் நடந்த இனக்கலவரங்கள், இன வன்முறைகள் எல்லாவற்றின்போதும் 95 விழுக்காட்டிற்கும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் தான். ஆகவே இனவாத அரசியலை ஒதுக்குவதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்கள் மக்கள்தான்.

எனவேதான் மக்களுடைய விழிப்பைப்பற்றி நாம் இங்கே பேசவேண்டியிருக்கிறது. தங்களுடைய அரசியல் நலன்களுக்காகவும் பதவிகளுக்காகவும் இனமுரண்களை உச்சமாக வளர்க்கிறார்கள் அரசியல்வாதிகள். இப்படித் தங்களுடைய நலன்களுக்காகவே இனவாதத்தைப் பேசி, ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி அரசியல் நடத்துகின்ற அரசியல்வாதிகளை ஓரங்கட்டவேண்டியவர்களாக மக்களே இருக்கின்றனர். மக்களை உரிய வழிகளில் சிந்திக்கச் செய்ய வைக்கும் பொறுப்பு புத்திஜீவிகளுக்கும் ஊடகங்களுக்கும் உரியது. ஆனால், துரதிருஸ்ரவசமாக இந்த இரண்டு தரப்புகளும் அதைச் செய்வதில்லை என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விழிப்புணர்வு கிட்டிவிட்டால், ரமபோஷவின் சமாதான முயற்சிகளைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளலாம். ரமபோஷவின் சமாதான முயற்சிகளை வெற்றியடையவும் வைக்கலாம். இப்பொழுது அதிகாரம் மக்களின் கைகளில் தான் உள்ளது. மக்கள் தங்களைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். தங்களைக் குறித்து, தங்களுடைய எதிர்காலத்தைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினால் அரசியல்வாதிகள் அவர்களுடைய மூக்கினுள் தும்பை விட்டு ஆட்டமுடியாது.

வாருங்கள், ரமபோஷ... அரசியல் வாதிகளை விடவும் எங்கள் மக்கள் உண்மைகளை அறிந்தவர்கள். சமாதானத்தின் தேவை அவர்களுக்கே உள்ளது. ஆகவே அவர்களுடன் பேசுங்கள்.



தமயந்தி

# புதூர் நாகதம்பிரான்

வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் புளியங்குளம் என்ற ஊரின் வடக்கே அமைந்துள்ளது புதூர். புளியங்குளத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் வடக்கே கண்டி வீதியிலிருந்து மேற்கே பிரியும் மண்வீத் புதூர் வீதி இவ்வழியே சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவில் பெருமரங்களினிடையே சில ஏக்கர் பரப்பளவே கொண்ட சிறிய ஆலயம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இது ஒரு பாலை மரத்தின் கீழ் எழுந்த புற்றை வைத்து வழிபாடு செய்யப்பட்டது. இதுபற்றிய கிராமியக் கதைகள் உண்டு.

எனது பேத்தியார் சொன்னது . புதூர் நாக தம்பிரான் அருள் மிகுந்த தெய்வம் ஒருதடவை ஒருபெண் இங்கே ஏதோ தொழில் நிமித்தமாக வந்து விட்டு போனபோது ஒரு திருடன் அவளது கழுத்திலிருந்த தாலியை அறுத்துக்கொண்டு ஓடினானாம். அப்பெண் செய்வதறியாது திகைத்து இந்தப் புற்றையடைந்து புதூர் நாகதம்பிரானே என்ர தாலி என்று கதறினாளாம் . ஓடிய திருடனை பாம்பு கடித்துவிட்டது. அவன் கதறியபடியே கோவிலடிக்கு ஓடிவந்தானாம் திருடிய பொருளையும் திருப்பிக் கொடுத்தானாம். புதூர் நாகதம்பிரான் பூசகர் நாகம் ஊர்ந்த தடத்திலிருந்து மண்ணெடுத்து கரைத்து அவனுடைய காயத்திலும் பூசி பருகவும் கொடுத்தாராம். அவனும் குணமடைந்தான். அன்றிலிருந்து புதூரில் பாம்பு ஊர்ந்த தடத்து மண் புனிதமாகவும் விஸநீக்கியாகவும் அந்த மண் உள்ள இடத்தில் வேறு விஸப் பிராணிகள் வராது எனவும் மக்கள் நம்பி வருகின்றனர்.

பச்சிலைப்பள்ளி இயக்கச்சி எனும் இடத்தில் நல்லதம்பிரான். எனும் செல்வந்தர் இருந்தார். இவருடைய மனைவிக்கு இரு நாக பாம்புகள் பிறந்ததாம். அந்த நாகங்களைப் புறக்கணிக்காமல் வளர்த்து வந்தார்களாம். ஒருநாள் அந்தப்பெண் வீடு கூட்டும் போது நாகங்கள் விளக்குமாற்றின் இடையில் புகுந்து விளையாடி தொல்லை செய்தனவாம். அந்த அம்மாள் கோபித்து சீச் சனியனுகளே எங்கயாவது போய்த்துலையுங்கோவன் என்று ஏசி விட்டார். அந்த இரு பாம்புகளும் அங்கிருந்து ஊர்ந்து வந்து புளியம் பொக்கணையில் ஒன்றும் புதூரில் ஒன்றுமாக கூடியிருந்தன. புதூர் நாகதம்பிரான் அற்புதம் உள்ளதாக நம்பப்படுகிறது. இங்கு வெள்ளையர் ஆட்சி நடந்த காலத்தில். ஒரு வெள்ளைத்துரை தினமும் பாம்புக்குப் பால் வைக்கும் காட்சியைக் கண்டார். ஆனால் பாம்பு குடிக்கிறதா என்பது யாருக்கும் தெரியாது. இந்த வெள்ளைத்துரை பாம்பு பால் குடிக்குமா? அது பால் குடிப்பதை நான் பார்க்க வேண்டுமென்பதை பூசாரிக்கு கட்டளையிட்டான். பூசகர் காட்டுவதாக வாக்களித்தாராம். அதன்படி அன்றிரவு புசகர் நோன்பிருந்து உணவைத் தவிர்த்து படுத்திருந்தார்.

மறுநாள் குறித்த நேரத்தில் வெள்ளைக்காறர் பாலுடன் வந்தார். பூசகர் இறைவனை நேர்ந்து தனது சால்வையை முறுக்கி கீழே விட்டாராம். அது பாம்பாக மாறி பாலைக்குடித்ததாம். இந்த அற்புதத்தை கண்டு வியந்த வெள்ளையர் ஐந்து அடி உயரமான வெள்ளி நாக சிலையை கோவிலுக்குக் கொடுத்தார். இதுவே தற்போது கோவிலிலுள்ள சிலையாகும் என புதூர் நாகதம்பிரான் மான்மியம் கூறும்.

புதூர் நாகதம்பிரான் கோவில் பொங்கல் விழா வைகாசி மாதம் வரும் அமாவாசையை ஒட்டிய திங்கட்கிழமை வரும். நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் இங்கே கூடுகிறார்கள். திங்கள் இரவு கோவிலின் முன்பாக புதுப்பானை வைத்து தூப தீபங்காட்டி அடுப்பேற்று வழிபாடு நடக்கும். இதை விழுந்து நேர்தல்

**நாம் நாகங்களை பயத்தோடும் பக்தியோடும் பார்ப்பதால் அவற்றுக்கு தீமை செய்ய மாட்டோம். அவற்றுக்கு தீமை செய்யாதவரை அதுவும் நமக்கு தீமை செய்யாது.**

என்பர். பானையில் பாலூற்றி அரிசியிட்டுப் பொங்கல் தொடங்கும் அதேசமயம் பக்தர்களும் தத்தமது பானைகளை அடுப்பேற்றுவர். வரிசையாக நூற்றுக்கணக்கான பானைகளில் பொங்கல் நடப்பது மிகுந்த அழகாக இருக்கும்.

விடிய விடிய காவடி, கரகம், பால்சொம்பு, தீச்சட்டி ஏந்தலென பக்தர்களின் நேர்த்திகள் ஒருபுறம் நடக்கும். வருடம் முழுதும் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கு விஸம் கண்டம் நேராதிருக்க பட்டியில் கோழி, ஆடு என்பவற்றை நேர்ந்திருப்பர். அவை பல்லாயிரமாக கோவிலின் பட்டியில் இத்தினத்தில் கொண்டுவந்து போடுவார்கள். அவை அதிகாலையில் ஏலம் விடப்படும்.

புதுராஜன் பாலை மரத்தடியில் நாகம் வந்து போகும் தடம் என்று குறிப்பிடும் இடத்திலிருந்து ஒருபிடி மண் அள்ளிக் கொண்டு போக யாரும் தவறுவதில்லை. இவ்வாறு பல்லாயிரக்கணக்கில் கூடும் மக்கள் மறுநாள் காலை வெளியேறத் தொடங்கிவிடுவர். இந்த திருவிழாவை முன்னிட்டு பெரிய கடைத்தெருவொன்றும் இங்கே உருவாகும் முற்காலத்தே பல ஊரவர்களின் சந்தையாகவும் திருவிழாக்கள் இருந்தன என்பது இன்றும் தொடரும் நிகழ்வாக உள்ளது. இரவில் குளிர்ச்சிப் பொங்கல் காலைவரை பூசைகள்.

நாக வழிபாடு இந்துக்களிடையே பரவலாக இருந்து வருவதுதான். சிவனுக்கு ஆபரணமாகவும், விஸ்ணுவுக்குப் படுக்கையாகவும், உமையம்மைக்கு மோதிரமாகவும். விநாயகருக்கு பூணூலாகவும் என பாம்பின் தொடர்பைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். எனினும், யோகியர், ஞானியர், சித்தர்கள் கூறுவது என்னவென்றால் நாக வடிவில் நாம் காண்பது நம்மைத்தான். நமது நரம்பு மண்டல இயக்கமே இரு நாகங்கள் பிணைப்புண்டு நிற்பதான வடிவிலேயே உள்ளது.

நாம் நாகங்களை பயத்தோடும், பக்தியோடும் பார்ப்பதால் அவற்றுக்கு தீமை செய்ய மாட்டோம். அவற்றுக்கு தீமை செய்யாதவரை அதுவும் நமக்கு தீமை செய்யாது.






புதிய வன்னி முதலாம், இரண்டாம் இதழ்களுக்கு வாசகர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் இருந்து கிடைத்த வரவேற்பும், ஊக்கமும் நமக்கு புதிய நம்பிக்கையைத் தந்துள்ளது.

புதிய வன்னிக்கு ஆதரவைத் தரும் வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்களுக்கு எமது நன்றிகள்.

உங்கள் அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் எழுதுங்கள். புதிய வன்னிக்கான கட்டுரைகள் மற்றும் படைப்புக்களை நீங்கள் எழுதலாம். எல்லோருக்கும், எல்லாவற்றுக்குமான புதிய வன்னி திறந்து வைத்துள்ளது.

கேள்வி – பதில் பகுதி அடுத்த இதழில் இருந்து ஆரம்பமாகிறது. உங்களிடம் இருந்து கேள்விகளை எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர்,
புதிய வன்னி,
இல –24, 06ஆம் ஒழுங்கை,
குமரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.

# தமிழும் தமிழாகுதலும் நானும்....

**கடைக்காரருக்கு அவர் பழக்கமானவராக இருக்க வேண்டும். இருவரும் அன்னியோன்யமாக உரையாடினார்கள். கடைக்காரர்" இருநூற்றி முப்பத்தி ஐந்து" என்றார். திரும்பச்சொல்லுங்கள் என்றார். கடைக்காரர் மீண்டும்" இருநூற்றி முப்பத்தி ஐந்து "என்றார். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அவர்களது உரையாடலுக்கு காதைக் கொடுத்தபடியே அவர்களைக் கவனித்தேன். அம்மனிதர் இருநூற்றி முப்பத்தி ஐந்து என்பதை இருதரம் மிகவும் மெதுவாகக் கூறிப்பார்த்தார். பின்பு சரியான தொகையை எண்ணி மேசையில் வைத்தார். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.**

- சஞ்சயன் செல்வமாணிக்கம் (நோர்வே)

*சில நாட்களுக்கு முன் ஒஸ்லோவில் உள்ள ஒரு தமிழ் சாப்பாட்டுக் கடையில் தேனிர் அருந்தியபடியே வாசித்துக் கொண்டிருந்தேன். அருகே வயதான மனிதர் ஒருவர் அவரது துணைவியாருடன் உணவருந்திக் கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் வெள்ளை நிறத்தவர்கள். நோர்வேஜியர்கள்.*


*அந்த வயதான மனிதரைப் பார்த்தா Lord of the Ring இல்வரும் Gandalf போன்று நீண்ட வெண்ணிற தாடி, சுருக்கம் விழுந்த கவர்ச்சியான முகம், கண்களுக்கு கீழே சுருக்கமான தோல், தீர்க்கமான பார்வையுடன் இருந்தார். அவரது முகம் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கு அழகாக இருக்கும் என மனதுக்கு தோன்றியது. படம் எடுப்பதற்கு சம்மதிப்பீர்களா? என்று அவரிடம் கேட்க நினைத்தேன். ஆனால், மனதுக்குள் அவர் என்ன நினைப்பார் என்ற சிந்தனையோட, கேட்பதைத் விர்த்துக் கொண்டேன்.*

*அப்போது அவர்கள் சோறு, மரக்கறி வகைகளுடன் பாயாசம் ஆகியவற்றை உண்டுகளித்தபின், கடைக்காரருடன் தமிழில் உரையாடத் தொடங்கி காசு எவ்வளவுதர வேண்டும் என்றார். கடைக்காரருக்கு அவர் பழக்கமானவராக இருக்க வேண்டும். இருவரும் அன்னியோன்யமாக உரையாடினார்கள். கடைக் காரர் இருநூற்றி முப்பத்தி ஐந்து என்றார்.திரும்பச் சொல்லுங்கள் என்றார் கடைக்காரர். மீண்டும் இருநூற்றி முப்பத்தி ஐந்து என்றார். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அவர்களது உரையாடலுக்கு காதைக் கொடுத்தபடியே அவர்களைக் கவனித்தேன்.*

*அம்மனிதர் இருநூற்றி முப்பத்தி ஐந்து என்பதை இருதரம் மிகவும் மெதுவாகக் கூறிப்பார்த்தார். பின்பு சரியான தொகையை எண்ணி மேசையில் வைத்தார். எனக்கு ஆச்சரியம் தாங்க வில்லை.*

*அவரைப்பார்த்து நோர்வேஜிய மொழியில் உங்களுக்கு தமிழ் தெரிந்திருக்கிறதே, இலங்கையில் இருந்தீர்களா என்றேன். ஏன் இலங்கையில் மட்டுமா தமிழ் இருக்கிறது என்று மடக்கினார். இல்லை கடைக்காரர் சுத்த யாழ்ப்பாணத் தமிழ் பேசுகிறார், உங்களுக்கு அதுபுரிகிறது. அதுதான் கேட்டேன் என்றேன். அதற்கு*





அவர் தமிழில் இவ்வாறு பதிலளித்தார். நான் மதுரையில் 3 மாதகாலம் தங்கியிருந்து மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றேன். மூன்று மாதம் மட்டுமா என்றேன் ஆச்சர்யத்தில். நாம் தமிழில் உரையாடுவதை கடையில் இருந்த ஏனையோரும் ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். இடையிடையே தனது மனைவிக்கு நாம் என்ன பேசிக்கொள்கிறோம் என்று மொழிபெயர்த்துக் கூறினார். அவரும் தலையாட்டிய படியே கேட்டுக் கொண்டிருந்தார்.

மிகவும் தெளிவாகவும், அழகாகவும் எச்சரிக்கையுடனும், மெதுவாகவும் தமிழை உச்சரித்தார்?. மொழியின் மீதான பற்று அவரது ஒவ்வொரு வார்த்தைகளிலும் ஊறிக்கிடந்தது. குழந்தைகளின் தமிழ் அழகானது என்பதை அறிந்திருக்கிறேன். ஆனால், ஒரு முதியவரின் தமிழ் இத்தனை இனிமையானதாக இருக்கும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

மகன் நான் சென்று வருகிறேன். இன்றைய நாள் உனக்கு மகிழ்ச்சிகரமாக அமையட்டும் என்றபடியே கையைக் குலுக்கி விடை பெற்றார். தமிழ்த்தாயின் அதிசயபுத்திரன் ஒருவனைச் சந்தித்த பிரமிப்பில் நான் நின்றிருக்க, அவர் மெதுவாய் கடையைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தார். தமிழ் அழகானது மட்டுமல்ல, தமிழைப் பேசும் அனைவரையும் அது அழகாக்குகிறது.

ஏறத்தாள 1990ம் ஆண்டு என நினைக்கிறேன். ஒஸ்லோ நகரிலுள்ள பெரிய வாசிகசாலைக்குப்பே பாயிருந்தேன். அங்கு தமிழ்ப் புத்தகங்களிற்கு என்று ஒரு தனிப்பகுதி இருக்கிறது. அங்கு புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தபோது கண்ணில்பட்டது ஒரு நோர்வேஜிய மொழியிலிருந்த விளம்பரம். இப்படி இருந்தது அதில்:

எனக்கு தமிழ் கற்றுத்தந்தால் உனக்கு நோர்வேஜிய மொழிகற்றுத்தருவேன் எனக்கு நோர்வேமொழி கற்பதில் ஆர்வம் இருந்தது. எனவே, தொலைபேசி இலக்கத்தை குறித்துக் கொண்டேன். கைத்தொலைபேசி இல்லாத கற்காலம் அது. எனவே, வீதியோர தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். மறுபக்கத்தில் அழகிய இளம் பெண் குரல் கேட்டது. நான் எனது 20 பதுகளின் நடுப்பகுதியில் இருந்ததால் அதை மிகவும் ரசித்தேன்.

உங்கள் விளம்பரம் பார்த்தேன் மொழிகளை பரிமாறிக் கொள்ள எனக்குச் சம்மதம், உங்களுக்கு சம்மதமா? என்று கேட்டேன். மகிழ்ச்சியாய் ஒப்புக்கொண்டார்.

அந்த நாட்களில் நான் மாணவர்களுக்கான ஒரு விடுதியில் தங்கியிருந்தேன். ஒருசிறிய அறை. அதுதான் எனது சாம்ராஜ்யத்தின் எல்லையாயிருந்தது. அறையை தேவைக்கு அதிகமாய் சுத்தப்படுத்தி அவருக்காய் காத்திருந்தேன். 20 வயதுக்குட்பட்ட பெண்ணொருவர் வந்தார். மிக அழகாய் இருந்தார். வணக்கம் என்று கைகூப்பினார். நானும் வணக்கம் என்றேன். மனது மகிழ்ச்சியாய் இருந்தது.

தெற்கு நோர்வேயைச் சேர்ந்தவர் என்பதை அவரது மொழியுச்சரிப்பில் இருந்து புரிந்துகொண்டேன். அங்கு வாழும் ஒருதமிழ்க் குடும்பத்தை சந்தித்துப் பழகியிருக்கிறார். அக்குடும்பத்தில் வாழ்ந்திருந்த ஒரு மூதாட்டி மிகவும் அன்பாக இவருடன் பழகியதால், அவருடன் உரையாட முற்பட்டபோது மொழிப்பிரச்சனை உருவாகியதால், மூதாட்டி நோர்வேஜிய மொழிகற்பது சாத்தியமல்ல, தான் தமிழ் கற்றால்தான் உண்டு என்று இவர் தமிழ் கற்றுக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார். என்னிடம் வந்தபோது அவருக்கு தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கவும், வாசிக்கவும் தெரிந்திருந்தது. அந்த மூதாட்டி கிழமைக்கோர் கடிதம் எழுத இவரோ மிகவும் குறைவான எனது உதவியுடன் வாசிக்கவும் பழகிக்கொண்டார்.


தானும் அந்த மூதாட்டிக்கு பதில் எழுத வேண்டும் என்ற போதுதான் பிரச்சனை தொடங்கியது. அவரோ தான் கற்ற தமிழ்ச் சொற்களை நோர்வேஜிய மொழியின் இலக்கணத்திற்கு ஏற்ப தமிழில் வசனமமைத்தார். அது தவறானது என்றபோது இலக்கணம் கற்பி என்று பெரியதொரு கல்லைத் தூக்கிப்போட்டார். எங்கு முற்றுப்புள்ளி, காற்புள்ளி, அரைப்புள்ளி வைப்பது என்று தடுமாறும் ஆள்நான். எனக்கு தமிழ் கற்பித்த பெருமைக்குரிய சர்மா சேர் எனக்கு தம்பி நீ எழுவாய், நீ தமிழ் கற்பது பயனில்லாதது என்று எனது தமிழறிவை பாராட்டியவர். தமிழ்ப் பரீட்சையில் சாதாரண சித்தி பெறுவதற்கே பெரும்பாடுபட்டவன் நான். இவர் என்னிடம் இலக்கணம் கற்பிக்கக் கேட்டது என்னை பயமுறுத்தியது.

தெரிந்தளவில் எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் கற்பித்தேன். அதற்கடுத்த கிழமை அவர் கேட்ட கேள்விகளுக்கு என்னிடம் பதில் இருக்கவில்லை. பூசிமெழுகிச் சமாளித்தேன். வாரம் 1 மணிநேரம் என்று 8 மணிநேரங்கள் மட்டுமே என்னிடம் கற்றுக் கொண்டார். அவரின் வேகமும், ஆர்வமும் கட்டுக் கடங்காதிருந்தது. தமிழ் அவரின் வாயிலும், கையிலும் நர்த்தனமாடியது. அவ்வளவு வேகமாக ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள முடியாது என்பது எனது கருத்தாயிருந்தது. ஆனால், அது பிழை என்பதை அவர் நிரூபித்தார். தமிழ் அவரைக் காதலித்ததா அல்லது அவர் தமிழைக் காதலித்தாரா என்று எனக்குப் புரியவில்லை. தமிழும் அவரும் ஒருவரை ஒருவர் அந்தளவுக்கு புரிந்திருந்தார்கள். அதிசயமான மொழியறிவைக் கொண்டவர் அவர்.

அந்த மூதாட்டியின் கடிதத்தில் இருந்த ஒன்றைத்த விர மற்றையது எல்லாம் அவருக்கு புரிந்தது, மூதாட்டி கடிதம் போட முதல் கடிதத்தின் மேற்பகுதியில் போடும் உ என்பது ஏன் என்பது மட்டும் அவருக்குப் புரியவில்லை. முடிந்தளவு விளக்கி னேன். பின்பு இது மதம் கலந்த கலாசாரப் பிரச்சனை என்று பெரிய வார்த்தையினைப் பாவித்து சமாளித்துக் கொண்டேன். ஏறத்தாள இரண்டு மாதங்களின் பின் அவரைச் சந்தித்த போது அவரே மூதாட்டிக்கு அன்புள்ள பாட்டி அம்மாவுக்கு என்று தொடங்கி அன்புடன் மகளின் மகள்' என்று முடித்து அருமையான தொருகடிதம் எழுதியிருந்தார். ல, ள, ழ, றற, ணண பிரச்சனைக ளைத் தவிர பெரிய பிழைகள் இருக்கவில்லை.அவரின் தமிழ் ஆர்வததால் நான் நோர்வேஜியமொழி கற்றுக் கொள்வது மறந்து போயிருந்தது. அதற்கு அவரின் அழகும் ஒரு காரணமாயிருந்தி ருக்கலாம். எது எப்படியோ தமிழ் என்னால் சற்று வளர்ந்தி ருக்கிறது என்றால் அது மிகையில்லை.

வாழ்க தமிழ். வாழ்க அந்தப் பெரியவர்,
வாழ்க அந்தப் பெண்.

மு.தமிழ்ச்செல்வன்



## தெருமுறிகண்டி திருமுறிகண்டியாக மட்டும் மாறவில்லை

# எல்லாமே மாறிவிட்டது

கச்சான் கச்சான் கச்சான் வறுத்த கச்சான் சுடச்சுட கச்சான் என்ற கிழவிகள், குமரிகள், கிழ வன்களின் உற்சாகமான அந்த சத்தங்கள் பஸ்ஸின் உள்ளே நித்திரையினையும் ஊடுருவி எனது காதுகளுக்கு புகுந்த அதேநேரம் அம்மாவும் தம்பி தம்பி முறிகண்டி வந்திட்டு எழும்பி கால் கை கழுவிபோட்டு கற்பூரத்தை வேண்டி கொழுத்தி போட்டு தேங்காயும் உடைச்சு கும்பிட்டு வருவம் என்றார்.

கொழும்பிலிருந்து வந்த பஸ் ஏ9 வீதியில் வவுனியா, மாங்குளம், கொக்காவில் கடந்து முறிகண்டியில் நின்ற போதே இந்தச் சத்தங்களும், அம்மா எழுப்பியதும்.

கண் விழித்து பார்த்த போது பஸ்ஸினில் இருந்த எல்லோரும் இறங்கிக் கொண்டிருந்தனர். முறிகண்டி கோவில் முகப்பை உரசியவாறு செல்லும் ஏ9 வீதியில் முறிகண்டி கோவில் முற்றத்தில் ஏசி பஸ், ஏலாத பஸ், சிரிபி பஸ், லொறிகள், தட்டி வான்கள் என பல வாகனங்கள் தரித்து நிற்க ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த கற்பூர சட்டியில் சுவாலை நர்தனம் ஆடிக்கொண்டிருக்க அருகில் உள்ள தொட்டியில் சிதறு தேங்காய்கள் உடைக்கப்படும் காட்சிகள் ஒரு புறமிருக்க எங்கள் பஸ்ஸில் வந்தவர்கள் வியாபார நிலையங்களுக்கு முன்னாள் கட்டப்பட்டிருந்த தண்ணீர் தொட்டியில் முகம், கால், கைகளை கழுவி அந்த கடைகளில் கற்பூரமும் தேங்காயும் வேண்டிக்கொண்டு கோயிலுக்குச் சென்றனர்.

சாரதிகள் தங்கள் வாகனங்களுக்கு திருநீறும், சந்தனமும் பூசுகின்றார்கள். கடைக்காரர்கள் ஐயா வாங்கோ, அண்ணா வாங்கோ, அம்மா வாங்கோ, அக்கா வாங்கோ என தங்கள் தங்கள் தேனீர்க் கடைக்கு அழைத்துக் கொண்டிருந்தனர்.

ஆலய சூழலில் பாலை மரங்களில் சில குரங்குகள் குட்டிகளை இறக்கி விட்டு அவை கொப்பு தாவுவதை பார்த்தபடி ஓய்வாக இருக்கின்றன. பல குரங்குகள் உடைக்கப்பட்ட சிதறு தேங்காய்களை சுவைத்தபடி இருக்கின்றன.

ஆலயச் சூழலில் பல வயோதிபர்கள் பயணிகளிடம் தர்மம் கேட்கும் ஐயா அம்மா என்ற தளர்வான குரல் ஓசைகள் எல்லாச் சத்தங்களையும் கடந்து எல்லோர் செவிகளையும் சென்றடைகிறது. அம்மாவிடம் உண்டியலுக்கு போடும் காசை அந்த ஐயாவுக்கு போடுங்கோ பாவம் என்றேன். சும்மா இரு ஐயாவுக்கும் கொடுப்பம் என்றார். அப்படியென்றால் உண்டி யலுக்கு போடும் காசை இன்னொரு ஐயாவுக்கு கொடுக்கலாமே என்றேன். அம்மா சடுதியாக

என்னை பார்த்த விதம் என் வாயை மூடிவிட்டது. ஆனால் மனதிற்குள் பேசிக்கொண்டேன் கேட்காத கடவுளுக்கு கேட்டுக்கேட்டுக் கொடுக்கின்றார்கள். கேட்கும் சக மனிதர்களுக்கு கொடுப்பதற்கு மனித மனம் தயங்குகிறதே. உண்டியலை நிரப்புவதை விட தர்மம் கேட்டு நிற்கும் மனிதர்களின் உண்டியை நிரப்புவது எவ்வளவு புண்ணியம் என்பது அம்மாவுக்கு மட்டுமல்ல பலருக்கு விளங்கவில்லையே என்று..

கிராமத்து கோயில்களில் திருவிழாக் காலங்களில் காணப்படும் மக்கள் கூட்டம் போல் முறிகண்டியில் பயணிகள். இங்கே சிங்களவர், தமிழர், முஸ்லிம், கிறிஸ்தவர் என இன, மத மொழி என்ற வேறுபாடின்றி வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்பவர்களும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வருகின்றவர்களும் தரித்து செல்வதனை முறிகண்டியில் காணும் போது புதுமையாக இருந்தது.

வருகின்ற பயணிகளில் இந்து சமயத்தவர்களும், சிங்களவர்களும் முறிகண்டி பிள்ளையாரை வழிபடுவார்கள். முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ பயணிகள் கச்சானும் வாங்கி சிற்றூண்டியும் அருந்தி இளைப்பாறி செல்வார்கள். பொதுவாக ஏ9 வீதியால் முறிகண்டியை கடப்பவர்கள் ஆலயத்தில் நிற்காமல் செல்வது கிடையாது. அப்படி சென்றால் தெற்கு நோக்கி செல்கின்றவர்கள் கொக்காவில் கடப்பதற்கு முன் வடக்கு நோக்கி வருகின்றவர்கள் கிளிநொச்சி வருவதற்குள் ஏதேனும் தடங்கல்கள் ஏற்படும் என்பது பெரும் நம்பிக்கையாக இருந்தது.



நாங்கள் மீண்டும் பஸ்சுக்குள் கச்சான் பைக்கற்றுகளுடன் ஏறிக் கொண்டோம். சுடச்சுட கச்சான் சுவையான கச்சான் என கூவியது வீண் போகவில்லை. எங்கள் பஸ் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட தயாராகி விட்டதாக சாரதி பயணிகளுக்கு பல தடவைகள் கோண் அடித்து கொண்டிருந்தார். நாங்களும் கிளிநொச்சியில் இறங்குவதற்கு தயாராக அம்மா மேலிருந்து பொதிகளை இறக்கி கொண்டிருந்தார். கோயிலை கடந்து பஸ் பயணிக்க மீண்டும் ஒருமுறை எல்லோரும் பிள்ளையாரப்பா என முணுமுணுத்துக்கொண்டனர். ஆலய சூழல் இயற்கையோடிருந் தது. பயணிகளிடம் நம்பிக்கை இருந்தது. முறிகண்டிக் கச்சானும் நல்லாயிருந்தது. நினைவுகளும் இன்றும் பசுமரத்து ஆணி போல இளையராஜாவின் இடைக்கால பாடல் போல இனிமையாக இருக்கிறது. இப்போது போனாலும் அப்போது போன அந்த நினைவுகள்தான் வந்து போகிறது.

இது அன்றைய முறிகண்டியின் நினைவுகள். ஆனால் இன்றைய முறிகண்டியில் எல்லாமே மாறிவிட்டது. முறிகண்டி பிள்ளையாரின் முகப்பை உரசியபடி சென்ற ஏ9 வீதியை காணவில்லை. அது சில மீற்றர்களுக்கு முன்னாள் வளைந்து செல்கிறது. ஆலய வளாகத்தில் உள்ள பாலை மரங்களில் குரங்குகளை காணவில்லை. தர்மம் கேட்கும் மனிதர்கள் இல்லை. நெற்றியில் திருநீறு பட்டையும், உரசிய சந்தனமும், குங்குமமும் வைத்தபடி கச்சான் விற்கும் கிழவன்களையும், கிழவிகளையும் காணவில்லை. அன்று போல் இன்று கற்பூரச்சட்டியின் சுவாலை நர்த்தனமாடவில்லை. பஸ்களும், வான்களும் நிற்பதில்லை. முன்பு போல் சாரதிகள் தங்கள் வாகனங்களுக்கு திருநீறு பூசுவதை காணமுடியவில்லை. சிதறு தேங்காய் தொட்டிக்குள் குவியல் குவியலாக உடைந்த தேங்காய்கள் இல்லை. இதனால்தான் என்னவோ குரங்குகளையும் காணவில்லையோ தெரியவில்லை. அன்போடு கச்சானுக்கும், தேனீருக்கும் கூவி அழைக்கும் சத்தங்களை கேட்க முடியவில்லை. கால் கழுவும் தொட்டிகளில் எப்பொழுதும் தளம்ப

முந்தைய காலத்தில் ஆலய தீர்த்த கிணறுகளில் எல்லாத் தேவைகளும் நீர் எடுக்கமாட்டார்கள். பயபக்தியோடு ஆலய விடயங்களில் நடந்துகொள்வார்கள். ஆனால் இன்று அவ்வாறு இல்லை. முறிகண்டி ஆலயத்தின் தீர்த்த கிணற்றிலிருந்துதான் மலசல கூடத்தின் தேவை தொடக்கம் எல்லாத்தேவைகளுக்கும் நீரை பெற்றுக்கொள்கின்றார்கள்.

. ஏ9 வீதியால் முறிகண்டியை கடப்பவர்கள் அங்கே நின்று பிள்ளையாரை வழிபடாமல் சென்றால் பயணத்தில் தடங்கல் ஏற்படும் என்பது பெரும் நம்பிக்கையாக காணப்பட்ட காலம். அத்தோடு கோயிலின் முன் சென்ற ஏ9 வீதி மாற்றப்பட்டதும் இன்றைய முறி கண்டியின் மாற்றத்திற்கு காரணம் எனலாம்.



தளம்ப நிறைந்திருக்கும் நீர் இன்றில்லை. அன்று ஆலய முற்றத்தில் செருப்புக்களையும், சப்பாத்துக்களையும் காணமுடியாது. இன்று கருவறை முறிகண்டியானின் கண்ணெதிரே காட்சிக்காக சில காணப்படுகிறது. இதுதான் இன்றைய முறிகண்டி.

காலமாற்றம் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. வேகமான இந்த உலகத்தில் மாற்றங்களும் வேகமாக நடந்துகொண்டிருக்கிறது. முறிகண்டியில் தெருவோரம் பாலை மரத்தின் கீழ் இருந்தமையினால் தெருமுறிகண்டி என்ற பெயர் பின்னர் திருமுறிகண்டியாக மருவியது போன்று மாற்றங்களும் நடந்திருக்கிறது. திருமுறிகண்டி தொடர்பில் சிலர் இவ்வாறு



தெரிவிக்கின்றனர்

**திருநாவுக்கரசு குககுமாரன்**

இவருக்கு வயது 55 முறிகண்டியில் தேனீர்க் கடை வைத்திருக்கின்றார். பிறந்ததிலிருந்து கோவிலுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருக்கின்றார். ஆலய வரலாற்றை குககுமாரன் இவ்வாறு கூறுகின்றார்.

1880 ஆம் ஆண்டு வைத்திலிங்கம் ஓசியர் என்பவர் தற்போது ஆலய முன்றலில் உள்ள கிணற்றினை வெட்டியிருக்கின்றார். ஆனால் கிணற்றில் நீர் வருவதாக இல்லை. இதனால் மனதளவில் சோர்வடைந்து காணப்பட்டார். ஓசியர் பின்னர் அன்றிரவு வைத்திலிங்கம் ஓசியரின் கனவில் வெட்டப்பட்டுள்ள கிணற்றில் ஒரு கல் இருக்கின்றது. அதனை எடுத்துவிட்டால் நீர் வரும் எனக் கூறப்பட்டிருக்கிறது. அவரும் அவ்வாறே செய்திருக்கின்றார். அதிசயம் நீர் வரத்தொடங்கியது. எனவே பிள்ளையார் வடிவிலான அந்த கல்லை வைத்திலிங்கம் ஓசியர் தற்போது உள்ள பாலை மரத்தின் கீழ் வைத்து சிறு கொட்டில் ஒன்றினையும் அமைத்து வணங்க ஆரம்பித்தார். ஆனால் ஏ9 வீதிக்கு மிகவும் அருகில் கல்லை வைத்து வணங்கியதை அவதானித்த ஓசியருக்கு பொறுப்பாக இருந்த ஆங்கிலேயர் அதனை ஏற்றுக்கொள்ளாது தற்போது முறிகண்டிப் பிள்ளையார் உள்ள பாலை மரத்தை வெட்டியுள்ளனர். வெட்டப்பட்ட பாலை மரத்தில் இருந்து இரத்தம் வடிந்திருக்கின்றது. இந்த அதியத்தை தொடர்ந்து ஆங்கிலேயரும் வைத்திலிங்கம் ஓசியரின் விருப்பின் படியே விட்டு விட்டனர். பின்னர் ஓசியருக்கு பின்னர் பலர் ஆலயத்தினை பராமரித்து வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர்.

தொடர்ந்து இந்த ஆலயத்தை பராமரித்து வந்த சின்னட்டியர் என்று அழைக்கப்படும் கனகசபை என்பவர் தெருவோரம் பாலை மரத்தின் கீழ் இருந்த பிள்ளையாரை அழகாக ஆலயம் அமைத்து தற்போது கோவில் இருக்கும் இடத்தின் பின்புறமாக கொண்டு செல்வதற்கு தீர்மானித்து ஆலய கட்டடத்தையும் அமைத்து மறு நாள் பிள்ளையாரை அங்கு கொண்டு செல்ல சின்னட்டியார் பணிகளை முன்னெடுத்திருந்தார். ஆனால் அன்றிரவு சின்னட்டியாரின்

கனவில் தோன்றிய பிள்ளையார் நான் தற்போது இருக்கும் இடத்தில் இருக்கவே விரும்புகின்றேன். அங்கு வரவில்லை என கூறிவிட்டார்.

எனவே பிள்ளையார் தான் கட்டிய கோவிலுக்கு வர மறுத்த சோகத்தில் சின்னட்டியார் தொடர்ந்து உபவாசம் இருந்து இறந்து விட்டதாகவும் அவரின் சமாதியே தற்போது ஆலய பின் வளவுக்குள் இருப்பதாகவும் கூறும் குககுமாரன், முறிகண்டி பிள்ளையார் கோவிலின் முற்றத்துக்கு ஊடாக சென்ற வீதி மாற்றப்பட்டதும், இலாபத்திற்காக பஸ்கள் போட்டிக்கு ஓடுவதும் இன்று முறிகண்டி சோபை இழந்து போனமைக்கு காரணம் என தெரிவிக்கின்றார்.

**அடுத்து சிறிபாஸ்கரன் பாமா இவ்வாறு முறிகண்டியை பற்றி கூறுகின்றார்.**

இவருக்கு வயது 54. ஆலயத்துடன் பிறந்ததிலிருந்து தொடர்புகளை பேணிவருபவர். குககுமாரன் கூறிய ஆலய வரலாற்றுக் கதையினை கூறும் பாமா அன்று இருந்த முறிகண்டி பிள்ளையார் சூழல் இன்று இல்லை எனவும் கவலை தெரிவிக்கின்றார். முந்தைய காலத்தில் ஆலய தீர்த்த கிணறுகளில் எல்லாத் தேவைகளும் நீர் எடுக்கமாட்டார்கள். பயபக்தியோடு ஆலய விடயங்களில் நடந்துகொள்வார்கள். ஆனால்,



இன்று அவ்வாறு இல்லை. முறிகண்டி ஆலயத்தின் தீர்த்த கிணற்றிலிருந்துதான் மலசல கூடத்தின் தேவை தொடக்கம் எல்லாத் தேவைகளுக்கும் நீரை பெற்றுக்கொள்கின்றார்கள். ஆலயங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை அதிகம் இருந்த காலம். ஆனால், இன்று அப்படி இல்லை. ஏ9 வீதியால் முறிகண்டியை கடப்பவர்கள் அங்கே நின்று பிள்ளையாரை வழிபடாமல் சென்றால் பயணத்தில் தடங்கல் ஏற்படும் என்பது பெரும் நம்பிக்கையாக காணப்பட்ட காலம். அப்படி நடந்தும் இருப்பதாக பல கதைகள் உண்டு. அத்தோடு கோயிலின் முன்சென்ற ஏ9 வீதி மாற்றப்பட்டதும் இன்றைய முறிகண்டியின் மாற்றத்திற்கு காரணம் எனலாம் என்றார்.

இதேவேளை, முப்பது வருடங்களாக கச்சான் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் முன்னர் நாள் ஒன்றுக்கு பத்தாயிரம் வரை வியாபாரம் செய்யுமளவுக்கு நிலைமைகள் காணப்பட்டது. ஆனால், தற்போது ஆயிரம் இரண்டாயிரம் என்ற கணக்கில் வியாபாரம் நடக்கிறது. முன்னர் இந்த வியாபாரத்தை நம்பித்தான் ஏழு எட்டு பேரை கொண்ட எங்கள் குடும்பம் வாழ்ந்தது. இன்று ஒரு ஆள் இதை நம்பி வாழ்க்கை சீவியத்தை கொண்டு செல்ல முடியாது இருக்கு எனக் கூறும் பொன்னுச்சாமி சந்தனம் எனும் கச்சான் விற்பனையில் ஈடுபட்டிருக்கும் 80 வயதையுடைய அம்மா, தற்போது முந்தி மாதிரி வாகனங்கள் நிக்கிறது இல்லையென்றும், அதனால் சனங்களும் இல்லையெனவும் சலிப்புடன் தெரிவித்தார்.

தற்போது முறிகண்டியில் கலகலப்பு இல்லை. பல கடைகள் வியாபாரம் இல்லாமல் மூடப்பட்டிருக்கிறது. முறிகண்டி பிள்ளையார் இப்பொழுது எவரின் கனவிலும் வருவதில்லை. இன்றும் போல் அதே பாலை மரத்தின் கீழ் அமைதியாக இருகின்றார். வாகனங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் முறிகண்டியை கடந்து செல்கின்றன. நாளும் விபத்துக்கள் நடக்கின்றன. மறுநாள் பத்திரிகைகளில் படங்களுடன் வெளிவருகிறது. இப்படி காலச்சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது.

**எல்லோரும் சொல்வது போன்று மாற்றம் ஒன்றே மாறவில்லை...**



ஆரோக்கியநாதன் சுதா

# தமிழ் மக்களிடம் பிரதேசவாதங்களைத் தூண்டுவது யார்?




**இந்த மக்களுடைய வாழிடங்கள் பாரபட்சமான ரீதியில் ஓரங்கட்டப்பட்டன. கிளிநொச்சி மக்களின் பொது அடையாளமாகவும் கிளிநொச்சியின் ஆதாரமாகவும் இருக்கிற இரணைமடுக்குளத்தின் தண்ணீரில் சிறு அளவு கூட இந்த மக்களுக்குக் கிடையாது. ஏற்று நீர்ப் பாசனத்தில்கூட இவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட இல்லை. வாய்க்கால் பாசனத்தில் இவர்களுக்கான நிலம் ஒதுக்கப்படவும் இல்லை.**

தமிழ் மக்களிடம் பிரதேசவாதம் தூண்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பலமாக வைக்கப்படுகின்றது. இப்படிப் பிரதேசவாதங்களைத் தூண்டுவோர் அரசுக்குச் சார்பாகவே அதைக் கையாள முற்படுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பிரதேசவாதத்தைத் தூண்டுவதன் மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமை உணர்வைச் சிதறடித்து விடுகிறார்கள். இப்படித் தமிழ் மக்கள் பிரதேச ரீதியாகவும் வேறு பல உள் முரண்பாடுகள் காரணமாகவும் பிளவுபடும்போது அதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு, அரசாங்கமும் சிங்கள இனவாதமும் தமிழ் மக்களைப் பல வீனப்படுத்தி விடுகின்றன. தமிழ் மக்கள் பலமாக இருக்க வேண்டுமானால், அவர்கள் பிரதேச வேறுபாடுகளைக் கடந்து, சாதி, மத வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், வர்க்க வேறுபாடுகளின்றி ஒற்றுமையாக இருக்க வேண்டும். தமிழ்த்தேசியச் சிந்தனையின் கீழ் ஐக்கியப்படுவதே இதற்கான வழி என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

மேலோட்டமாகப் பார்த்தால் இது ஒருவகையில் சரிபோலப்படும். ஏனென்றால், இலங்கையின் கடந்த கால இன வன்முறையும், இனரீதியான சட்ட வாக்கங்களும் நிர்வாக நடைமுறைகளில் காட்டப்படும் பாராபட்சங்களும் போரும்

தமிழ்த் தேசிய வாதத்தையும் அதன் கீழ் ஐக்கியப்படுவதையும் நியாயப்படுத்தும் காரணங்களாக உள்ளன. ஆனால், தமிழ்த்தேசியத்தின் கீழான இந்த ஐக்கியப்பாடு என்பது நடைமுறையிலும் யதார்த்தத்திலும் எப்படி உள்ளது என்பதே இங்கே கேள்விக்குரியது.

ஏனென்றால், நடைமுறையில் பிரதேச ரீதியான வேறுபாட்டுணர்வும் பிரதேச ரீதியான பாரபட்சங்களும் காட்டப்படுகின்றன. பேணவும்படுகின்றன. இதனால், பின்தங்கிய பிரதேச மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள். குறிப்பாக வன்னிப் பிரதேசத்தை யாழ்ப்பாணத்தவர்கள் இரண்டாம் நிலையிலேயே பார்க்கிறார்கள்.ஏனென்றால், நடைமுறையில் இந்தப் பாரபட்சம் வலுவாக உள்ளதை வைத்தே இப்படிக் கூறவேண்டியிருக்கிறது. வன்னியில் இன்று அடிப்படை வசதிகள் தாராளமாக உருவாக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சிறப்பாக உள்ளது.

வீட்டுவசதிகள் தாராளமாக இருக்கின்றன. மின்சாரவசதி, மருத்துவ ஏற்பாடுகள் எல்லாம் தாராளமாக உண்டு. இப்படியெல்லாம் இருந்தாலும் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு வந்து சேவையாற்றுவோரில் 95 வீதமானவர்களும் வன்னியில் இருக்க விரும்புவதில்லை. அது மட்டுமல்ல, வன்னிக்கு வந்து வேலைசெய்யவே விரும்புவதும் குறைவு. மாகாணசபையோ, ஆளுநரோ கொடுக்கின்ற அழுத்தங்களின் காரணமாகத்தான் இவர்களில் அநேகர் வெளிமாவட்டச் சேவை என்ற அடிப்படையில் வன்னிக்கு வருகிறார்கள். அப்படி வருவோர் எப்போதும் வீதியில் அல்லது பஸ்ஸில் ஒரு காலையும் மண்ணில் ஒரு காலையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளிமாவட்ட சேவைக் காலம் முடிந்து ஒரு நாள்கூட இவர்கள் வன்னியில் தங்கியிருக்க விரும்புவதில்லை. இதேவேளை அதிகாலை வேளையிலேயே எழுந்து பல சிரமங்களின் மத்தியில் வன்னிப் பகுதிக்கு வந்து தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் ஊழியர்களும் உள்ளனர். வன்னியில் சேவையாற்ற விரும்புகிறேன் என்று கேட்டு வந்து பணிசெய்கின்றவர்களும் உள்ளனர். இவர்கள் போற்றுதற்குரியவர்கள். ஆனால், இவர்களின் விகிதாசாரம் குறைவானது.

ஆகவே பிற பிரதேசங்களை இரண்டாம் நிலையில் பார்க்கின்ற நிலை தனியே வன்னியில் மட்டும் நிலவவில்லை. மட்டக்களப்பிலும் இந்த நிலையைக் காண முடியும். பின்தங்கிய பிரதேசங்களை நோக்கி பலருடைய கண்களும் மனங்களும் திறப்பதில்லை. ஆனால், இந்தப் பிரதேச மக்களும் தமிழ்த் தேசியத்தின்பால் தங்களை ஐக்கியப்படுத்தியே நின்றிருக்கிறார்கள். அப்படி தங்களை ஐக்கியப்படுத்தி நிற்கும் மக்களை பிரதேச ரீதியாகப் பிரித்துப் பார்ப்பது யார்? அந்த நிலை ஏன் தொடர்கிறது? பிரதேச ரீதியான ஒதுக்குதலும் ஒடுக்கலும் மட்டுமல்ல, சாதி, மத ரீதியான ஒடுக்குதல்களையும் பாரபட்சங்களையும் கூட நாம் பல இடங்களிலும் காண முடிகிறது. இதுவும் வருத்தத்திற்குரிய ஒரு நிலையே.இதுபோலவே, வடக்குக், கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே இருந்து இன வன்முறை காரணமாக வன்னிக்கு வந்த மலையகத் தமிழர்கள் பிரதேச ரீதியாக வேறுபடுத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக இப்பொழுது சற்றுக் கடினமாகப் பேசப்படுகிறது. இந்த நிலையைக் குறித்து அண்மையில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பிரதம நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும் குறைப்பட்டிருக்கிறார். அத்தோடு வருத்தமும் தெரிவித்திருக்கிறார். இதற்கு அரச அதிகாரிகளை அவர் நேரடியாகக் குற்றமும் சாட்டியிருக்கிறார். இந்த நிலை தொடர அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் சொல்லியிருக்கிறார்.

**இந்த மக்களே கூலிகளாக வன்னியை வளப்படுத்திக்கொண்டிருப்பவர்கள். இவர்கள் வெட்டிய கிணறுகளே இன்று வன்னியில் உள்ளவற்றில் அநேகமானவை. காடுகளைக் களனியாக்கியவர்களும் இவர்களே. விடுதலைப்போராட்டம் நடந்தபோதும் இந்த மக்களின் பங்களிப்பே அதிகமாக இருந்தது. பங்கர் வெட்டுவது, எல்லைப்படைக்குச் செல்வது, இயக்கத்தின் பல்வேறு பணிகளில் ஈடுபடுவது என்று குடும்பத்தவர்களும் போராளிகளாகப் பிள்ளைகளும் போர்ப்பணியிலும் போராட்டப்பங்களிப்பிலும் தங்களை அர்ப்பணித்தவர்கள். இதற்குப் பிரதானமான காரணம் இவர்களுடைய வாழ்நிலையாகும். பொருளாதார வசதி குறைந்தவர்களாகவும் வெளிநாடுகளை நோக்கிச்செல்லும் வாய்ப்புகள் அற்றவர்களாகவும் உயர் கல்வியை நோக்கிச் செல்ல வசதியற்றவர்களாகவும் இருந்ததே இவர்கள் போரை நோக்கியும் போராட்டத்தை நோக்கியும் அதிகமாக உள்ளீர்க்கப்பட்டதற்குக் காரணமாகும்.**

இப்படியெல்லாம் முதல்வர் சொன்னவை சரியானவையா? என்ற கேள்வி ஒரு புறம் இருக்க, இந்தப் பாரபட்ச நிலை இனிமேல் தொடராதா என்ற கேள்வியே இங்கே முதன்மையாக உள்ளது.

ஏனென்றால், வன்னியல்தான் அதிகமான அளவில் மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதிலும் கிளிநொச்சி மாவட்டத்திலேயே இவர்கள் கூடுதலாக உள்ளனர். இந்த மக்களின் இளைய தலைமுறையினர் இப்பொழுது கிளிநொச்சியைத் தமது பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர்களாகவும் மாறியுள்ளனர். எனினும் இந்த மக்கள் பல நிலைகளிலும் பாரபட்சமாகவும் வேறுபடுத்தியும் பார்க்கப் படுகின்றனர் என்பது ஒன்றும் ரகசியமானதல்ல. இந்த மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களுக்குச் சென்று பார்த்தால் இந்த நிலையை நேரில் காணமுடியும்.

ஆனால், இந்த மக்களே கூலிகளாக வன்னியை வளப்படுத்திக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் வெட்டிய கிணறுகளே இன்று வன்னியில் உள்ளவற்றில் அநேகமானவை. காடுகளைக் களனியாக் கியவர்களும் இவர்களே. விடுதலைப் போராட்டம் நடந்தபோதும் இந்த மக்களின் பங்களிப்பே அதிகமாக இருந்தது. பங்கர் வெட்டுவது, எல்லைப்படைக்குச் செல்வது, இயக்கத்தின் பல்வேறு பணிகளில் ஈடுபடுவது என்று குடும்பத்தவர்களும் போராளிகளாகப் பிள்ளைகளும் போர்ப்பணியிலும் போராட்டப்

பங்களிப்பிலும் தங்களை அர்ப்பணித்தவர்கள். இதற்குப் பிரதானமான காரணம் இவர்களுடைய வாழ்நிலையாகும். பொருளாதார வசதி குறைந்தவர்களாகவும் வெளிநாடுகளை நோக்கிச் செல்லும் வாய்ப்புகள் அற்றவர்களாகவும் உயர் கல்வியை நோக்கிச் செல்ல வசதியற்றவர்களாகவும் இருந்ததே இவர்கள் போரைநோக்கியும் போராட்டத்தை நோக்கியும் அதிகமாக உள்ளீர்க்கப்பட்டதற்குக் காரணமாகும்.

போர் முடிந்த பின்னரும் இந்த மக்களே அதிக இன்னல்களைச் சந்தித்தனர். ஏற்கனவே இந்த மக்களுடைய வாழிடங்கள் பாரபட்சமான ரீதியில் ஓரங்கட் டப்பட்டன. கிளிநொச்சி மக்களின் பொது அடையாளமாகவும் கிளிநொச்சியின் ஆதாரமாகவும் இருக்கிற இரணைமடுக்குளத்தின் தண்ணீரில் சிறு அளவு கூட இந்த மக்களுக்குக் கிடையாது. ஏற்று நீர்ப்பாசனத்தில்கூட இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வாய்க்கால் பாசனத்தில் இவர்களுக்கான நிலம் ஒதுக்கப்படவும் இல்லை. ஆனால், இரணைமடுக் குளத்தைப் பற்றிய உரையாடல்களில் இவர்கள் கறிவேப்பிலையைப்போலப் பயன்படுத்தப்படுகிறார்கள். இதுபோல பின்னர் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி போன்ற பல மேம்பாட்டுத்திட்டங்களிலும் இவர்கள் ஓரங்கட்டப்பட்டே வந்துள்ளனர்.

இது மட்டுமல்ல அரசியல் நடவடிக்கைகளிலும் இவர்கள் பயன்படுத் தப்பட்டுள்ளனரே தவிர, இவர்களுக்கான அங்கீகாரம் முறையாக வழங்கப்பட வில்லை. ஒரு வேட்பாளரைக்கூட இந்த மக்களின் சார்பாக நியமிப்பதற்கு அரசியற்கட்சிகள் சிந்திக்கவில்லை. மாகாணசபைத் தேர்தலில் ஒரு பிரதிநிதியை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நியமித்திருந்தது சற்று ஆறுதளிக்கின்ற விடயம். இதைத்தவிர, விடுதலைப்புலிகளின் காலத்திலும் கூட இந்த மக்கள் செறிந்து வாழும் கிளிநொச்சி மேற்கு உதயநகர், அம்பாள்குளம், ஆனந்தநகர் போன்ற பகுதிகளை நகர நிர்மாணம் என்ற பேரில் சுவீகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னணியில் அப்பொழுது மாவட்ட செயலக நிர்வாகத்தில் உயர் நிலையிலிருந்த அதிகாரிகள் மிகத் தீவிரமாகச் செயற்பட்டனர்.

தென்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இங்கே வந்திருந்த இந்த மக்கள் தாங்களாகவே இந்தப் பகுதிகளில் காடுகளை வெட்டிக் குடியேறியவர்கள். இவர்களுக்கு அப்போதிருந்த எந்த நிர்வாக அதிகாரிகளும் உரிய முறைப்படி நல்ல காணிகளை இனங்காட்டவோ, வழங்கவோ இல்லை. இந்த நிலையில் வளமற்ற பகுதி என்று ஒதுக்கி விடப்பட்ட காணிகளைச் சிரமப்பட்டே இவர்கள் அபிவிருத்தி செய்திருந்தனர். அப்படி இருந்த பகுதிகளையே நகர நிர்மாணத்துக்கு விடுதலைப்புலிகளும் நிர்வாக உயர் அதிகாரிகளாக இருந்தோரும் தெரிவு செய்திருந்தனர். இது அந்த மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவ டிக்கையாகும். இந்த நிலையில் அந்த மக்கள் இதனை எதிர்த்து கறுப்புத் துணி களை வீடுகளில் கட்டிப் பெரியதொரு போராட்டத்தை அமைதியான முறையில் நடத்தியிருந்தனர். இதனையடுத்து இந்தக் காணி அபகரிப்புத் திட்டம் அன்று கைவிடப்பட்டது.

ஆனாலும் பாரபட்சங்களும் ஒதுக்குதல்களும் குறையவில்லை. அதேவேளை இதைப்பற்றி பகிரங்கமாகப் பேசுவது மட்டும் தவிர்க்கப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் போரின்போது பல தரப்பினருடைய ஆதரவும் தேவை என்ற ஒரு நிர்ப்பந்தம் இருந்ததே.

இந்த நிலை மெல்ல மாற்றமடையத்தொடங்கியது. மீள்குடியேற்றத்தின்போது தான். அப்பொழுது சகல இடங்களுக்குமான அபிவிருத்திப் பங்கீடுகள் பற்றிச் சிந்திக்கப்பட்டன. இதில் அந்த மக்களுடைய பங்கேற்பு அதிகமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன. இந்த மக்களுடைய தேவைகளும் குரல்களும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் வலியுறுத்தி வந்தார்.

இதன்விளைவாக இந்த மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களின் பாடசாலைகளை தரமுயர்த்தப்பட்டு வளங்கள் பகிரப்பட்டன. அம்பாள்குளம் விவேகானந்த வித்தி யாலயம், மலையாளபுரம் திருவள்ளுவர் வித்தியாலயம், கிருஸ்ணபுரம் இராமகிருஸ்ண வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் புதிதாக உருவாக்கப்பட் டன. இதைவிட இந்தப் பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கீடும் வள ஒதுக்கீடுகளும் சமனிலைப்படுத்தப்பட்டு அளிக்கப்பட்டன. இதன் அடுத்தகட்டமாக இந்த மக்கள் வாழ்கின்ற பகுதியை அண்மித்து தற்போது பல்கலைக்கழகத்தின் பொறியிற் பீடமும் விவசாய பீடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே இந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கடந்த மாகாணசபைத் தேர்தலின் பொழுது வேட்பாளர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

> தென்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இங்கே வந்திருந்த இந்த மக்கள் தாங்களாகவே இந்தப் பகுதிகளில் காடுகளை வெட்டிக் குடியேறியவர்கள். இவர்களுக்கு அப்போதிருந்த எந்த நிர்வாக அதிகாரிகளும் உரிய முறைப்படி நல்ல காணிகளை இனங்காட் டவோ, வழங்கவோ இல்லை. இந்த நிலையில் வளமற்ற பகுதி என்று ஒதுக்கி விடப்பட்ட காணிகளைச் சிரமப்பட்டே இவர்கள் அபிவிருத்தி செய்திருந்தனர். அப்படி இருந்த பகுதிகளையே நகர நிர்மாணத்துக்கு விடுதலைப்புலிகளும் நிர்வாக உயர் அதிகாரிகளாக இருந்தோரும் தெரிவு செய்திருந்தனர்.

இது நடைமுறை ரீதியில் பாரபட்சங்களைக் கடப்பதற்கான ஒரு முயற்சியாகும். ஆனால், இந்தச் செயற்பாடுகளின் மூலமாக பிரதேச வேறுபாடோ சமூக ஏற்றத் தாழ்வுகளோ உடனடியாக மாறி விட்டன என்று சொல்வதற்கில்லை. இதற்காக இன்னும் எவ்வளவோ மாற்றங்களை உறுதியாகவும் அர்ப்பணிப்போடும் செய்ய வேண்டும்.

வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற மக்களை சாதி, மத, பிரதேச, வர்க்க வேறுபாடுகளைக் கொண்டு நோக்காமல் மானுட நேயத்தோடு நோக்குங்கள் என்று கேட்க வேண்டியுள்ளது. அரசியல் பகடைக்காய்களாக இந்த மக்கள் பயன்படுத்தப்படாமல், அரசியல் விடுதலையைத் தரும் வழியில் இவர்களை உள்ளெடுக்க வேண்டும். ஆனால், இப்பொழுதும் இவர்கள் அரசியல் மோசடி செய்யப்படும் நிலையிலேயே உள்ளனர். இவர்களை வைத்தே புதிய பரப்புரைகள் நடக்கின்றன. இதைக் குறித்த விழிப்பு ணர்வும் இந்த மக்களிடையே ஏற்பட வேண்டும்.



சிறுகதை

# பொன்னகரம்

**புதுமைப்பித்தன்**

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வபுண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்பட வேண்டிய விதிதான். ஒருசில மகாராஜர்களுக்காக இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வே தண்ட வாளத்தின் பக்கமாக, சாராயடிப் போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அதுதான் அங்கு மெயின் ராஸ்தா. கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால், இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிர தேசத்தைத் தரிசிக்க வேண்டு மானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும். பொழுது சென்றால்தான் கண் கொள்ளாக் காட்சியாக இருக் கும். வழிநெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக முனிசிபல் கங்கை - அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக் கும்? - அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள். ஆமாம், வசிப்பதற்குத்தான்! தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை - சாதாரண எண் ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஸ்ண பட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தை களுக்கு மீன் பிடித்து விளையாடுவதில் வெகுபிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகியபழம், ஊசியவடை, இத்யாதி உருண்டுவரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக் கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? போனால் பெற்றோருக்குத் தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன, கிளாக்ஸோ, மெல்லின்ஸ் பூட் குழந்தைகளா, கம்பி இடையில் போகமுடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று குட்மார்னிங் சார்! என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான்

**எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்துவிட்டு திரும்பி வருகிறாள். சந்தின் பக்கத்தில் ஒருவன் – அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன். இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்! என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!**

அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகலவென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழு திருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்கவரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒருபாரதப் போர். இள வயதில் நரைத்தது போல் பஞ்சுபடிந்த தலை, மாசடைந்த கண்கள் - விடிய விடிய மின்சார ஸ்பின் டிலைப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா,விஸக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படி யாவது உயிர் வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்துவந்தான் அவைகளும் அவனைக் கொன்றன. அவனும் அவை களைக் கொன்றான். அதற்காக வலிமையற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒருபெரிய வேட்டை, அதற்கென்ன?

கழுத்தில் ஒருகறுப்புக் கயிறு வாழ்க்கைத் தொழுவின் அறி குறி. அதைப் பற்றி அங்கு அதிக கவலையில்லை. அதுவேறு உலகம் ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒருமில் கூலி. வயது இருபது அல்லது இரு பத்திரண்டிற்குமேல் போகாது. புருஸன் ஜட்கா வைத்தி ருக்கிறான் சொந்த வண்டிதான். அம்மாளு, முருகேசன் (அவள் புருஸன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை - ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு - (குதிரை உட்பட), வீட்டு வாடகை,பொலீஸ் மாமூல், முருகேசன் தம்பி திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள்தான்.

எல்லாரும் ஏகதேசக் குடியர்கள் தான். டல் ஸீஸனில் பசியை மறக்கவேறு வழி? பசி, ஐயா, பசி! பத்தும் பசி வந்திடப் பறந்து போகும். என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால் உமக்கு அடி வயிற்றிலிருந்துவரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனும் அவன் குதிரையும் தண்ணிபோட்டு விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி போக்கர் அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்கு பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும் பொழுதுபேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந் தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டுநாள் இருக்கிறது. வீட்டில் காசேது. அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள். 'கும்'மிருட்டு பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும். ஆனால் அதுமேகத்தில் மறைந்துகொண்டால் முனிசி பாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச் சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்துவிட்டு திரும்பி வருகிறாள். சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் கண் வைத்தி ருந்தவன்.

இருவரும் இருளில் மறை கிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம், புருஸனுக்குப் பால் கஞ்சிவார்க்கத்தான்!


என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்! ✹

# பிரிவு

புயலில் சிக்கி மரித்து விட்டது
நம் பிரிவு
தப்பிக்க வழி உண்டானால்
மீண்டு வா இல்லையெனில்
நிரந்தரமற்ற நம் பிரிவு நிஜமாகிவிடும்

நாம் இருவர் அல்ல ஒருவர் தான் மனதளவில்
அன்புக்கு இலக்கணம் கூறிய நம் காதல்
பிரிவினால் வாடியபோதும்
பரிவுடன் ஏங்குகிறது இன்னும்
உன் அன்புக்காக...

காலத்தின் வேகத்தால்
காணாமல் போன காதலை எண்ணி
காலன் அவன் மகிழ்வுற்றானோ
நானறியேன்...
இருப்பினும் நான்
தொலைவில் இருக்கும் உன்னைவிட
அருகில் இருக்கும்
தொலைபேசியை நேசிக்கிறேன் அதிகமாக
ஏனெனில் நீ கொடுத்த முத்தங்களை இதமாக
என் கன்னங்களில் என்றோ சேர்த்ததால்
இன்றும் நேசிக்கிறேன் இதமாகவே..........



இனியவன்

வன்னிப் பெரும்பரப்பு என்பது நீர் வளம். நிலவளம், காடுகள், இயற்கையான பல்வேறு வளங்களில் நிறைந்துள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னாரில் ஒருபகுதி, வவுனியாவில் பெரும் பகுதிகள் உள்ளடக்கிய 4000 சதுரகிலோ மீற்றர் பரப்பளவை சுட்டும் ஒரு பொதுச் சொல்லாகும்.

இப்பிரதேசத்தின் நீண்ட நிலத் தொடர்ச்சி காரணமாக குடிசன அடர்த்தி என்பது ஒரு சவாலானதாகவே உள்ளது. வறுமையும் நிச்சயமற்ற சூழ்நிலையினாலும் கடந்த நான்கு தசாப்தங்களாக இயற்கை அதிகரிப்பு வீதமும் வெகுவாக குறைவடைந்துள்ளது. சனத்தொகை பெருக்கம் மீது செல்வாக்கை செலுத்திய இளைய தலைமுறையினர் முரண்பாட்டு போரில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட குழுமமாக அமைந்தமையினால் சனத்தொகை அதிகரிப்புக்கான இயற்கையான உந்துவிசை மிகவும் குறை வடைந்தே காணப்படுகிறது. இலங்கையின் தேசிய மட்டத்திலான இயற்கை அதிகரிப்பு வீதம் 1.2% சதவீதமாக அமைந்தபோதிலும் வன்னிப்பெரும் பரப்பில் இது 0.7% க்கும் குறைவாகவே இருக்கிறது. உயிர் பிழைத்தோரிலும் கூட




**கிளிநொச்சியான்**

# வன்னிக்கான இழுவிசை இயங்கு மூலங்களை விரைவாக்க வேண்டும்


புத்தாக்கம் செய்யக்கூடியளவிலான ஆற்றல் பாதிக்கப்பட்ட பாரிய உடற் காயங்களை கொண்டவர்களாகவே காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் அடுத்த ஒரு தசாப்தம் சனத்தொகை யின் இயற்கை அதிகரிப்பில் இந்த விதமான பாதிப்பு போரில் ஈடுபட்ட இரு தரப்புக்குமே இருக்கிறது என்பதனை ஆய்வு செய்த பின்னர்தான் கடந்த ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் 03வது குழந்தையினைப் பெறும் படை வீர ருக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்திருக் கின்றது. இது போன்ற ஒன்றும் இப் பிரதேச பொதுமக்கள் நலனுக்காக செய்யப்படவில்லை என்பதும் இங்கு கவலையளிக்கும் விடயமாக உள்ளது.

எவ்வாறாயினும் சனச்செறிவு என்பது இயற்கை அதிகரிப்புடன் உள் வரும் சனத்தொகை வெளியேறிச்செல் லும் சனத்தொகை ஆகிய மூன்று பொறி முறைகளிலும்தான் நிர்ணயம் செய்யப்படுகின்றது. உள்வரும் சனத்தொகையினது போக்கானது மிக குறைந்த மட்டத்தில்தான் தற்போது காணப்படுகின்றது. கிளிநொச்சி

மாவட்டத்தில் 41061 குடும்பங்களைச் சேர்ந்த 135809 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில 38511 குடும்பங்களைச் சேர்ந்த 122554 பேரும் வவுனியா மாவட்டத்தில் 52408 குடும்பங்க ளைச் சேர்ந்த 186615பேரும் தான் தற்போது வசித்து வருகின்றனர். ஒரு பிரதேசத்தினை நோக்கி சனத்தொகை தானாக உள்வருவதற்கு அப்பிரதேசத்தில் காணப்படும் இழுவிசை காரணிகள் சிறப்பாக அமைதல் வேண்டும் என்பதுமே குடியேற்ற முறைமை கோட்பாடு சுட்டுகிறது.

இவ்வகையில் யுத்தம் காரணமாக பெருமளவு உட்கட்டுமானங்கள் சிதை வடைந்துள்ள நிலையில் வீதிப்போக்கு வரத்துக்கும் மின்சாரமும் பல கிராமங் களுக்கு நம்பிக்கையளித்தாலும் இது ஒரு இழுவிசை மட்டத்துக்கு இன்னும் உயரவில்லை என்பதுடன் யுத்தகாலத்தில் வாழ்ந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுமே அந்த யுத்தத்துக்காக உயிர்விலை செலுத்திய குடும்பங்களாக இருப்பதனால் இப்பிரதேசம் பற்றிய முழுமையான மனப்பதிவு இன்னமும் மாற்றமடைய வில்லை. சரி பிழைகளுக்கப்பால் மீண்டும் புலி உறுமல் என சில பத்திரிகைகள் மகிழ்ச்சி கொள்வது போல சில சம்பவங்கள் வன்னி மண் சம்பந்தப்பட்டு வெளிவருவது இழுவிசைக்கு மாறாக இம்மண்ணிலிருந்து மீளவும் மக்களை வெளித்தள்ளிவிடும் ஒரு அவலத்தை தோற்றிவித்துள்ளது. இவ்வகையில் இழுவிசைக் காரணியாக வன்னியில் இப்போது இருக்கும் ஒரே ஒரு காரணி நிதியுதவியுடன் இடம்பெறும் வீடமைப்பு திட்டங்கள் மட்டுமேயாகும்.

இதிலும் கூட வீடு ஒன்றை பெறும்வரை தமது பங்கீட்டு அட்டைகளை பல குடும்பங்கள் வீடு கட்டி திட்டத்தின் பணம் முழுமை யாக பெற்றபின் வெளியேறுவதாக சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கள்கூட உண்மைக்கு புறம்பானதாக அமையவில்லை என்பதனால் புதிய



சனத்தொகையின் உள்நுளைவு என்பது இழுவிசையினால் நிகழமாட்டாது என்பதனையே காட்டி நிற்கின்றது. மாறாக இழுவிசையை அதிகரிக்கக் கூடிய ஒரு மகத்தான வாய்ப்பை வழங்கக்கூடிய வடக்கு மாகாணசபையினது வாய்ப்பை வழங்கக்கூடிய வடக்கு மாகாண சபையினது அமைவிடம் மாங்குளத்தை மையப்படுத்தி நிகழ்ந்திருக்குமாயின் வன்னிப் பெரும்பரப்பின் எதிர்காலம் நியாயமான பாதையில் செல்வதனை தூண்டியி ருக்கும். எனினும் அவ்வாறான எந்தச் சமிக்ஞைகளுமே இடம்பெறாது அதற்கு மாறான சம்பவங்களே இடம்பெறுகின்றன. விவசாய பூமியான இப் பெரும்பரப்பை மையப்படுத்தி கிளிநொச்சியில் இயங்கிய மாகாண விவசாய அமைச்சுக்கூட இப்போது மாற்றப்பட்டிருப்பது உள்ளக நிர்வாக பொறிமுறையில் தூரநோக்கு எண்ணங்களுக்கு அப்பால் சமகால சுயநல நோக்கே மேல்நோக்கி நிற்கின்றது என்பதனை காட்டி நிற்கின்றது.

விவசாய பல்கலைக்கழக மும் பொறியியல் பீடமும் கிளிநொச் சியை மையப்படுத்தி செயல்பட ஆரம்பித்திருப்பது ஒரு நல்ல சமிக்ஞையாகவுள்ளது. எனினும் இழுவிசையற்ற ஒரு பிரதேசம் என்பதனைதான் ஒவ்வொரு நாளும் குடாநாட்டிலிருந்து வரும் ஊழியர்கள் குழுமம் நிலை நிறுத்தி வருகின்றது. விடுதி வசதிகளும் புதிய பல வீடுகளும் கட்டப்பட்டுள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு, மடு, மாந்தை மேற்கு, துணுக்காய், பாண்டியன்குளம், நெடுங்கேணி, புளியங்குளம், மாங்குளம், ஒட்டி சுட்டான், பூநகரி, கண்டாவளை என பரந்து கிடக்கும் பிரதேசங்களில் ஒரு வீட்டை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் ஒரு அரச அலுவலர் மாதம் 3000 ரூபாவுக்கு மேல் செலவிடத் தேவையில்லை.

அத்துடன் மலிவான அரிசி, உடன்கறந்த பால், இடையிடையே தேனும் காட்டிறச்சிகளும், தேவையான பழங்கள், மலிவான விலையில் பெறக்கூடிய வன்னியில் ஒரு தற்காலிக சனத்தொகையாக தாங்குவதற்குகூட யாரும் தயாராகவில்லை என்பது எதனைக் காட்டுகிறது. அதிகாலை 03 மணிக்கு எழுந்து மதிய உணவுடன் வரும் இவர்கள் மாலைக்குள் வீடு செல்லும்போது 6000 – 8000 ரூபா வரை போக்குவரத்துக்காகவும் அடிக்கடி பயணிப்பதால் பஸ்களிலே தூக்கத்தை நிறைவேற்ற வேண்டிய அவலத்தையும் நாங்கள் தினமும்

(நேர்முகத் தேர்வு)

48 ஆம் பக்க தொடர்...

**விழிப்புணர்வு:**

உங்களின் நேர்முகத்தேர்வு செயல்பாட்டில் விழிப்புடன் இருக்கவும். ஏனெனில் உங்களின் முந்தைய பணி மற்றும் அந்த நிறுவனத்துடனான உங்களின் உறவு போன்றவை பற்றி கேள்விகள் கேட்கப்படுகையில், எச்சரிக்கையுடனும், தந்திரமாகவும் பதிலளிக்க வேண்டும். ஒருவேளை உங்களின் பழைய அனுபவம் கசப்பானதாக இருந்தாலும், அவற்றைப் பற்றி சாதகமான பதிலையே கூறவும். பேசும்போது நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதத்தில் பேசவும். பேசியவற்றையே திரும்ப திரும்ப பேசினால் நீங்கள் பதட்டத்தில் இருக்கிறீர்கள் என்று காட்டிக் கொடுத்துவிடும். மேலும் கால்களை ஆட்டிக்கொண்டே இருத்தல் மற்றும் கைகளை இறுக்கமாக பற்றியிருத்தல் போன்ற உங்களின் செயல்கள் நீங்கள் பயத்தில் இருக்கிறீர்கள் என்பதை காட்டிக்கொடுத்து விடும்.

**கேள்விகள்:**

நேர்முகத்தேர்வாளரிடம், ஆரம்பத்திலேயே விடுமுறை, பிற வசதிகள் போன்றவற்றை பற்றி கேட்கக்கூடாது. முதலில் நேர்முகத் தேர்வு முழுவதும் முடிய வேண்டும். நீங்கள் தேர்வு செய்யப்பட்டு விட்டீர்கள் என்று தெரிந்த பின்னர், நிறுவனத்தின் சலுகைகள் மற்றும் வசதிகளைப் பற்றி கேட்கவும். மேலும் இவற்றைவிட, நேர்முகத்தேர்வாளர் சம்பள விவரத்தை பற்றி பேச அவருக்கு முதலில் வாய்ப்புதர வேண்டும். நேர்முகத்தேர்வின்போது முதல் சில நிமிடங்களில் நீங்கள் வெளிப்படுத்தும் உங்களின் செயல்பாடுதான், உங்களுக்கான வாய்ப்பை தீர்மானிக்கிறது. எனவே பதற்றப்படாமல் நன்கு யோசித்து செயல்படவும்.

நேர்முகத்தேர்வு என்பது ஒரு போர்க்களம் போன்றது அல்ல. எனவே அதை நினைத்து பெரிதாக பயப்பட தேவையில்லை. அதே சமயம் வாழ்க்கை போராட்டத்தில் அது முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே அசட்டையாக இல்லாமல், சற்று விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருந்தாலே வெற்றியை நிச்சயமாக்கிக் கொள்ளலாம்.




**(வன்னிக்கான இழுவிசை)**

**தொடர்....**

பார்க்கின்றோம். காரைநகர் சாலை, பருத்தித்துறை சாலை, யாழ்ப்பாண சாலை, வவுனியா சாலை என்பவற்றில் இயங்கும் பேரூந்துகளில் 60 சதவீதமானவை இவர்களுக்காக இயக்கப்படுவதனை பார்க்கும்போது வன்னியின் உள்வரவு எப்படி நிகழப்போகிறது என்பதனை நாம் எதிர்வு கூறமுடியாதுள்ளது. வாழத்தகுதியற்றவர்களின் வாழ்விடம் போலவே வன்னிப்பரப்பு இப்போதுள்ளது. வேரவில் வைத்தியசாலைக்கு தாதிய அலுவலரை பெற தேசிய மட்டத்தில் விவாதங்கள் நிகழ்கிறது.

இவ்வகையில் இழுவிசை காரணிகள் தொழில்பட்டு இப்போதைக்கு இப்பிரதேசத்தை நோக்கி சனத்தொகையை எடுத்து வருமா என்பது ஐயமாயினும் இழுவிசை காரணிகள் இல்லாத ஒரு பரப்பாக இப்பெரும் பரப்பை கருதிவிடவும் கூடாது என்பதனையும் நான் சொல்லியே ஆகவேண்டும். நீர்வளம் நிறைந்து நிற்கும் எமது பிரதேசத்தில் நன் நீருடன் கூடிய நிலவளம் இப்பரப்பில் தன் பிள்ளைகள் வரவுக்காக காத்துக்கிடக்கிறது.

கலட்டிகளில் குடியிருக்கும் பலர் குடிப்பதற்காக நீருக்கும் ஏங்கும் ஒரு பகுதி நீர்நிறைந்து நிலம் செறிந்து கிடக்கும் இன்னொரு பகுதி இவ் இரண்டுக்கும் இடையில் உள்ள நிலமையை முரண்நிலை Context என அழைப்பார்கள். இது எப்படி நிகழுகிறது என்பதுதான் இங்கு எல்லோருக்குமான கேள்வியாகும். தூர நோக்கோடு வன்னிப்பெரும் பரப்பின் மீது சனத்தொகை உள்நுளைக்கப் படல் வேண்டும். அதனை செய்வதற்கான வாய்ப்பான சூழலை தடுத்து விட்டு வாய்ப்பை பயன்படுத்தும் வேறு யாருக்கும் எதிர்ப்பை மட்டும்தான் காட்டமுடியும் என்பது எமது அறிவீனமாகும். எனவே இழுவிசைக்கான இயங்கு மூலங்களை விரைவாக்குவோம். அதுவே புதிய வன்னியின் எதிர்பார்ப்பாகும்.



02

இயல்வாணன்



# பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம்...

ஸ்..ஸ் என்ற உந்தலோடு ஏவுகணையால் வழிநடத்தப்பட்டு வெண் ணிலா விண்கலம் காற்றைக் கிழித்தபடி பறந்து கொண்டிருந்தது. உள்ளே இருப்பவர்களுக்கு வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாதிருந்தது. உயரத்தை நோக்கிச் செல்வது மட்டும் தெரிந்தது. பாக்கியம் பாட்டிக்கு உள்ளூரப் பயம் தொற்றிக் கொண்டாலும் அதை வெளிக்காட்டாமல் பக்கத்தில் இருந்த யப்பானிய பெண் விஞ்ஞானி ஒபுகியாவைத் திரும்பிப் பார்த்தார். அவர் தனக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த கணனித் திரையில் யப்பானிலுள்ள உறவினர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவரது கணவர் முன்னாலுள்ள திரையில் ஏதோ ஒரு படத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தார். அமெரிக்க வர்த்தகரும் தலையில் ஹெட்போனை மாட்டி யாருடனோ உரையாடிக் கொண்டிருந்தார்.

பாட்டிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கந்தசஸ்டி கவசம் பாடி முடித்து விட்டார். இது போதும். எந்தப் பயமும் ஏற்பட முருகப் பெருமான் விட மாட்டார் எனத் தனக்குள் சொல்லிக் கொண்டார். ஏதாவது கேட்கலாமென்றால் மொழிப் பிரச்சினை. கதைக்கக்கூடிய ஒரே ஆள் வெங்கிட்டுத்தான். அவன் காதினுள் ஹெட்போனை மாட்டியபடி கட்டுப்பாட்டு அறையில் உள்ளவர்களுடன் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

இப்போது யப்பானியப் பெண்மணி தனது உரையாடலை முடித்துக் கொண்டு பாட்டியைப் பார்த்தார். யப்பானிய மொழியில் ஏதோ கேட்டார். உடனேயே சுப்பர் கொம்பியூ ட்டர் அதைத் தமிழில் பாட்டிக்கு மொழி பெயர்த்தது. ஏதோ சிவபெருமான் புண்ணியத்திலை நல்லாயிருக்கிறன் என்றார் பாட்டி. சிவபெருமான் என்பது உங்கள் கடவுளா? என்று கேட்டார் ஒபுகியா. ஓம். அவர் விண்வெளியிலைதான் இருக்கிறார். விண்வெளியிலை கைலாசம் என்றொரு இடம் உள்ளது. இது ஒரு மலை. இங்கைதான் சிவபெருமானும் அவரது மனைவி பார்வதியும் அவரது பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்று சொன்னார் பாக்கியம் பாட்டி. இதைக் கேட்ட ஒபுகியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. எங்களது கடவுள் புத்தர் பூ மியிலேயே வாழ்ந்து மனிதர்களை நல்லபடி நெறிப்படுத்திவிட்டு ஞானம் பெற்றார். ஏன் உங்களது கடவுள் பூ மியில் தனது உயிர்களுடன் வாழாமல் விண்ணில் வாழ்கிறார்? என்று கேட்டாள் ஒபுகியா.

கடவுள் விண்ணில் இருந்து ஒன்பது கிரகங்களையும் கவனித்துக் கொள்கிறார். அத்தோடை ஏழு உலகங்களையும் காத்துக் கொள்கிறார். அது மட்டுமில்லை. அங்கை ஆகாய கங்கை இருக்கிறது. அது எங்கள் கடவுளின் தலையில் இருந்து உற்பத்தியாகிப் பாய்கிறது. அங்கை தேவர்கள் என்ற இனத்தவர் இருக்கி றார்கள். அவர்கள் எங்களை விட மேலானவர்கள் என்று பாட்டி சொல்ல வும் ஒபுகியோ ஆச்சரியத்துடன் நோக்கினாள். இவருடைய மகனா விஞ்ஞானி சத்தியசீலன் என நம்புவது கடினமாக இருந்தது.

பாட்டியோ பெரிய விடயத்தைச் சொன்னதில் ஒபுகியோ மலைத்துப் போய் விட்டார் என்றே நினைத்தார். இன்னும் கன விடயங்கள் இருக் குது ஒபுகியோ. விடிய விடியச் சொல்லலாம் எனப் பீடிகை போட் டார். ஒபுகியோ கதையை மாற்ற வேண்



**"கடவுள் விண்ணில் இருந்து ஒன்பது கிரகங்களையும் கவனித்துக் கொள்கிறார். அத்தோடை ஏழு உலகங்களையும் காத்துக் கொள்கிறார். அது மட்டுமில்லை. அங்கை ஆகாய கங்கை இருக்கிறது. அது எங்கள் கடவுளின் தலையில் இருந்து உற்பத்தியாகிப் பாய்கிறது. அங்கை தேவர்கள் என்ற இனத்தவர் இருக்கி றார்கள். அவர்கள் எங்களை விட மேலானவர்கள்" என்று பாட்டி சொல்லவும் ஒபுகியோ ஆச்சரியத்துடன் நோக்கினாள். இவருடைய மகனா விஞ்ஞானி சத்தியசீலன் என நம்புவது கடினமாக இருந்தது.**

டும் எனத் தீர்மானித்தாள். முன்னா லுள்ள கணனித் திரையை இயக் கினாள். அத்திரையில் வெண்ணிலா விண் கலத்தின் கீழ்ப்பகுதியை நோக்கிய கமராவின் காட்சி தென் பட்டது. கீழ் பகுதியில் இருந்து திரவ எரிவாயு எரிந்து விண்கலம் உந்தப்படும் காட்சி தெரிந்தது. ஐயோ...நெருப்புப் பத்தீட்டுது. பாட்டி அலறினாள். அமெரிக்க வர்த்தகர் ஹெட்போனை எடுத்து விட்டு என்ன நடந்தது என அதிர்ச்சியுடன் நோக்கினார். ஒபுகியோ அமெரிக்க வர்த்தகருக்கு சைகையால் ஒன்று மில்லை எனத் தெரிவித்து விட்டு பாட்டியை அமைதியாக இருக்கும்படி கூறி காரணத்தை விளக்கினாள்.

ஓ..இப்பிடித்தான் எங்கடை ஆக்கள் வாணம் விடுகிறவை. எலி ஆகாசம், முரட்டு ஆகாசம், குருவி வாணம் எண்டு திடலிலை வைத்து ஏவுறவை. அது மேலை போய் வெடிக்கும் என்றார் பாட்டி. ஒபுகி யோவுக்கு ஆகாசம் என்பதை ஆகாயம் என்றும், வாணம் என்பதை வானம் என்றும் சுப்பர் கொம்பியூ ட்டர் மொழிபெயர்த்துக் கொடுத்தது. அதெப்படி வானத்தை ஏவுகிறது? என்று கேட்டாள் ஒபுகியோ.

அது ஒரு பெரிய கலை பிள்ளை. வெடிமருந்தை அம்மியிலை வைத்து அரைத்து, மண்கொட்டுக்குள்ளை அடைஞ்சு சோதினை வாணம் விட்டு...இப்பிடிக் கஸ்டப்பட்டுச் செய்து கோவில் திருவிழாக்களிலை வாணம் விடுவினை என்றார் பாட்டி. இப்போது ஒபுகியோவுக்குப் புரிந்து விட்டது. வாணவேடிக்கைக் கலையைத்தான் இவ்வளவு பீடிகையோடு சொல்கிறார் என்பது புரிந்தது. எங்கள் நாட்டிலும் இப்படிச் செய்வார்கள் என்று சொல்லியபடி கணனித் திரையின் காட்சியை மாற்றினாள்.

இப்போது கணனித் திரையில் நீலமும் பச்சையும் கொண்ட உருண் டையான கிரகமொன்று ஒளியுடன் தெரிந்தது. பாட்டி உடனேயே கையெடுத்துக் கும்பிட்டாள். அப்பு...எம்பெருமானே.. உன்னையும், உனது கைலாயத்தையும் பார்ப்பேனென நான் கனவிலும் எண்ணவில்லை. அதற்கு அருள் கூட்டி விட்டாயே! என்று புலம்பித் தொழுதார். ஒபுகியோ புன்சிரிப்புடன் இதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதுதான் பிள்ளை நான் சொன்ன கைலாசம். இங்கைதான் சிவபெரு மான் இருக்கிறார். இதுக்குக் கிட்டப்போனால் எல்லாந் தெரியும். கடவு ளுடைய அருள் ஒளியைப் பார்த்தீரா? என்று கேட்டார் பாட்டி. ஒபுகியோ புன்னகைத்தாள். இங்கையிருந்துதான் நீங்கள் வருகிறீர்கள். இதுதான் பூ மி தூரத்தில் இருந்து பார்க்கும் போது பூ மி இப்படித்தான் தெரியும். சூரிய ஒளி பட்டு பூ மி ஒளிர்கிறது என்று விளக்கினாள். அப்பிடியே பிள்ளை. பூ மியைப் பார்க்கக் குடுத்து வைச்சிருக்க வேணும். பூ மாதேவியல்லே! என்றார் பாட்டி.

ஒபுகியோ காதில் ஹெட் போனைச் செருகி யாருடனோ கதைக்கத் தொடங்கினாள். பாட் டிக்குச் சலிப்பாக இருந்தது. நித்திரையும் வரவில்லை. தனக்கு முன்னாலிருந்த கணனித்திரைப் பொத்தானை அழுத்தினார். சுற்றி லும் விண்மீன்கள் கண்சிமிட்டி யபடி முன்னே வந்து கொண்டி ருந்தன. இடையிடேயே விண் கற்கள் கருமை நிறத்தில் கடந்து கொண்டிருந்தன. ஒரு விண்கல் வெண்ணிலா விண்கலத்தை அண்மித்து வந்து கொண்டி ருந்தது. அது விண்கலத்தை மோதி விடுமோ எனப் பாட்டி பயந்தாள். ஒபுகியோவை அழைத்து விடயத்தைக் கூறினார். அப்படியொன்றும் நடக்காது. மோதுவதிலிருந்து விண்கலத் தைக் கட்டுப்படுத்தும் பொறி முறை உள்ளது என்று ஒபுகியோ சொன்னாள்.

எவ்வளவு தூரம் வந்து விட் டோம் என அறியப் பாட்டிக்கு ஆவலாக இருந்தது. திரும்பி ஒபுகியாவிடம் கேட்டார். அவளோ எரிச்சலுடன் பாட்டி யைத் திரும்பிப் பார்த்தாள். 360 கிலோ மீற்றர் தூரத்துக்கு வந்து விட் டதாக தெரிவித்தாள். அந்த நேரத் தில்தான் சடுதியாக வெடிப்புப் போன்ற தொரு சத்தம் கேட்டது. வெண்ணிலா விண்கலம் குலுங் கியது. பாட்டி பயத்தில் ஒபுகி யோவின் கையைப் பிடித்தார்.

**(வளரும்)**



கு.றஜீவன்

# யுத்தத்திற்குப் பின்னரான வன்னிப் படைப்பாளிகளின் இயங்குநிலை

**நீண்ட** நெடிய யுத்தம் வாழ்வின் அனைத்து இயங்கியலையும் பாதித்திருக்கிறது. குறிப்பாக இறுதி யுத்தத்திற்கு முகம் கொடுத்த வன்னிப் பிரதேச மக்கள் அல்லது யுத்தத்திற்குள் அகப்பட்ட மக்களின் அகபுற வாழ்வியலில் பெரும் மாற்றத்தினை உண்டுபண்ணியிருக்கிறது. இந்த களமாற்றமும், தள மாற்றமும் இப்பிரதேசத்தில் இருந்து வெளிவருகின்ற ஆக்க இலக்கிய படைப்புக்களில் வெகு பாதிப்பினைச் செலுத்திவருகின்றது.

இலக்கியம் என்பது புவிசார் அமைப்பியலுக்கு ஏற்றவாறு முகிழ்வது. இதில் கலைத்துவத்தின் வெளிப்பாடும்,தனிமனித உணர்வு நிலையும், இனத்துவ ஆதிக்கமும் காணப்படும். இவற்றில் கலைத்துவ வெளிப்பாடு பொதுத்தளத்தில் இருந்து கட்டமைக்கப்படும்போதுதான் உண்மையான இலக்கியப் படைப்பினை ஒரு படைப்பாளியினால் வெளிக்கொணர முடியும்.




அந்த வகையில் கரைச்சி பிரதேசத்தில் இருந்து வெளிவருகின்ற படைப்புக்கள் மூலம் இப்பிரதேச படைப்பாளிகளது இயங்குநிலையினை நோக்கினால் இனத்துவ அடித்தளத்தில் கட்டமைக்கப்படுகின்ற கருத்தியலுக்கூடான குழுநிலைச் சித்தாந்தங்கள் இவர்களது படைப்புக்களில் அதிகம் இடம்பெற்று வருகிறது.

யுத்தத்திற்கு முன்னரான படைப்பு வெளியும் யுத்தத்திற்கு பின்னரான படைப்பு வெளியும் மாற்றமடைந்திருக்கின்றது. சார்புநிலை கருத்தியல் தளத்தில் இருந்து இலக்கியத்தினை பொதுத்தளத்திற்கு நகர்த்த வேண்டிய

இத்தருணத்தில் இவர்களின் இயங்குநிலையானது புதிய புதிய கருத்தியல் சித்தாந்தங்களையும் சிந்தனைகளையும் கட்டவிழ்ப்பதாகவே இவர்களது படைப்புக்களில் காணமுடிகிறது.

இனத்துவ அடையாளத்தில் இருந்து கட்டமைகிற ஈழத்து இலக்கிய வெளி இனத்தின் அடையாளத்தையும் இருப்பையும் உறுதி செய்யும் முயற்சியிலும், அவலங்களை பாடுவதிலும், அவல மீட்சி பெறுவதிலுமேயே தனது இலக்கிய இயங்கியலை அமைத்துக் கொண்டது. இது படைப்பின் பொதுத்தளத்தில் இருந்து சார்புநிலை இலக்கிய வகைமைக்குள் இட்டுச் சென்றிருக்கிறது. படைப்பின் பொதுப்புத்தி வெளிப்பாடும் கலைத்துவமும் குன்றிப்போயிருக்கின்ற ஒரு இலக்கிய முயற்சிக்கான புதிய சூழலில் வெளிவருகின்ற இப்பிரதேச படைப்புக்கள் தமக்கான இயங்கியலை மாற்றியமைத்துக் கொள்ளாது தமது நிலைப்பாடு மீது புதிய புதிய வண்ணங்களையே பூசிச் செல்கின்றது.


மிகைவெளிப்பாட்டு உத்திகளை கையாள்வதன் மூலம் படைப்புக்கான இயங்கியலையும் தமது கருத்தோட்டங்களையும் புதிய திசையில் நகர்த்திச் செல்வதான எண்ணப்பாங்கில் இவர்களது ஒவ்வொரு படைப்பு முகமும் வெளிப்படுகிறது. மீண்டும் மீண்டும் சார்புநிலை கருத்தியலை முதன்மைப்படுத்துகின்ற பாங்கில் அழகியல், வலி, ஏக்கம், பழமை நினைவு கூரல் போன்ற உணர்வோட்டங்களையே தமது படைப்புக்கான இயங்கியலாக கட்டமைத்திருக்கிறார்கள். இது ஆரோக்கியமானதல்ல.



படைப்புவெளி குறுக்கப்பட்டு படைப்புக்கான கலைத்துவம் பொய்மையாகவே படைப்புக்களில் பூசப்படுவதான இலக்கிய முயற்சிகளே பெரிதும் நடக்கின்றன. யுத்தத்திற்கு பின்னரான படைப்புச் சூழலமைவு புதிய தளத்திற்கான மாற்றத்தினை உண்டு பண்ணியிருக்கிறது. இந்த வெளியினை வெறும் அரசியல் கருத்தோட்டங்களால் நிறைத்து படைப்புக்கலையின் தார்மீகத்தை உடைத்தெறிவதான படைப்புச் சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்கில் மாற்றம் ஏற்பட்டு இப்பிரதேச படைப்பாளிகள் பொதுத்தளத்தில் இருந்து கலைத்துவ நோக்கில் இனத்துவ அடையாளங்களை உறுதிப்படுத்துவதான படைப்புக்களை வெளிக்கொணர வேண்டும். அப்போதுதான் சார்புநிலை படைப்பாக்க முயற்சியில் இருந்து இலக்கியம் தப்பித்துக் கொள்ளும்.

**இலக்கியம் என்பது புவிசார் அமைப்பியலுக்கு ஏற்றவாறு முகிழ்வது. இதில் கலைத்துவத்தின் வெளிப்பாடும்,தனிமனித உணர்வுநிலையும்,இனத்துவ ஆதிக்கமும் காணப்படும். இவற்றில் கலைத்துவ வெளிப்பாடு பொதுத்தளத்தில் இருந்து கட்டமைக்கப்படும் போதுதான் உண்மையான இலக்கியப்படைப்பினை ஒரு படைப்பாளியினால் வெளிக்கொணரமுடியும்.**

**நவரத்தினம் சதீஸ்**



# நேர்முகத் தேர்வுக்கு செல்கின்றீர்களா...?

நம்மில் உள்ள பெரும்பாலானவர்களுக்கு சிறப்பாக பணிபுரிவதற்கான திறன் இருந்தும், நேர்முகத் தேர்வு என்றாலே பலருக்கு உதறல் எடுக்க ஆரம்பித்து விடுகிறது.

என்னதான் தகுதி, திறமை மற்றும் அனுபவம் போன்றவை இருந்தாலும், நேர்காணல்களில் பங்கு கொள்ளும்போது தேவையற்ற பயம், பதற்றம், முன்கூட்டியே திட்டமிடாமை போன்ற சிக்கல்களில் சிக்கி பல இளைஞர், யுவதிகள் தவிக்கிறார்கள்.

இதனால் நேர்முகத் தேர்வாளரின் மனதில், நம்மை பற்றிய ஒரு

**நேர்முகத்தேர்வுக்கு செல்லும் போது உங்களின் சுயவிபர விண் ணப்பத்துடன், உங்களின் சான்றி தழ்களை எடுத்துச் செல்லவும். உங்கள் சுயவிபர விண்ணப்பத்தில் ஏதேனும் எழுத்துப் பிழை அல்லது இலக்கண பிழை உள்ளதா என்பதை சரிபார்ப்பதோடு உங்களின் சுயவிபர விண்ணப்ப த்தில் என்னென்ன விபரங்கள் உள்ளன என்பது முதலில் உங்களுக்கு தெளிவாக தெரிந்திருக்க வேண்டும்.**

எதிர்மறை எண்ணம் ஏற்பட்டு, நாம் நமது வாய்ப்பை இழந்து விடுகிறோம். நம்முடைய பெரிய எதிர்பார்ப்பானது, 10-20 நிமிடங்கள் வரை மட்டுமே நீடிக்கும். ஒரு சிறிய நிகழ்வில் நொருங்கிப் போவது நம்மை நம்பிக்கை இழக்கச் செய்கிறது.

ஒரு நேர்முகத் தேர்வில் எவ்வாறு பங்குபற்றி அதை வெற்றி கரமானதாக ஆக்கி, நமக்கான பணியை பெறுவது என்பதைப் பற்றிய சில ஆலோசனைகள் இங்கே...

**அடிப்படையானவை:**

நேர்முகத் தேர்வுக்கு செல்லும் போது அலுவல் ரீதியான உடை அணியவும். குறித்த நேரத்தில் சென்று விடவும். நேர்முகத்தேர்வு அதிகாரி உங்களிடம் நல்ல நட்பு முறையில் பேசினாலும்கூட, அதனால் நீங்கள் அதிக உரிமை எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்களிடம் தனிப்பட்ட கேள்வியோ அல்லது அவர்களை வாழ்த்தியோ எதுவும் பேச வேண்டாம். உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களையும் கவனத்துடன் அதேசமயம் அளவுடன் கூறவும்.

உங்கள் கையடக்கத் தொலைபேசியை நிறுத்தி வைத்துவிட்டு முழுக் கவனத்தையும் நேர்முகத்தேர்வில் செலுத்துவதோடு, அச்சமயத்தில் இங்கும் - அங்கும் பார்ப்பதை தவிர்க்கவும். மேலும் உங்கள் நேர்முகத்தேர்வு அதிகாரி, உங்களிடம் ஏதேனும் பேசிக்கொண்டிருக்கும்போதே நீங்கள் குறுக்கே பேசுவதை தவிர்க்கவும்.



நேர்முகத்தேர்வுக்கு செல்லும் போது உங்களின் சுயவிபர விண் ணப்பத்துடன், உங்களின் சான்றி தழ்களை எடுத்துச் செல்லவும். உங்கள் சுயவிபர விண்ணப்பத்தில் ஏதேனும் எழுத்துப் பிழை அல்லது இலக்கண பிழை உள்ளதா என்பதை சரிபார்ப்பதோடு, உங்களின் சுயவிபர விண்ணப்ப த்தில் என்னென்ன விபரங்கள் உள்ளன என்பது முதலில் உங்களுக்கு தெளிவாக தெரிந்திருக்க வேண்டும்.

**தயாராக இருத்தல்:**

நீங்கள் விண்ணப்பிக்கும் வேலை, நிறுவனம் போன்றவை பற்றி அதிக விபரங்களை தெரிந்து வைத்திருக்கவும். மேலும், நீங்கள் ஏன் உங்களின் முந்தைய பணியிலிருந்து விலகினீர்கள்? ஏன் இந்த பணிக்கு விண்ணப்பித்தீர்கள்? இந்த வேலையில் உங்களின் எதிர்பார்ப்பு என்ன? போன்ற கேள்விகளுக்கு எவ்வாறு பதில் சொல்வது என்று முன்பே தயாராகிக் கொள்ளவும். ஏனெனில் இத்தகைய கேள்விகளுக்கு நீங்கள் அளிக்கும் பதில்களின் மூலமாகத்தான் உங்களின் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை நேர்முகத் தேர்வாளர்கள் மதிப்பிடுவார்கள். நேர்முகத் தேர்வுக்கு முன்பாக உங்களின் சுயவிபர விண்ணப் பத்தை மீண்டும் ஒருமுறை நன்கு படிக்கவும். இதன்மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கு உங்களின் சுயவிபர விண்ணப்பத்தை ஒட்டிய பொருத்தமான பதில்கள் அளிப்பதை உறுதிசெய்ய முடிவதுடன், நேர்முகத்தேர்வு குழுவையும் திருப்தி செய்ய முடியும். (42ம் பக்கம் பார்க்க)



Digital Mind
Total Digital Printing Solution
NO:63A, STATION ROAD, KILINOCHCHI TEL: 021 2283747
வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட
கிறேனேற் கற்களில் தரமான நினைவுக்
கல்வெட்டுக்கள், வெள்ளி
தங்கநிற மற்றும் அக்றைலிக்
ஞாபகச் சின்னங்கள்
மற்றும் வெள்ளி
பித்தளை பெயர்ப் பலகைகள்,
அத்தோடு எம்போசிங் பெயர்ப்
பலகைகள் என்பன
கிளிநொச்சி நகரில் தற்போது
எம்மிடம் கிடைக்கின்றது.
சிறந்த
தரத்தில்
குறைந்த
விலையில்
LARSEN
IAN LYALL
JEAN MARGARET
LAWRENCE
Digital Mind டிஜிடல் மைன்ட் ඩිජිටල් මෛන්ඩ්
இல:63A, புகையிரத நிலைய வீதி, (யாழ் தாமரை உணவகம் அருகாமை,) கிளிநொச்சி. TP: 021 2283747

# கிளிநொச்சி நகரில் .....

- உயர்தர கலர் போட்டோக்கொப்பி High Quality Colour Photo Copy
- உயர்தர கலர் பிறிண்ட் High Quality Colour Print
- லெமினேற்றிங் Laminating
- பக்ஸ் அனுப்புதல் Fax
- ஈமெயில் அனுப்புதல் E.mail
- இணையப் பாவனை Net Browsing
- முகம்பார்த்து கதைத்தல் Skype
- ஸ்கானிங் Scanning
- சீடி றைற்றிங் CD Writing
- கணினி தட்டச்சு, பக்க வடிவமைப்பு Computer Typing, Page Setup
- வாழ்த்து மடல்கள் வடிவமைப்பு Greeting Cards Designing





- விசிற்றிங்காட், சான்றிதழ்கள், அழைப்பிதழ்கள் வடிவமைப்பு Visiting Cards, certificates, Invitation Creating
- புத்தகம் கட்டுதல் Book Binding
- பாடசாலை மாணவர்களுக்கான செயற்திட்டங்கள், அட்டைப்படம் வடிவமைத்தல்





skype

# Maxico
# மக்சிகோ

All Kind OF Computer Printing Work & Net Browsing

சகல விதமான கணினி பிறிண்டிங் வேலைகள், இணையத்தள பாவனை.

Opp - To Kachcheri, A9 Road, Kilinochchi. கச்சேரி முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.
Phone & Fax : 0212285608. E.mail: maxico5608@hotmail.com